www.padippakam.com

JUDE

பக்கம் 20

Registered as a News Paper in Sri Lanka

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

மே 31–ஜூன் 06,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 259

## தொடரப்போகும் வேட்டை

## குறி வைத்தாச்சு



## திராவிடர் கழகத்தில் கமல்!



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தாழியை உடைக்க

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

அரசின் தீர்வுப் பொதி
பொறி என்பது
உள்ளங்கை நெல்லிக்கனி!
காலவரையறைகள் யாவும்
கானல் நீராகிவிட்டன!
அரசின் ஆரவாரங்களை
முதலில் நம்பியது
வெளியுலகம்!
இப்போது வெளியுலகமும்
அவநம்பிக்கை கொள்ள
ஆரம்பிக்கிறது!
'இலங்கைத் தீவுக்குள்ளேயே
தீர்க்கப்படக்கூடிய
பிரச்சனையல்ல இது'
என்பதை வெளியுலகம்
விளங்கிக் கொள்ள
தொடங்கியுள்ளது!
ஒலரா ஒட்டுணு முதல்
தென்னாபிரிக்கத் தூதர்வரை
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
பற்றி பேசியுள்ளனர்!
பாலஸ்தீன பிரச்சனை
தென்னாபிரிக்க பிரச்சனை
போன்றவற்றில்
சர்வதேச நிர்ப்பந்தங்கள்
பிரதான பங்கு வகித்தன!
இங்குள்ள இனப்பிரச்சனையும்
அப்பிரச்சனைகளுக்கு
சற்றும் குறைந்ததல்ல!
நியாயத்திலும், தியாகத்திலும்
பாலஸ்தீனத்தையோ
தென்னாபிரிக்காவையோவிட
எவ்வகையிலும் தாழ்ந்ததுமல்ல!
ஒரு காலத்தில்
உலகப் போராட்டங்கள்
இங்குள்ள தமிழ்பேசும் தரப்புக்கு
உதாரணமாக இருந்தன.
இன்று, உலகுக்கே
முன்னுதாரணமாக
தமிழ்பேசும் தரப்பின்
போராட்டம் மாறியுள்ளது!
இந்த உண்மையை
உலகம் படிப்படியாக
அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளது!
அதனால்தான் இங்குவரும்
வெளிநாட்டுத் தூதர்கள்
இனப்பிரச்சனை பற்றி
ஒரு வார்த்தையாவது
கூறியாகவேண்டியுள்ளது!
புன்னகையோடும், மென்மையாகவும்
ஜனாதிபதி சந்திரிக்கா
வழங்கிய சமாதான வாக்குறுதிகள்
வசீகரத்தை இழந்து வருகின்றன!
பிரச்சனை தீர்க்கப்படவேண்டும்
என்றுமட்டும் கூறிய
சர்வதேச சமூகம்
பிரச்சனையை எப்படித்
தீர்ப்பது என்பதையும்
எடுத்துக்கூற தொடங்கியுள்ளது!
அந்த வழிதான்
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்!
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
என்ற வெண்ணெய்
திரளத் தொடங்கியிருப்பது
ஆளும் தரப்பு
எதிரணி இரண்டுக்கும்
பிடித்தமில்லாத விஷயங்கள்!
அதனால், தாழியை
உடைக்க ஒரு நாடகம்
அரங்கேற்ற நினைக்கிறார்கள்!
ஜனாதிபதி சந்திரிக்காவும்
எதிரணி ரணிலாரும்
சந்தித்துப் பேசவுள்ளார்களாம்!
உள்நாட்டுக்குள்ளேயே
உடன்பாடு வரப்போகிறது
என்று உலகை நம்பவைக்கவே
இந்த நாடகம்!
ஆளும் தரப்பின்
தாளத்துக்கு ஏற்ப
ஆடும் தமிழ்க் கட்சிகளும்
இந்த நாடகங்களில்
துணைப்பாத்திரங்கள்!
ஜனாதிபதி சந்திரிக்காவும்
ரணிலாரும்
சந்தித்தால் என்ன
சந்திக்காவிட்டாலென்ன,
இவ்வாறான செய்திகளின் நோக்கம்
தாழியை உடைப்பதே!
ஒருபோதும்
ஆளும் தரப்பும், எதிரணியும்
தாமாக முன்வந்து
அரசியல் தீர்வுக்கு
ஒத்துழைக்கப்போவதில்லை!
எனவே, வெண்ணெய் திரள்கையில்
தாழியை உடைக்கும்
தந்திரோபாயங்களையிட்டு
விழிப்பாக இருப்பதும்,
அவற்றை அம்பலமாக்குவதுமே
தமிழ்பேசும் தரப்பின்
நலன்களுக்கு உகந்தவை!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## சுகந்தரும் சூரிய வழிபாடு

சக்தி, திறமை, வீர்யம் இவற்றை சகல ஜீவராசிகளுக்கும் வழங்கி என்றும் மாறா இளமையுடன் திகழ்வது சூரியன். சூரிய வழிபாடு கர்ம வினைகளையும், நாகதோஷம் முதலியவற்றையும் பிற சோதிடரீதியான தோஷங்களையும் நீக்கும்.

சூரிய வழிபாடு கண்பார்வை விருத்திக்கும். இரத்த விருத்திக்கும் உகந்ததென விஞ்ஞானம் நிரூபிக்கிறது. உடலில் சூரிய ஒளி படுவதால் இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு ஆயுள், ஆரோக்கியம் கூடும். விட்டமின் "டி" சூரியனின் புற ஊதாக் கதிரில் உண்டு. இதனால்தான் சூரியக் குளிப்பு செய்கின்றனர் மேல் நாட்டவர்.

குழந்தை பிறந்தபின் ஜாதகர்மம், நாம கரணம் என்பவற்றின்போது உப நிஷ்க்ரமணம் என்ற கிரியையில் குழந்தையை சூரிய வெளிச்சம் படும்படி முதன் முதல் வீட்டுக்கு வெளியே கொண்டு வருதல் உண்டு. உடல் முழுவதும் நல்லெண்ணெய் பூசி வெற்றுடம்புடன் இள வெய்யிலில் கிடத்துதலும் குறிப்பிடத்தக்கது.

('சைவ விரதங்களும் விழாக்களும் நூலிலிருந்து...')

தொகுத்தவர்: அ. அரசரெத்தினம், சேனையூர்-06.



## கொலை செய்வது பாவம்

தாம் பெற்றிடும் செல்வங்களிலெல்லாம் பிள்ளைச் செல்வமே சிறந்த மேலான செல்வமென்று கருதும் பெற்றோர், தங்களுக்கிடையே உருவான பிள்ளையின் கருவை வறுமையினாலும், வேறு நிலையிலும் தாயின் வயிற்றிலேயே அழித்தொழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் கொலை செய்த கொடிய பாவத்தில் தம்மை மூழ்கடித்து விடுகிறார்கள். இதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது!

'மனிதர்களே! நீங்கள் தரித்திரத்திற்குப் பயந்து உங்கள் குழந்தைகளை கொலை செய்து விடாதீர்கள். நாம் அவர்களுக்கும் உங்களுக்கும் உணவளிப்போம். அவர்களைக் கொலை செய்வது பெரும் பாவமாகும்.' (அல் குர் ஆன்)

'விசுவாசிகளே! நீங்கள் திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற்றுப் பெருகி வாழுங்கள். ஏனெனில் நீங்கள் மறுமை நாளில் மற்ற நபிமார்களின் உம்மத்துக்களிடம் உங்கள் பெருக்கத்தைக் காட்டி பெருமை பேசுவேன். அல்லாஹ் பொறுப்பேற்காத யாதொரு ஜீவராசியும் பூமியிலில்லை. மனிதனைப் படைப்பதற்கு ஐம்பதினாயிரம் வருடங்களுக்கு முன்பே அவனின் றிஸ்க் (இரணம்) படைக்கப்பட்டுவிட்டது. மறுமை நாளில் மனிதர்களுக்கிடையில் கொலையைப் பற்றித்தான் முதன்முதலாக தீர்வு வழங்கப்படும்.' (அல் ஹதீஸ்)

('இஸ்லாமிய அறிவுப் பேழை' என்ற நூலிலிருந்து...)

தொகுப்பு: வை. எம். தாஹிர்கரீம்-கல்முனை-06

## கவிதைப் போட்டி இல.256

### பரிசுக்குரிய கவிதை

**இது?**

எத்தனை உயிர்....
எத்தனை ஷெல்....
எத்தனை ரவை....
அத்தனையும் விழுங்கிய
பாதை இதுவோ?

என். கருணாகரன்-
வத்தளை.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



**ஜயசிக்குறுய்**
பாதை இங்கே
படைகள் எங்கே?
வி. உதிஸ்ரன்-
யாழ்-பல்கலைக்கழகம்.

**யுத்தமின்றி**
பாதைதிறப்பென்று
பலவுயிரைப் பலிகொடுக்கும்
பரிதாபதேசமதில்,
யுத்தமின்றி இரத்தமின்றி,
வித்தியாசமானதொரு
வீதித்திறப்பிதுவோ?
ஆரையம்பதி- இதயம்.

**ஹைக்கூ**
பாதை
தெரிகிறது
பயணம்
சுலபமல்ல-
ஜயசிக்குறுய்!
வி. சுகுமார
வவுனியா

**வெற்றி நிச்சயம்!**
இது..
வன்னி-யாழ்
பாதையல்ல..
தோல்வி இல்லை
வெற்றி நிச்சயம்!
கயல் வண்ணன்- வவுனியா.

**உதாரணம்**
நேரான பாதைகளில்
எவருக்குமே பிரியமில்லை!
வரலாற்று உதாரணமாய்
வளைந்ததுவே இப்பாதை!
கவிஞன் 'திக்கவயல்'- மன்னார்.

**ஆழம்**
அகண்ட பாதைதான்
ஆழமறியாமல்
காலை விடாதே!
ஆண்டுகளாகும்
காலை விடுவிக்க!
எம். இஸ்மாயில்-புத்தளம்.

**பயணம்**
தொடரான யுத்தத்தில்
நிழலில்லாத
நெஞ்சங்கள் இரண்டின்
முடியாத பயணங்கள்!
தெ. லோஜனா-கொழும்பு-15.

**பாதை?!**
நடந்து வந்த பாதையிலே
நன்மை கிடைக்கவில்லை?
நடக்க இருக்கும் பாதையிலே
நம்பிக்கையே தெரியவில்லை!
டீ. ஜோர்ஜ்-லபுகலை.

**சமாதானப் பாதை**
எமக்கு
வேண்டுவது..
தரை வழிப்
பாதையல்ல;
சமாதானப்பாதை!
சி. சாமிதா- வவுனியா.

**(நுன்) நம்பிக்கை**
பாஸ் எடுக்கத் தேவையில்லை;
அடையாள அட்டையும்
அடைய வேண்டியதில்லை!
'தப்பிவிட்டோம்' என்ற நினைப்போ?
வடிவாய்த் திரும்பிப்பார்-
களுத்துறைச் சிறைச்சாலை!
முல்லையூர் மயில்ஞானன்-முல்லைத்தீவு


**இடம் பெயர்வு**
ஷெல்லடி
தாங்காமல்,
மலையடி
நாடி வந்தோம்!
பூண்டுலோயா வில்லியம்.

**இங்கே**
இரத்த ஆறும்
இங்கே தான்!
உரத்த போரும்
இங்கே தான்!
எஸ். யாழினி- வெள்ளவத்தை.

**யாழ்சேவை...**
பதற்றமில்லாமல் நட!
பழுதடைந்த பஸ்தானே,
பக்கத்தில்தான் நிற்கும்!
வே. ஞானகுமார்-சாமிமலை.

**எது?**
எடிபலவா?
ஜயசிக்குறுவா?
கே. பவானி-மட்டக்களப்பு

## கவிதைப் போட்டி இல.259



(படப்பிடிப்பு:- கொட்டராமுல்லை :. பாருக்)

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 06.06.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.259, தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



## அடுத்த துரையப்பா

முரசே!

அவசரமாக எழுதும் மடல் இது. உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் உனது அரசியல் அலசலில், "அடுத்த துரையப்பா யார்?" என்று கேள்வி எழுப்பி இருந்தாய். வோட்டுக்களும், வேட்டுக்களும் பற்றியும் முன்கூட்டியே எச்சரித்திருந்தாய்! இன்று யாவுமே நிதர்சனமாகின்றன. தமிழ்க் கட்சிகளின் பயனற்ற தேர்தல் முயற்சியால் அநியாயமான உயிரிழப்புக்கள் ஏற்படுவதை நினைத்தால் வேதனையாக உள்ளது.

இ. பாலராஜ், திருநெல்வேலி.

## யார் ஐயா இந்த நாராயணன்?

இந்தியாவில் எங்கோ மூலையில் கிடந்த சூரிய நாராயணனுக்கு யாழ்ப்பாண நிர்வாகம் எப்படி ஐயா தெரிந்தது? சிவில் நிர்வாகம் நடக்கிறதாமே. பிரிகேடியரின் அனுமதியின்றி எந்த நியமனமும் கிடையாதே. இதுதானோ சிவில் நிர்வாகம்? தமிழ்க் கட்சிகளுக்கு பழைய பஸ்களைக் கொண்டு வரவும் பழைய பாலங்களுக்கு முட்டுக்கொடுக்கவும்தான் உதவும். முறையான காரியம் எதையும் செய்ய முதுகெலும்பு இல்லையே. நமோ நாராயணா!

தமிழினியன்-மண்டூர்.

## இன்னுமொரு ஜயசிக்குறுய்

'இன்னுமொரு ஜயசிக்குறுய்' என்று 'எக்ஸ்ரே ரிப்போர்ட்டில்' யாழ் மினித் தேர்தலை விபரித்திருந்ததை, மீண்டும் புரட்டிப் பார்த்தேன். 'தமிழ்க் கட்சிகள் தங்கள் உறுப்பினர்களை அரசின் நலனுக்காக பலிகொடுக்கப்போகின்றன. அதேசமயத்தில் அதனை வைத்து புலிகளுக்கு எதிராக பிரசாரம் செய்யவும் அரசு முற்படும்' என்ற அர்த்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமீபத்திய சம்பவமும், மேயரைப் பாதுகாக்க தவறிவிட்டு, அவர் பலியானதை தமக்கு சாதகமாக பிரசாரப் படுத்திய அரசின் தந்திரமும், எக்ஸ்ரே கணிப்பை துல்லியமாக்கிவிட்டது.

மா. ஜெயரூபன்; கொழும்பு-11.

## இவர்தள் நினைத்தனரா?

அன்பு முரசே!

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் படுகொலை விசனத்திற்கு உரியதேயாகும். ஆயினும் தம்மில் ஆண்களும், பெண்களுமாய் பல ஆயிரம் பலிகொடுத்து புலிகள் செயற்பட்டு வருகின்றனர். அந்த மனித இழப்புக்களைப் பற்றியும், ஏமாற்றுத் தேர்தல்களால், கடந்த கால இழப்புக்களது பயன் விரயமாகி வருவதையும் தமிழ்க் கட்சிகளோ, அவசரமாக அரசியலில் புகுந்து மாநகர முதல்வரான திருமதி யோகேஸ்வரனோ கிஞ்சிற்றும் யோசித்துப் பார்த்தனரா, என்பதையும் நோக்கவேண்டும். புலிகளை நியாயப்படுத்துவது என் நோக்கமல்ல. ஆயினும் போராடி பலியான தங்கள் சகோதர, சகோதரிகள் பலியாவதை வைத்து பதவிதேடும் கட்சிகளின் நடவடிக்கைகளும் நியாயமல்ல.

கோ. இராசையா, கொழும்பு-06.

## பலி ஆடு

அன்பு முரசே! வணக்கம்!

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரின் மரணம் அநியாய இழப்புத்தான். பலிக்களம் செல்லும் ஆட்டை அலங்கரிப்பது போன்று, அந்தப் பெண்மணியை பதவி ஆசைகாட்டி படுகளத்தில் தள்ளிவிட்டனர் கூட்டணித் தலைவர்கள். சந்தர்ப்பவாத அரசியல் கொள்கைகளை மட்டுமல்ல, ஆட்களையும் பலிகொடுக்கத் தயங்காது.

கே. ரவிமாறன், வவுனியா.

## சீண்டிவிட்டவர் 'தலைவர்'தான்

யாழ் மாநகர முதல்வர் கொலையில் முரசின் கருத்து என்னவோ நானறியேன். ஆனால், கொலைக்கான முழுப் பொறுப்பையும் கூட்டணியே ஏற்க வேண்டும். கொழும்பில் பலத்த அரச பாதுகாப்பில் இருக்கும் கூட்டணித் தலைவர், "யாழ் தேர்தலில் ஆயுத அமைப்புக்களுக்கு மக்கள் எதிர்ப்பு காட்டியுள்ளனர்!" என்று கூறியிருந்தார். இது வேண்டுமென்றே சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது போன்ற செயலாகும். அப்படிச் சீண்டியவர் மேயரின் பாதுகாப்புக்கு என்ன ஏற்பாடு செய்தார்? தலைநகரில் முன்னாலும், பின்னாலும் பாதுகாப்புடன் நடமாடும் இவர்கள், யாழ்ப்பாணத்தில் தமது உறுப்பினர்களது பாதுகாப்பில் காட்டிய கரிசனம் என்ன? மறுத்தால்கூட வற்புறுத்தி பாதுகாப்பு வழங்கியிருக்க வேண்டாமா?

செ. ஜோசப், திருமலை

## மெய்யான நிகழ்வுகள்

இந்தியா அணுக்குண்டு செய்ததை அமெரிக்கா கண்டிப்பது, 'நான் ஆயுதபாணியாக நிற்பேன்; நீ மட்டும் நிராயுதபாணியாக நில்!' என்று கூறுவது போன்றதே. அமெரிக்க, இந்திய உறவுகள் வெளிப்பார்வைக்கு இனிப்பாகத் தெரியும். உள்ளே கசப்பு இருக்கும் என்பதை எப்போதோ 'முரசு' படித்துப் படித்துக் கூறியது. இன்று அது மெய்ப்பிக்கப்பட்டு விட்டது மட்டுமல்லாமல், அமெரிக்காவின் இந்திய விரோதப் போக்கும்-முரசு கூறியதுபோல அம்பலமாகியிருக்கிறது.

இ. தாமோதரன், மட்டக்களப்பு

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

# போர் முனைகளில் அமெரிக்க அதிகாரிகள்
# இராணுவத் தளபதிகளுடன் ஆலோசனை!

## புலிகள் இயக்கம் குற்றச்சாட்டு

இலங்கைத்தீவில் அமெரிக்க தலையீடு குறித்து, இலங்கை அரசுக்கு அதன் ஆதரவு குறித்தும் முதன்முறையாக புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கை அரசுக்கு அமெரிக்காவின் உதவிகள் அதிகமாகி வருவதையடுத்தும், அரசின் தீர்வு யோசனைகளை ஏற்குமாறு தமிழ்த் தரப்பை அமெரிக்கா வலியுறுத்து வதை அடுத்துமே புலிகளது கண்டனம் வெளியாகியுள்ளது.

புலிகள் அமைப்பின் உத்தியோகபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் மேற்கண்ட கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"அமெரிக்க அரசின் உயர்நிலை அரசியல் அதிகாரிகளும், இராணுவ அதிகாரிகளும், அமெரிக்க சிறப்பு படைப்பிரிவுகளின் பயிற்சி நிபுணர்களும் அடிக்கடி கொழும்புக்கும் கள முனைகளுக்கும் பயணம் செய்கின்றனர்.

வடக்கு-கிழக்கு போர்முனைகளில் உள்ள படைமுகாம்களில் தங்கி நின்று சிறீலங்கா இராணுவப் படைத் தளபதிகளுடன் சந்திப் புக்களையும் கலந்தாலோசனைகளையும் நடத்தி வருகின்றனர்.

புலிகளது மோட்டார் மற்றும் ஆட்டி லெறிகளை அழிப்பதற்காக, அவற்றின் ஏவு தளங்களை இனம்காண முயலும் நவீன வேவுச் சாதனங்களையும் அதற்கான பயிற்சி யாளர்களையும் அமெரிக்கா இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளது.

மொத்தத்தில் சிறிலங்கா அரசின் படை பலத்தை பலப்படுத்துவதிலும், இலங்கையின் இனப்போரில் தனது இராணுவத் தலை யீட்டை அதிகரிப்பதிலும் அமெரிக்க அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

**இரகசிய சந்திப்பு**

இலங்கைத் தீவு அமைந்துள்ள தென்னா சியப் பிராந்தியத்தில் தனது தேசிய நலன் களைப் பேணுவதற்காக அமெரிக்க அரசு நியமித்துள்ள மூக்கிய அதிகாரிகள் அடிக்கடி கொழும்பு சென்று சிறீலங்கா ஆட்சியாளருடன் இரகசியப் பேச்சுக்களை நடத்திச் செல்வதும் கடந்த சில வருடங்களாக அதிகரித்துள்ளது.

மிக அண்மையில் அமெரிக்க வெளிவிவ கார அமைச்சின் தென்னாசிய விவகாரங் களுக்கான துணை அமைச்சர் கால் இன்ட புத், அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் தென்னாசிய விவகாரங்களுக்கான மூத்த பணிப்பாளர் புருஸ்ரைவில் ஆகியோருடன், ஐ.நா. சபைக்கான அமெரிக்கத் தூதர் பில் றிச்சார்ற்சனும் கொழும்பு சென்று சந்திரிக்கா வையும் அவரது பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியுள்ளனர்.


தென்னாசியப் பிராந்தியத்தில் தனது வல்லாதிக்க நலன்களை பேணவேண்டும் என்றால், சிறீலங்கா அரசின் ஒற்றையாட்சி இரும்புப் பிடிக்குள் இலங்கைத் தீவு முழுவதும் இருக்கவேண்டும் என்று அமெரிக்கா விரும்பு கிறது. அதனால்தான் தமிழரின் விடுதலைப் போரை இராணுவரீதியாக ஒடுக்கவும், ஒற்றையாட்சியை பாதுகாக்கவும் தேவையான சகலவிதமான உதவிகளையும் சிறீலங்கா அரசுக்கு நல்கி வருகிறது." என்று புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அமெரிக்க நிர்வாகம், தான் தயாரித்த பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகள் இயக்கத்தையும் இணைத்து, சிறிலங்கா அரசின் போர் முயற்சிக்கு அரசியல் தார்மீக ஆதரவை வழங்கியுள்ளது. அதன்மூலம் சிறிலங்கா அரசை தன்வசப்படுத்தியுள்ளது" என்றும் புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# முகாம்கள் மத்தியில் திடீர் தாக்குதல்
# பதினாலு புலிகள் பலி!
## பதிலடிக்குத் தயாராகிறார்கள்

**செ**ங்கலடியில் 24.05.98 அன்று அதிரடித் தாக்குதல் ஒன்றை புலிகள் மேற்கொண்டனர்.

செங்கலடி பதுளை வீதியில் உள்ள படையின ரின் சோதனை முகாமும், அதன் எதிரே புளொட்




இயக்க முகாமும் உள்ளன. இரு முகாம்கள் மீதும் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல் நடைபெற்ற இடத்தில் இருந்து அரைமைல் சுற்றளவுப் பகுதிக்குள் இரண்டு பொலிஸ் நிலையங்களும், பாரிய இராணுவ முகாம் ஒன்றும் இருக்கின்றன. இவற்றின் மத்தியில் ரெலோ முகாமும் உள்ளது.

அவ்வாறு இருந்தும் கிட்டத்தட்ட 30 நிமி டத்தில் புலிகள் வெற்றிகரமான தாக்குதல் நடத்தினர். நள்ளிரவு 12.45 மணிக்கு தாக்குதல் ஆரம்பமானது.ஒரு மணிநேரமாக சோதனை முகாம் மற்றும் புளொட் முகாம் இரண்டையும் புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

தாக்குதல் ஆரம்பித்த சில நிமிடங்களுக்குள் ளேயே இரண்டு முகாமில் இருந்தவர்களும் வாபஸ் பெற்றுச் சென்றுவிட்டனர்.

முகாம்களுக்குள் புகுந்த புலிகள் அங் கிருந்த ஆயுதங்கள் மற் றும் உணவுப் பொருட் கள், மோட்டார் சைக்கிள் போன்றவற்றை எடுத்துக் கொண்டனர். பின்னர் புளொட் முகாமை முற் றாக அழித்துவிட்டு வெளி யேறினர்.

செங்கலடி சந்திவரை புலிகளது அணிகள் நட மாடியுள்ளன. தாக்குதலின்போது புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

**செய்தியும், உண்மையும்**

தாக்குதலை முறியடிக்க நீண்ட சண்டை நடைபெற்றதாகவும், 30 புலிகள் பலியான தாகவும் இலங்கை அரச வானொலி அன்று மாலை தெரிவித்திருந்தது.

ஆனால் சண்டை எதுவும் நடக்கவில்லை.

புலிகளின் தாக்குதலில் படையினர் தரப்பில் இருவரும், புளொட் தரப்பில் நால்வரும் பலியாகினர். எட்டுப் படையினர், 7 புளொட் உறுப்பினர்கள், ஒரு ரெலோ உறுப்பினர் உட்பட 17 பேர் காயமடைந்தனர். புளொட் உறுப்பினர்களின் இரு சடலங்களை எடுத்துச் சென்றதாக புலிகள் கூறியுள்ளனர்.

தாக்குதலை முடித்துக்கொண்டு கைப் பற்றிய ஆயுதங்களோடு புலிகள் திரும்பிச் சென்று கொண்டிருக்கையில் விமானப்படை தளத்தில் இருந்தும், இராணுவ முகாமில் இருந்தும் ஆட்டிலெறி ஷெல்கள் சரமாரியாக ஏவப்பட்டன. சுமார் 2மணிநேரம் ஷெல்லடி நடத்தப்பட்டது.

புலிகளின் தாக்குதல் அணிகளில் ஒன்று உழவு இயந்திரத்திலும், இன்னொரு குழு அதன் அருகிலும் சென்று கொண்டிருக்கை யில் ஆட்டிலெறி ஷெல் உழவு இயந்திரப் பெட்டியில் விழுந்து வெடித்தது. அதற்குள் இருந்தவர்களும், வெளியே நின்றவர்களுமாக 14 புலிகள் பலியாகினர்.

14 சவப்பெட்டிகளில் பலியான புலி களது உடல்கள் பூரணமரியாதையுடன் மக் களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

விமானப்படைத்தளம், இராணுவ முகாம் ஆகியவைமீது புலிகளது பதிலடியான ஷெல்தாக்கு தல்கள் நடைபெறும் என்று அஞ்சப்படுகிறது.

இதற்கிடையே முகாம்கள் உள்ள பகுதிக் குள் புகுந்து வெற்றிகரமான தாக்குதலை புலிகள் நடத்தி முடித்தமை ஆச்சரியமானதே என்று பேசிக்கொள்ளப்படுகிறது.

## கறுத்தக் கோட்டுடன் நின்றார் கரும்புலி

பிரிகேடியர் விஜயரத்தினாமீது மனிதக் குண்டுத் தாக்குதல் நடத்திய கரும்புலி பற்றி சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

பருத்தித்துறை பொலிஸ் அரணுக்கு அருகில் உள்ள சந்தை மேற்கு ஒழுங்கையில் கரும்புலி காத்து நின்றுள்ளார். அங்கிருந்து பார்த்தால் பிரியாவிடை நடைபெற்ற வங்கிக் கட்டடத்தை நன்றாகப் பார்க்கமுடியும்.

கறுப்புக் கோர்ட் ஒன்றை கரும்புலி அணிந்திருந்தாராம். மழை பெய்திருந்ததால் யாரும் அவரை சந்தேகிக்கவில்லை.

வங்கிக் கட்டடத்தில் இருந்து பிரிகேடியர் புறப்பட்டதும் கரும்புலி தயாராகி உள்ளார். இவர் வாகனத்தை நோக்கி ஓடிவருவதைக் கண்ட விஜயரத்தினா, பிரியாவிடை கூறத் தான் ஓடிவருகிறார் என்று நினைத்து கையசைத்ததாகக் கூறப்படுகிறது.

வங்கிக் கட்டட வாயிலில் நின்ற பிரிகேடி யரை வழியனுப்பிவைத்துவிட்டு வாகனம் செல்வதை பார்த்துக் கொண்டிருந்த வர்த்த கர்களுக்கு திடீரென்று வெடிச்சத்தமும் பின்னர் புகை மண்டலம் எழும் காட்சியுமே தெரிந்ததாம்.

## யாழ் மேயர் கொலை?
## ஈ.பி.டி.பி. சந்தேகம்!

**யா**ழ் மாநகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்று திட்டவட்டமாகக் கூற முடியாதுள்ளது. வேறு சந்தேகங்களும் உள்ளன என்று ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா பா.உ. தெரிவித்துள்ளார்.

"கொலைக்கான காரணம் யார்? சூத் திரதாரிகள் யார் என்று சரியாகத் தெரியாத காரணத்தினாலேயே யாரையும் குறிப்பிட்டு கண்டனம் தெரிவிக்காமல் இருக்கிறோம். கூட்டணியினருக்கும் அதே சந்தேகம் இருப்பதையே அவர்களது அறிக்கைகள்-பேச்சுக்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனரஞ்சகப் பாடகர் புலிகளே
## ஏனையவை பக்க வாத்தியங்கள்!

**அ**ரசின் தீர்வு யோசனைகளுக்காகவே தாம் ஆதரவு வழங்கிவருவதாக ஆனந்தசங்கரி போன்ற கூட்டணிப் பிரமுகர்கள் கூறிவரு கின்றனர்.

கூட்டணியில் வாக்காளர் செல்வாக்குள்ள தலைவராக கருதப்படும் ஜோசப் பரராஜசிங்கம் மேற்படி கருத்தை முற்றாக மறுத்துள்ளார். கொழும்பில் இருந்து வெளியாகும் 'திருப்பம்' என்னும் சஞ்சிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ள தாவது:

அரசின் தீர்வு யோசனைகளை விடுதலைப்புலிகள் ஏற்கனவே நிராகரித்துவிட்டார்கள். அப் படியிருக்கையில் தற்போதுள்ளதை அவர்கள் எப்படி ஏற்றுக்கொள் வார்கள்? அவர்கள் இதுவரை காலமும் சிந்திய இரத்தத் திற்கு என்ன பயன்?இந்த உண்மையை சகலரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு பாட்டுக் கச்சேரிக்கு பாடகனின் திறமை காரணமாகவே ஜனத்திரள் கூடுகிறதே தவிர பக்க வாத்தியங்களுக்காக அல்ல.

எனவே, இனப்பிரச்சனை சம்பந்தமான மேடைக் கச்சேரியில் சகலரும் எதிர்பார்க்கும் ஜனரஞ்சகப் பாடகன் விடுதலைப் புலியே யாகும்.

அவர்கள் பங்குபற்றாத நிகழ்ச்சியை எவர்தான் இரசிப்பார்கள்? எனவே முக்கிய மேடைப் பாடகனான புலிகள் பங்கு கொள்ளாத பக்கவாத்தியங்களான ஏனைய தமிழ்க் கட்சிகளும், எனது கட்சியான த.வி. கூட்டணியும் பங்குபற்றும் தாளக் கச்சேரியை யார்தான் இரசிப்பார்கள்? என்றும் கூறியுள்ளார் ஜோசப் பரராஜசிங்கம்.

# தொடர் குண்டுவெடிப்பு
## வெளியாகியுள்ள புதிய தகவல்!

**தொ**லைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் குண்டு வெடிப்புக்கள் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

ஏற்கனவே களுத்துறை, குளியாப்பிட்டி தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைய குண்டுவெடிப்புக்களுக்கு எதிர்க்கட்சி மற்றும் ஜே.வி.பி. மீதே அரச தரப்பும் சந்தேகம் தெரிவித்து வந்தது.

ஆனால் நொச்சியாகம பரிவர்த்தனை நிலையத்தில் 23.05.98 அன்று இடம்பெற்ற குண்டுவெடிப்பை மட்டும் புலிகளால் செய்யப்பட்டது என்று அரச செய்திகள் தெரிவித்தன.

கொழும்பில் சார்க் நாடுகளது தொலைத் தொடர்பு அமைச்சர்களின் மாநாடு நடை பெற்ற சமயம் அது என்பதால், புலிகள்மீது அதிருப்தி ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே 'புலிகள்தான் காரணம்' என்று உடனடியாக கூறப்பட்டதாக தோன்றுகிறது.

ஆனால், களுத்துறை, குளியாப்பிட்டி, நொச்சியாகம ஆகிய மூன்று இடங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்புக்களும் ஒரே விதமானவையே.

சிறீலங்கா ரெலிகொம் தனியார் மயப்படுத்தப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தாக்குதல்களே இவை என்றும், தொடர்ந்தும் குண்டுகள் வெடிக்கக்கூடும் என்றும் புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

ஜே.வி.பி.யே இதன் பின்னணியில் உள்ளதாக ஊகங்கள் கூறப்படுகின்றன.

## தமிழ் இளைஞர்கள் கைது!

சமீப சில நாட்களுக்கு முன்னர் திருக்கோவில் பகுதியில் இருந்து கதிர்காமத்திற்கு வந்திருந்த மூன்று தமிழ் இளைஞர்கள் கதிர்காமப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப் பட்டனர். இதனைத் தொடர்ந்து மே மாதம் 19ம் திகதி கதிர்காம நகர் பொலிஸாரினாலும், படையினராலும் சுற்றி வளைக்கப்பட்டு சந்தேகத்திற்கிடமான 38 தமிழ் இளை ஞர்கள் கைது செய்யப்பட்டனர். முன்னர் கைதாகி விசாரிக் கப்பட்ட மூன்று இளைஞர்களும் கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்தச் சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டதாகக் காரணம் தெரிவிக்கப்படுகிறது.

கதிர்காமப் பகுதிக்குவரும் முக்கிய அமைச்சர்களையும், பிரமுகர்களையும் குறிவைத்துக் கொலை செய்யும் திட்டமும், அப்பகுதியில் குழப்ப நிலைகளை ஏற்படுத்தி வெளிநாட்டு, உல்லாசப் பயணிகளையும், யாத்திரிகர்களையும் வராமல் தடுக்கும் திட்டத்தையும் புலிகள் வைத்திருந்த தகவல் தனக்குக் கிட்டியதாக கதிர்காமப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். கதிர்காமப் பகுதியில் இடம்பெற்ற வாகனக் கடத்தல், பஸ்டிப்போ எரிப்புச் சம்பவம் மற்றும் யால வன ஜீவராசிகள் சரணாலயப் பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் பலவற்றுடன் தொடர்புடைய விவரங்கள் கைது செய்யப்பட்டு விசாரணையிலிருப்போரிடமிருந்து தெரியவந்திருப்பதாகவும் கூறுகிறார்.

சுற்றி வளைப்பு, விசாரணை என்ற போர்வையில் அப்பாவித் தமிழ் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் நடவடிக்கைகளே இவை என்று அப்பகுதியிலுள்ள தமிழ் மக்கள் தெரிவிக்கிறார்கள்.

## வல்வையில் தடை விதிப்பு-தமிழ்க் கட்சிகளில் சந்தேகம்

**யா**ழ் நகரில் இருக்கும் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் வடமராட்சிக்கு செல்வதற்கு படையினர் கடும் கட்டுப்பாடுகள் விதித்துள்ளனர்.

வல்வை சந்தியில் அவர் களைப் பல மணி நேரம் காத்திருக்க வைத்தே தொடர்ந்து செல்ல அனுமதிக்கின்றனர்.

வடமராட்சி பிரிகேடியர் விஜயரத்தின இருந்தபோதும் இதே நடைமுறையே அமுலில் இருந்தது.

வடமராட்சிப் பகுதியில் பொதுமக்கள் மீதும் கட்டுப்பாடுகள் படிப்படியாக அதி கரித்து வருகின்றன.

இதேவேளை வடமராட்சியில் புலிகள் நிலைகொண்டுள்ள பகுதிகளை நோக்கி படை நகர்வு ஒன்று ஆரம்பமானதாக கடந்த வாரம் சில செய்திகள் வெளியாகி இருந்தன. அச் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. இச்செய்தி எழுதப்படும்வரை (27.05.98.) அப் பகுதியில் படை நகர்வு எதுவும் மேற்கொள்ளப் படவில்லை.

# கரணம் தப்பினால் மரணம்
## மரணப் பொறியாக மாறிவரும் பயணம்!

(நமது நிருபர்)

**ம**ன்னாரிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் பயணிகள் தற்போது உயிரைக் கையில் பிடித்த வண்ணம் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது பற்றி தெரியவருவதாவது:

மன்னாரிலிருந்து காலை 9 மணிக்கு புறப்படும் கொழும்பு-கற்பிட்டி பஸ்கள் தள் ளாடி இராணுவ முகாமில் சில மணிநேரம் தாமதித்து நிற்கவேண்டும்.

பின்னர் இந்த இராணுவ முகாமிலிருந்து விடுமுறையில் செல்லும் இராணுவ வீரர் களை ஏற்றிக்கொண்டு வரும் இராணுவ வாகனத் தொடருடன் இந்த பஸ்கள் செல்ல வேண்டும்.இதில் இராணுவ பஸ்களும் வரும்.

தற்போது இந்த இராணுவ பஸ்களில் உள்ளவர்கள் பயணிகள் பஸ்ஸிற்கு மாற்றப் பட்டு, அங்குள்ள பயணிகள் இராணுவ பஸ் களில் இருந்து பயணம் செய்யுமாறு வற்புறுத் தப்படுகிறது.

இவ்வாறே கடந்த சில நாட்களாக இடம்பெற்று வருகின்றது. கடந்த ஆண்டு மடுப் பகுதியில் இராணுவ பஸ்கள்மீது புலி கள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தை யடுத்து இராணுவத் தொடருடன் பயணிகள் பஸ்கள் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டன.

14.05.98 அன்று செட்டிகுளம் நகரில் வைத்து சிறுத்தை அணியினர் இராணுவ பஸ் களைத் தாக்கியதையடுத்து இராணுவ பஸ்களில் பொதுமக்களும் அவர்களுடன் இணைந்து பயணம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறது.

பயணிகள் பஸ்ஸிலும் இராணுவ பஸ் களிலும் அரைவாசி பொதுமக்களும் அரை வாசி இராணுவத்தினரும் பயணம் மேற் கொள்வதால் வழியில் ஏதேனும் அசம்பா விதங்கள் இடம்பெறுமாயின் பொதுமக்களுக் கும் பலத்த சேதம் எற்படும் அபாயம் அதிகரித்து வருகிறது.

இந்த புதிய நடைமுறையினால் மன்னார்-கற்பிட்டி, மன்னார்-கொழும்பு பயணங்களில் ஈடுபடுவோரின் தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. மிக அத்தியாவசியத் தேவையின்றி பொதுமக்கள் தம் பயணத்தை குறைத்து வருகின்றனர்.

## ஷெல் மழையால் சேதம்

**செ**ங்கலடிப் பகுதியில் ஷெல் தாக்குத லில் பொதுமக்களின் 26 வீடுகளுக்குச் சேத மேற்பட்டிருக்கிறது. சிவதொண்டன் நிலை யம், நீர்ப்பாசன இலாகா, கிராம அபிவிருத் திச் சங்கம், சித்தி விநாயகர் ஆலயம், கைப்பணி நிலையம், கோட்டக் கல்வி அலு வலகம் என்பன சேதமடைந்துள்ளன. ஏறாவூர் முஸ்லிம் நகரத்திற்குள்ளும் 4 ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன. ஆனால் உயிராபத்துகள் ஏற்படவில்லை.

தாக்குதல் முடிந்து சில மணிநேரத்தில் மேற்படி தாக்குதலில் ஈடுபட்டுப் பின்வாங்கிய தங்கத்துரை சாந்தகுமார்-25-(இன்பரூபன்) எனும் பாண்டிருப்பைச் சேர்ந்த புலிகள் உறுப் பினர் ஒருவர் சரணடைவதற்காக வந்த வேளையில் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து ஒரு கைக் குண்டு மீட்கப்பட்டது. இவர் விசாளன் படைப்பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறியுள் ளார். இவரையே, தாக்குதலின்போது மடக்கிப் பிடிக்கப்பட்டதாக அரச வானொலி அறி வித்திருந்தது.

# முஸ்லிம் காங்கிரஸின் 15 வது மாநாடு
# கிழக்கில் எதிர்ப்பும் ஹர்த்தாலும்!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 15வது தேசிய மாநாடு கொழும்பில் நடாத்த ஏற்பாடாகியிருந்த தருணம் கிழக்கில் இம் மாநாடு சம்பந்தமான எதிர்ப்புத் துண்டுப் பிரசுரங்களும், பகிஷ்கரிப்பு அறிவித்தல்களும் பகிரங்கமாகவே வெளியாகின.

முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தியாளர்கள் 'முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள்' எனக் குறிப்பிட்டு வெளியிட்டிருந்த நீண்ட பிரசுரத் தில் "எதிர்வரும் 23.05.98 அன்று கொழும்பில் நடக்கவிருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ் கட்சியின் 15வது தேசிய மாநாட்டில் ஒரு முக்கிய தீர்மானமாக எடுக்கப்படவிருக் கும் அம்பாறை மாவட்டம் மட்டும் உள்ளடங் கிய 'தென்கிழக்கு' சபை என்று அங்கீகாரம் பெறும் தீர்மானம் எமது எதிர்கால சந்த தியினரின் அரசியல் அபிலாஷைகளை குழி தோண்டிப் புதைக்க எடுக்கும் நடவடிக்கை யாகும். எனவே இத்தீர்மானம் கொண்டு வரப்படவிருக்கும் 15வது தேசிய மாநாட்டைப் பகிஷ்கரித்து ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்," என்று தெரிவிக்கப் பட்டிருந்தது.

இதனால் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த காத்தான்குடி, மட்டக்களப்பு, ஏறாவூர், ஓட்ட மாவடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் கடையடைப்புச் செய்யப்பட்டு 15வது தேசிய மாநாடு நடந்த மே 23ம் திகதி இப்பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெரிய பதாதைகளும், எதிர்ப்புப் பிரசுரங்களும் ஒட்டப்பட்டிருந்தன. இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடிக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் உயர் தலைமைகள் சில பொலிஸா ரைப் பணித்ததாகவும், அதற்கிணங்க நட வடிக்கையில் இறங்க ஆயத்தமான பொலிஸா ரிடம் 'மக்களின் எதிர்ப்புக்கு இடைஞ்சலாக இருக்க வேண்டாம்' என்று படையினர் உத் தரவிட்டதாகவும் தெரியவருகிறது. இதனால் பொலிஸார் பின்வாங்கினர். கிழக்கில் முஸ் லிம்கள் அதிகம் வாழும் மட்டக்களப்பு மாவட்டப் பகுதிகளில் எதிர்ப்பு ஹர்த்தால் குறிப்பிடத்தக்க வெற்றியளித்தது.

**இரகசியப் பயணம்**

சென்றமுறை பல விசேஷ ஏற்பாடுகளுடன் இப்பகுதிகளிலிருந்து முஸ்லிம் காங்கிரஸ் மாநாட் டுக்கு மக்கள் கொண்டு இறக்கப்பட்டனர். ஆனால் இம்முறை இப்பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய அரசியல் அதிருப்தி நிலை தோன்றியுள்ளதால் ஒரு சில தீவிர ஆதரவாளர் களே மாநாட்டுக்கு இரகசியமாகச் சென்றனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இதுவரை காலமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு ஆதரவான இடமாகக் கருதப்பட்டுவந்த காத் தான்குடியில் கட்சியின் 15வது தேசியமாநாட்டைப் பகிஷ்கரிக்குமாறும், அன்றையதினம் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும் பகிரங்கமாகவே கேட்டுக் கொள் ளப்பட்டமை முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு பலத்த அதிர்ச்சியளித்ததாகக் கூறப்படுகிறது.

பள்ளி வாசல்களிலும் பகிஷ்கரிப்பு அறி வித்தல் செய்யப்பட்டிருந்தது. பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்கூட மக்கள் காட்டிய ஏகோ பித்த எதிர்ப்பை அலட்சியம் செய்யமுடியாது மறைமுகமாக ஆதரவைத் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப்பின் பகுதியில் ஹர்த்தால் வெற்றி அளிக்கவில்லை.

ஏறாவூரில் ஹர்த்தால் எதிர்ப்பு நாளன்று கடையடைப்புச் செய்யமறுத்த ஒருவரின் கோழிக் கடையொன்று இரவோடிரவாக எரிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# சந்தா தொகை அதிகரிப்பு!

## சுரண்டல் நடத்தும் தொழிற்சங்கம்

கடந்த 1998 ஜனவரி 1ம். திகதியிலிருந்து அமுலுக்கு வரும் விதத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளம் 101 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளதாக சகல வெகுசன ஊடகங்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது. ஜனவரி மாதத்திற்கான குறைச் சம்பளமும் (BALANCE PAY) பெப்ரவரி மாதத்தில் கொடுக்கப்பட்டதாக தெரியவந்தது. இது சம்பந்தமாக தொழிற்சங்கங்கள் சில. "தொழிற்சங்க இயக்க வரலாற்றிலே எந்தக் காலத்திலும் இத்தகைய ஊதிய உயர்வு பெறவில்லை!" என பெருமை பேசித் திரிவது அனைவரும் அறிந்த விடயம்.

ஆனால் இந்த ஊதிய உயர்வு போராட்டத்திற்குப் பின் பெருந்தோட்டத் துறை சாராத தனியார் தோட்டத் தொழிலாளர்கள் பெரும் குழப்பத்தில் மூழ்கி உள்ளனர். காரணம்- பெரும்பாலான தனியார்த்துறை தோட்டங்களில் பெப்ரவரி மாதம் 95 ரூபா சம்பளம் வழங்கப்பட்டது. ஆனால் ஜனவரி மாத குறைச் சம்பளம் கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் மார்ச் மாதம் மீண்டும் பெருந்தோட்டத்துறை சாராத தோட்டங்களில் நாட்சம்பளம் 83ரூபா என நிர்வாகிகள் அறிவித்ததுடன், பெப்ரவரி மாதம் கொடுக்கப்பட்ட 95 ரூபாவில் 12 ரூபா மீண்டும் மார்ச் மாதம் நிர்வாகத்தால் கழிக்கப்பட்டது. இப்போது அனைவருக்கும் 83 ரூபாதான் கொடுக்கப்படுகிறது. (இரத்தினபுரி மாவட்டத்தில் சில தோட்டங்களில்).

இதைப்பற்றி தெளிவான விளக்கமற்ற தொழிலாளர்கள் மாவட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் விசாரித்தபோது, அவர்களுக்கும் தலைமைப்பீடம் அவ்வாறுதான் அறிவித்துள்ளதெனவும் இதுப்பற்றி இன்னும் சரியாக தீர்வேதும் கூற முடியாதுள்ளதெனவும் கூறினார்களாம்.

பெருந்தோட்ட சார்பற்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கப்படவில்லையென எந்த ஒரு வெகுசன ஊடகம் மூலமாகவோ யாரும் உத்தியோகபூர்வ அறிக்கை இதுவரை விடப்படவில்லை. அத்துடன் பெருந்தோட்ட தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெற ஏனைய தோட்டத் தொழிலாளர்களும் ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அதே சமயம் இந்த ஊதிய உயர்வு அறிவிப்புக்கு முன் அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஒரே சமமான ஊதியம் வழங்கப்பட்டது. இப்போது ஏனிந்தப் பாகுபாடு?

இவ்வாறு தொழிலாளர்களை தரம் பிரிப்பதில் எவ்வித நியாயமும் இல்லை. எல்லா தோட்டங்களிலும் தொழிலாளர்களின் உழைப்பு ஒரே விதமானது. எவ்விதத்திலும் கூடவோ, குறையவோ இல்லை என்பதை யாவரும் அறிவர்.

இந்த ஊதிய ஊழலைப் பற்றி கேட்கச் சென்ற தொழிலாளர்களிடம் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஏதேதோ கூறி மழுப்பியுள்ளனர்.

இதிலிருந்து எழுத்தறிவோ, ஏட்டறிவோ அற்ற தொழிலாளர்களை ஏமாற்றி உழைப்பைச் சுரண்டும் நடவடிக்கை இன்னும் தொடர்கிறது என்பது தெளிவாகிறது.

ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்ட உடனேயே வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதைப் போல் செயலக செலவினங்களையும் உத்தியோகஸ்தர்களின் வாழ்க்கைச் செலவினங்களையும் சுட்டிக் காட்டி பிரபல தொழிற்சங்கமொன்று மாதாந்த சந்தாத் தொகையை அதிகரித்துள்ளது.

பெருந்தோட்டத் துறை சாராத தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு கேள்விக்குறியாகி இருக்கும் இந்நேரத்தில், இந்த சந்தா உயர்வு அவர்களின் வயிற்றெரிச்சலைத்தான் அதிகரித்துள்ளதே தவிர வேறு பலன் கிட்டவில்லை. ஏழைத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள்மீது வைத்திருந்த அபிமானம், நம்பிக்கை எல்லாம் நாளுக்கு நாள் நலிவடைந்து வருகிறது.

தொழிலாளர்களின் 'ஏக பிரதிநிதி' 'நலன் விரும்பி' என தம்பட்டம் அடிக்கும் மேற்குறிப்பிட்ட தொழிற்சங்க(ம்)கள் இவ்விஷயத்தில் செவிட்டு யானைபோல் இருப்பதின் மர்மம் தான் புரியவில்லை. மொத்தத்தில் நடந்து முடிந்த தொழிலாளர் போராட்டத்தில் அதிகபட்ச வெற்றி முதலாளிமார்களுக்குத் தான் போலிருக்கிறது.

'குறிஞ்சி நிலா' எஸ். கல்யாணி–இரத்தினபுரி.

# முஸ்லிம் நோயாளர்கள் புறக்கணிப்பு

(கம்பஹா நிருபர்)

கம்பஹா மாவட்டத்தில் 'அத்தனகல்ல' தொகுதியில் உள்ள 'வதுபிட்டிவள' ஆதார வைத்தியசாலை இப்பிரதேசத்தின் மிகப் பெரிய ஆஸ்பத்திரியாகும். இப்பிரதேசத்தில் வதியும் சுமார் 10 ஆயிரம் முஸ்லிம் மக்கள் தமது வைத்தியதேவைகளுக்காக இந்த ஆஸ்பத்திரியையே நம்பியுள்ளனர். எனினும் பிரஸ்தாப வைத்தியசாலையில் கடமைபுரியும் ஊழியர்களும், தாதிமார்களும் முஸ்லிம் நோயாளர்களைக் கவனிப்பதில் பாராமுகமாக- பாராபட்சமாக நடந்து கொள்வதாக நீண்ட நாட்களாக புகார் செய்யப்படுகிறது.

இங்கு முஸ்லிம் நோயாளர்களுக்கு இலவச மருந்துகள் வழங்கப்படுவதில்லை. முக்கிய மருந்துகளை வெளியில் பணம் கொடுத்து வாங்குமாறு கட்டாயப்படுத்தப்படுகிறது.

முஸ்லிம் வெளிநோயாளர்கள் சிகிச்சைக்காகச் சென்றால், அவர்களிடம் நேர்முகப் பரீட்சை நடத்துவது போன்று அனாவசியமான வினாக்கள் தொடுக்கப்படுவதாகவும், இனவாதம் கலந்த சிலேடை மொழிகளில் உரையாடுவதாகவும் கூறப்படுகிறது.

# கறுப்பு உடையில் திருடர்கள்!

## மக்களைக் காப்பது யார்?

அன்புவழிபுரம், திருகோணமலையிலே மக்கள் நிறைந்து வாழும் ஓர் ஊர். இந்த ஊருக்கு இந்த பெயரை சூட்டியவர் கிருபானந்த வாரியார் என்று முதியோர்கள் சொல்கிறார்கள்.

1990ம் ஆண்டளவில் அன்புவழிபுரத்தினுள்ளே இராணுவம், பொலிஸ் வரவே பயந்த இடம். ஏனெனில் புலிகள் நிறைந்து இருந்தார்கள். அப்பொழுதெல்லாம் மக்கள் எந்த ஒரு பயமும் இல்லாமல் அவரவர் தத்தம் தொழிலைச் செய்துக்கொண்டு சந்தோசமாக வாழ்ந்தார்கள்.

1991ற்கு பின்னர் திருகோணமலை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்து இப்பொழுது சிவில் நிர்வாகம் நடக்கிறது.

எங்கே பார்த்தாலும் வடிச்சாராயம், நூற்றுக்கு தொன்னூறு வீதம் குடிகாரர்கள் பெருகிவிட்டார்கள். இரவு நேரங்களில் திருடர் தொல்லை. இவைகளைப் பார்த்து கொண்டு இருக்கமுடியாமல் பொலிசுக்கு தகவல் கொடுத்தால், தகவல் கொடுத்தவரை அடிக்க வருகிறார்கள்.

இதனால் பொதுமக்கள் யாரிடமும் சொல்ல முடியாமல் அங்கலாய்க்கிறார்கள்.

சில வாரங்களுக்கு முன் இரவு பத்து மணிக்குமேல் ஊரடங்கு சட்டம் அமுல் படுத்துவதாகவும், "யாரும் மீறி நடந்தால் சுடப்படுவார்கள்" என்றும் பொலிசார் அறிவித்தார்கள். ஆனால் நடப்பதோ வேறு. இரவு பத்து மணிக்குப் பிறகு பொலிசார் ரோந்து வருவதற்குப் பதிலாக திருடர்கள்தான் வருகிறார்கள். அதுவும் இந்தத் திருடர்கள் வருவது புதுப்பாணியில்.

இவர்கள் கறுப்பு உடை அணிந்து வருகிறார்கள். தாங்கள் புலிகள் என்றும், வசூல் சேகரிப்பவர்களென்றும் சொல்லி, பல வீடுகளில் புகுந்து ஆயுதத்தைக் காட்டி இருபத்தையாயிரம், பத்தாயிரம் என்று கேட்கிறார்கள். கொடுக்க மறுத்தால் அடித்து உதைக்கிறார்கள்.

ஆனால் ஆராய்ந்து பார்க்கும்போது இவர்கள் திருட்டு கோஷ்டியே தவிர, உண்மையில் புலிகளல்ல என்பது புலனாகிறது.

இந்த அநியாயங்களை யாரிடம் முறையிடுவது? யார் தடுத்து நிறுத்துவது?

சித்திரன்.

# வாய் திறக்காத தபாற்பெட்டி

(மன்னார் நிருபர்)

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் தபாற்பெட்டி பழுதடைந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் இதுவரை திருத்தப்படவில்லை.

இதனால் சுமார் ஒன்றரை கி.மீ. தூரம் நடந்து சென்றே கடிதங்களை தபாலிடவேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு அமைந்திருக்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கல்விக் கல்லூரி, பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வி பயில்பவர்களில் அநேகமானோர் வெளியிடங்களில் இருந்து வந்தவர்களாவர்.

இதனால் ஆயிரக்கணக்கான கடிதங்களால் நிரம்பி வழியும் இத் தபாற்பெட்டி கடந்த ஒரு மாதகாலமாக தனது வாயை இறுக மூடிக் கொண்டிருக்கிறது.

# ஆசிரியர் விடுதிகளுக்கு அதிகரித்த வாடகை

மலையகப் பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளில், 'சீடா' செயற்திட்டத்தின் மூலமாக ஆசிரியர் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இவ்வாசிரியர் விடுதிகளில் தங்குகின்ற ஆசிரியர்களிடமிருந்து சம்பளத்தில் 10%வீதம் வாடகையாக அறவிடப்படுகின்றன. நீர், மின்சாரம்,அறை வசதிகள் இல்லாத இவ் விடுதிகளுக்கு மேற்படி வாடகை தொகை அறவிடப்படுவது நியாயமற்றதென ஆசிரியர்கள் விசனப்படுகின்றனர்.

மேற்படி விடுதிகளுக்கான வாடகைத் தொகையினைக் குறைக்க வேண்டுமெனவும், மீள் பார்வையிட்டு, இவ்விடுதிகளுக்கு அடிப்படை வசதிகளையாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்துதருவதற்கு முயற்சிக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

சோ. ஸ்ரீதரன், பொகவந்தலாவை.

# வாகனங்கள் பதியவேண்டுமாம்!

(காரைதீவு நிருபர்)

கல்முனை, சம்மாந்துறை, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள வாகனங்கள் யாவும் பொலிஸில் பதியவேண்டுமென பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. "பணம் கொடுத்து வாங்கிய வாகனத்தை சுதந்திரமாக ஓட்டுவதற்கும் தடையா? இப்படிப் பதிவதனால் குண்டு வெடிக்காமல் போய்விடுமா?" என வாகன உரிமையாளர்கள் கேட்கிறார்கள்.

விளம்பரப் பகுதி

STUDY & WORK IN U.K.

IHMES International Hotel School, Isle of Man, U.K. offer two-year diploma programme in Hotel management for high school students. The two-year programme includes twelve month paid intership at hotels in England. Next intake: January 1999.

CONTACT:

DALUWATTA & JAFFE ASSOCIATES

L.G. 15, Peoles Park, Colombo-11 Sri Lanka.

Tel: 075-336437, 852525. Fax : 433597

"சுவிற்ஸர்லாந்து நாட்டில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறி"

சுவிற்ஸர்லாந்து நாட்டில் ஹோட்டல் முகாமைத்துவம் (Hotel Management) தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கீழ் காணப்படும் முகவரியில் நடாத்தப்படுகின்றது

பாடத்திட்டத்துக்கான கல்வித் தகைமை:


க.பொ.த. (சாதாரணம்) ஆங்கிலம் உட்பட சித்தியடைந்த, 18 வயதிற்கு மேற்பட்டோர்.

Daluwatta & Jaffe Associates

LG 15, Peoples Park, Bodhiraja Mawatha, Pettah, Colombo-11. Tel: 075-336437



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது. பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி

P.K. SAAMI J.D.G.A.N&JP

SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM

NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி

Fax-00941342464.

Tel-00941431137.

உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

342463-344831

COMPUTER EDUCATION & TRAINING

MICROSOFT OFFICE '97: Windows '97, MS Word '97, Excel 97, Power Point '97 — காலம் : 3 மாதம்

TYPESETTING (DTP): Aldus Pagemaker, Corel draw, Word Art, Art Gallery, Type Twister — காலம் : 3 மாதம்

Free Study Pack

Diploma in Computer Studies

Diploma in Information Technology

Diploma in Programming

வெளிநாடு செல்வோர்க்கு குறுகிய கால வகுப்புகள்

UNLIMITED PRACTICAL HOURS

அனைத்து வகுப்புகளும் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஆரம்பம்

LOTUSSE ACADEMY

257, JAMPETTAH STREET, COLOMBO 13. PHONE 075 338724

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



நிலுக்ஷியா 18.06.1998

பெரியபோரதீவு-முனைத்தீவு, பாஸ்கரன்-சுமதினி தம்பதியினரின் செல்வப் புதல்வி நிலுக்ஷியா தனது 1வது பிறந்தநாளை 18.06.1998 அன்று இலக்கம் 28, பையினியர் வீதி, மட்டுநகரில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பா-பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் பெரியபோரதீவு ஸ்ரீ பத்திரகாளியம்மன் அருளுடன் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=

தங்க பஸ்பம் கலந்தது 1125/=

வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

ஞான சுந்தர வைத்தியசாலை

187, செட்டியார் தெரு, கொழும்பு 11, போன்: 421398

சுவிஸிலிருந்து வெளிநாடுகளுக்கு பேசுவதற்கு சுவிஸிலேயே மிகவும் குறைந்த கட்டணத்தில் தொலைபேசி அட்டைகள்

Global line, Tele line

CHF 20, 30, 50, 100, 200 (vip card)

பெறுமதியான அட்டைகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். மேலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாக பெறுபவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

தொடர்புகளுக்கு

S.KUMAR - BERN - SWISS

Tele Phone No: 031 - 992 47 36

Mobile (Natel) : 079 - 301 81 70

சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை

SHAKTHY SARAVANA, 30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06. TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை

SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

நன்மை பயப்பவை மட்டுமே செய்துதரப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# குறிகளும் -பலிகளும்

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**யா**ழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோதே, பல்வேறு சந்தேகங்கள் எழுந்தன.

**'தேர்தல் நடக்குமா? வேட்பாளர்கள் உயிர் பிழைப்பார்களா? தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டாலும் வெற்றிபெறும் உறுப்பினர்களின் கதி என்னாகும்?' என்று ஏகப்பட்ட சந்தேகங்கள்.**

தேர்தலை முற்றாக சீர்குலைக்க முடியாவிட்டாலும் பரவலான சீர்குலைவுகளை புலிகள் ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால் எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது என்று புலிகளின் தலைமை உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஏனைய இயக்கங்களுக்கும் புலிகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் அதுதான். உத்தரவைமீறி ஓர் அணுவும் அசையாது.

தேர்தல் பிரசாரத்திற்காக யாழ் குடாநாட்டில் புலிகள் நடமாடும் பகுதிகளுக்குள் ஏனைய தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் சென்றனர். சுவரொட்டிகள் ஒட்டினர்.

புலிகளும் பொதுமக்கள்போல நின்று சுவரொட்டிகள் ஒட்டுவதை பார்வையிட்டனர். அப்போது நினைத்திருந்தால் சுவரொட்டி ஒட்டியவர்களை சுட்டிருக்கவோ, கடத்திச் சென்றிருக்கவோ முடியும்.

**நீர்வேலியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். கட்சியினர் வாகனம் ஒன்றில் ஒலிபெருக்கி கட்டி பிரசாரம் செய்தபடி சென்றனர். புலிகள் மறித்தனர். வாகனத்தின் சில்லுகளுக்கு நாலு உதை உதைத்துவிட்டு பிரசுரங்கள் அனைத்தையும் பறித்துவிட்டு, வாகனத்தையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களையும் திரும்பிச் செல்ல அனுமதித்தனர்.**

அப்போது புலிகளிடம் பிஸ்டல் இருந்தது. வாகனத்துடனேயே கடத்திச் சென்றிருக்க முடியும். செய்யவில்லை.

'இனி இந்தப் பக்கம் வரவேண்டாம் ஓடுங்கோ' என்று கூற, ஆட்களும், வாகனங்களும் தப்பினால்போதும் என்று ஓடிவந்து சேர்ந்தனர்.

**புளொட், ஈ.பி.டி.பி. கட்சிகளைச் சேர்ந்தோரும் ஆயுதங்கள் கூட இல்லாமல்தான் புலிகள் நிறைந்த பகுதிகளுக்கு சென்று சுவரொட்டிகள் ஒட்டினர்.**

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் புலிகளின் கெரில்லாத் தளம் என கருதப்படும் பகுதிகளுக்கும் பிரசாரத்திற்கு சென்று வந்தன கட்சிகள்.

**எந்தவொரு தமிழ்க் கட்சியும் தப்பித் தவறிக்கூட தமது பிரசுரங்களிலோ, பிரசாரங்களிலோ புலிகளை விமர்சனம் செய்யவில்லை. புலிகளுடன் பிரச்சனை கிடையாது என்று மக்களை நம்பவைக்கவே முயன்றன.**

கடந்த காலத்தில் ஏனைய இயக்கங்களை புலிகள் தடை செய்தமை கண்டிக்கப்படவேண்டிய ஒன்றேயாகும்.

ஆனால், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைக்கு பின்னர் புலிகளின் போக்கில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. "ஏனைய இயக்கங்கள் எமக்கு தொல்லை கொடுக்காதவரை, பொது நிலைப்பாட்டுக்கு மாறாக செல்லாதவரை பிரச்சனைக்கு போகவேண்டாம்" என்று தலைமைப்பீடம் உத்தரவிட்டிருந்தது.

**உள்ளூராட்சித் தேர்தல்வரை கிட்டத்தட்ட ஒருவருட காலம் யாழ் குடாநாட்டில் மூன்று தமிழ்க் கட்சிகள் அலுவலகம் நடத்தின. எங்கும் புலிகளது அச்சுறுத்தலோ தாக்குதலோ இடம்பெறவில்லை.**

புங்குடுதீவு போன்ற பகுதிகளில் உள்ள பொதுமக்கள் புலிகளின் அனுமதி பெற்றுக்கொண்டு ஈ.பி.டி.பி. எம்.பி.களைக் கூட சந்தித்துச் சென்றனர்.

**தமிழ்க் கட்சி அலுவலகங்களுக்கு செல்லவேண்டாம் என்று புலிகள் தடுக்கவில்லை. தமிழ்க் கட்சி ஒன்றின் உறுப்பினர்களுடன் தொலைத் தொடர்பு சாதனத்தில் குறுக்கிட்ட புலிகள்: "மக்களுக்கு நல்லது செய்கிறீர்கள். சந்தோசம். படையோடு சேர்ந்து நிற்காதீர்கள்" என்று கூறினார்கள்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள இன்னொரு தமிழ்க் கட்சி முகாமுக்கு புலிகளது உளவுப் பிரிவு ஆட்கள் இருவர் அடிக்கடி வந்து போனதையும் காண முடிந்தது.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட தமிழ்க் கட்சிகள் விழுந்தடித்து நின்றபோதுதான் "இக் கட்சிகள் திருந்த வாய்ப்பே இல்லை" என்று பத்திரிகையாளர் ஒருவரிடம் வெறுப்போடு சொன்னாராம் புலிகளது பிரமுகர் ஒருவர்.

"இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வால் பரிகாரம் காணும் அரசாங்கத்தின் வியூகத்தில் ஒன்றாக நடத்தப்படும் உள்ளூராட்சித் தேர்தலில் இவர்கள் பங்குகொள்கிறார்கள்.

தமிழ் பேசும் தரப்பின் பலத்தை நிலை நிறுத்தவும், இராணுவத்தீர்வை முறியடிக்கவும் எங்கள் உறுப்பினர்கள் ஆண்களும், பெண்களுமாய் வன்னியில் உயிர் கொடுக்கிறார்கள். அந்தப் போராட்டத்தில் குளிர்காய்ந்தபடி அதனையே பலவீனமாக்கவும் துணைபோகிறார்களே" என்றும் அந்தப் பிரமுகர் கூறினாராம்.

**"கடந்த காலத்தில் ஒருவரை ஒருவர் குற்றம் சொன்னோம். குறை கண்டோம். மோதினோம். இப்போது தீர்க்கமான ஒரு கட்டத்தில் நிற்கிறோம். எல்லோரும் தங்கள் தவறுகளை திருத்திக்கொண்டு ஒன்றுபட்டு நிற்க வேண்டிய வேளையிது. இன்றைய பலம் வீழுமானால் மறுபடி கட்டிமுடிக்க பல தலைமுறைகளாகலாம். அதுவரை நாம் அடிமையாக வாழ நேரலாம்.**

**தமிழ்க் கட்சிகளை எங்களுடன் ஆயுதம் ஏந்துமாறு நாம் அழைக்கவில்லை. பொது நிலைப்பாட்டுக்கு மாறாக செல்லாமல், அரசின் சதி வலைகளில் சிக்கி எங்கள் பலத்தை அழிக்க துணைபோகாமல் இருந்தால் போதும்" என்று நீண்ட விளக்கம் ஒன்றையும் அப்பிரமுகர் பத்திரிகையாளரிடம் கூறினாராம்.**

இன்னொன்றையும் அந்த பிரமுகர் திட்டவட்டமாகக் கூறினாராம்: "தமிழ்க் கட்சிகளுக்கு நாம் வழங்கியுள்ள கடைசி சந்தர்ப்பம் இது. தாங்கள் போராட்டத்தின் எதிரிகளா? நண்பர்களா? என்பதை நடைமுறையில் அவர்கள் நிரூபிக்கட்டும்"

இவ்விடயங்கள் குறிப்பிட்ட பத்திரிகையாளரால் சில தமிழ்க் கட்சித் தலைவர்களுக்குப் பரிமாறப்பட்டது. ஆனாலும் ஒருவரை ஒருவர் வெட்டி ஓடும் வேகத்தில் தமிழ்க்கட்சிகள் உள்ளூராட்சி தேர்தலில் குதித்து, அரசின் வியூகத்திற்கு உதவின.

**இராணுவத்தீர்வு முயற்சிகளுக்கு ஜனநாயக சாயம் பூசுவதும், புலிகளை ஆத்திரமூட்டி தமிழ்க் கட்சி வேட்பாளர்களை கொல்ல வைத்து அதனை மனித உரிமை மீறலாக பிரசாரம் செய்து, படையினரால் காணாமல் போன அறுநூறுபேரின் அவலக்கதையை பின்தள்ளுவதுமே அரசின் நோக்கம் என்பதை புலிகள் புரிந்து கொண்டனர்.**

'ஜயசிக்குறுய்' படையினரை எதிர்த்து நிற்கும் புலிகளை யாழ் நோக்கி திசைதிருப்புவதும் மேலதிக நோக்கமாக இருந்தது.

கடந்தகால அனுபவங்கள் மூலம் புலிகள் ஒரு முடிவுக்கு வந்திருந்தனர். தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோரினால், அதனை சவாலாக ஏற்று கள்ளவாக்குகள்கூட நிரப்பப்படலாம். மக்கள் வாக்களிக்க நிர்ப்பந்திக்கப்படலாம். எனவே பகிஸ்கரிப்பு கோரிக்கையை புலிகள் என்ற பெயரில் வெளியிடுவதில்லை என்பதுதான் முடிவு. அதேபோல தேர்தலுக்கு முன்னர் வேட்பாளர்களை தாக்கவும் வேண்டாம் என்றும் உத்தரவிடப்பட்டதாம்.

அப்படித் தாக்கினால் தேர்தலுக்கு எதிரான நடவடிக்கையாக சித்தரித்து, தேர்தலில் நடக்கும் வாக்களிப்பை புலிகளுக்கு எதிரானதாக காண்பிக்க அரசு முனையும் என்று புலிகள் கருதினார்கள்.

**அதேசமயம் தேர்தலுடன் தொடர்புடையதல்ல என்று கூறத்தக்கதும், தேர்தலில் வாக்களிப்பு வீதத்தை குறைக்கக்கூடியதுமான இரண்டே இரண்டு தாக்குதல்களுக்கு புலிகள் திட்டமிட்டனர்.**

ஒன்று: புங்குடுதீவில் ஈ.பி.டி.பி. முகாம்மீது நடத்தப்பட்ட தாக்குதல். இத்தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரியபோதும், தமது உறுப்பினர்களை பற்றித் தகவல் கொடுத்தமையினாலேயே தாக்குதல் நடந்தது என்று தெரிவித்தனர்.

உண்மையில் தமக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையே தொடர்புகள் கிடையாது என்பதை மக்களுக்கு தெரிவிக்கும் அடையாளத் தாக்குதலாகவே இது நடத்தப்பட்டது. அதில் ஓரளவு பயன் இருந்தது.

**இத் தாக்குதல் யாழ் மாநகரசபையில் ஈ.பி.டி.பி.க்கு வாக்கு இழப்புக்களை ஏற்படுத்தி மூன்றாம் இடத்திற்கு தள்ளியிருந்தது. இத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்காவிட்டால் ஈ.பி.டி.பியோ அல்லது புளொட்டோ மாநகர சபையை கைப்பற்றியிருக்க வாய்ப்பிருந்தது.**

தேர்தல் தினத்தன்று குருநகர் இராணுவக் காவலரண்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலும் தேர்தல் வாக்களிப்பை பாதித்தது. ஆனாலும் புலிகள் நினைத்திருந்தால் குருநகரில் இருந்த தேர்தல் சாவடியை தாக்கியிருக்கலாம். அப்படிச் செய்தால் தேர்தலுக்கு எதிரான புலிகளின் தாக்குதல் என்று அரசு கூறும் என்பதால் காவலரண்களை மட்டும் தாக்கி விட்டுச் சென்றனர்.

**யாழ் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டதில் இருந்து நடந்து முடியும்வரை புலிகளது நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்திருந்தால் ஒன்று புரிந்திருக்கும்: தேர்தல் காலத்தில் நேரடி எதிர்ப்புக் காட்டுவதை புலிகள் தவிர்த்த காரணம் பலவீனத்தால் அல்ல, அரசின் தந்திரத்துக்கு பலியாகக்கூடாது என்ற நோக்கமே காரணம்.**

ஆனால் தேர்தல் நடந்து முடிந்த சூட்டோடு சூடாக சில தமிழ்க் கட்சிகள் அடித்த கூத்து மகா மட்டரகம். வாக்களிப்பு நாள்வரை புலிகளைப் பற்றி விமர்சிக்காமல் அரசை விமர்சித்து வீரமுழக்கமிட்ட அக் கட்சிகள், வாக்களிப்பு முடிந்த மறுநாள் என்ன கூறின தெரியுமா?

**புலிகள் தடுத்தும் 50 வீதமான மக்கள் வாக்களித்துவிட்டனர். ஆயுதக் கலாசாரத்தை மக்கள் நிராகரித்துவிட்டனர் என்று அரச தரப்புக்கு சார்பான பேச்சாளர்களாக மாறினர்.**

புலிகள் தங்கள்மீது தாக்குதல் நடத்தாது விட்டதையும், தேர்தலுக்கு எதிராக நேரடியாக தாக்குதல் நடத்தாது இருந்ததையும் புலிகளது பலவீனமாகவே இக்கட்சிகள் கருதின. யாழ் நகருக்குள் புலிகள் வந்து செயற்படவே வாய்ப்பில்லை. படையினரின் பாதுகாப்பு நகருக்குள் கெட்டியாக இருக்கிறது என்றும் கருதினர். அதனால் வெற்றி பெற்ற தமது உறுப்பினர்களது பாதுகாப்புத் தொடர்பாகக்கூட கட்சிகள் கவலைப்படவில்லை.

தன்னைச் சுடமாட்டார்கள், அப்படிச் சுடுவதானால் சுடட்டும் என்றெல்லாம் கருதியே யாழ் மேயர் பாதுகாப்பின்றி இருந்தார் என்பதெல்லாம் கட்டுக்கதைகள். புலிகளின் அனுமதி பெறுவதற்காக பதவி ஏற்பையே இரண்டு மாதங்களாக (மார்ச் 25வரை) ஒத்திப்போட்டுக் காத்திருந்தவர் அவர்.

**புலிகள் கடைசிவரை அனுமதி கொடுக்கவில்லை. 'அண்ணையிடம் கூறியிருக்கிறோம், பதில் வரவில்லை' என்று சில வாரங்களாக கூறிக்கொண்டிருந்தனராம். பின்னர் 'அண்ணை விரும்பவில்லை' என்றும் கூப்பட்டதாம். அண்ணை என்று கூறியது பிரபாகரனை.**

**புங்குடுதீவில் உள்ள புலிகள் ஊடாகவே அனுமதி பெறும் விண்ணப்பம் போடப்பட்டது. பிரபாகரனின் பதில் சாதகமாக உள்ளது போல திருமதி யோகேஸ்வரனிடம் கூறப்பட்டதாம்.**

யாழ் நகருக்குள்தானே இருக்கப் போகிறார். பயமில்லை. பதவி ஏற்க வைத்துவிடலாம் என்று கருதியே அவரது சகாக்கள் அப்படிக் கூறினார்களாம்.

ஆக, யாழ் முதல்வர் ஏமாந்துதான் பாதுகாப்பு கோரவில்லை. ஆனால், பல உள்ளூராட்சி உறுப்பினர்கள் யாழ் நகருக்குள் புலிகள் வந்து எதுவும் செய்யமுடியாது என்ற நம்பிக்கையில் பாதுகாப்பின்றியே இருந்துள்ளனர்.

**எனவே, யாழ் மேயர் மட்டும்தான் பாதுகாப்பு இல்லாமல் இருந்தார் என்பதில்லை. புலிகளைப் பலவீனமாக கருதியும், அசட்டுத் துணிச்சலிலுமே பாதுகாப்பு இன்றி பலர் இருந்தனர்.**

கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சித் தேர்தலை குழப்புவதற்கு புலிகள் எத்தகைய முயற்சியையும் செய்யவில்லை. தேர்தல் எல்லாம் முடிந்து பல மாதங்களின் பின்னரே நிதானமாக குறி வைக்கத் தொடங்கினார்கள்.

**கிழக்கில் வெற்றி பெற்ற உள்ளூராட்சி சபை தமிழ் உறுப்பினர்களில் முக்கியமான பலர் இதுவரை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பலர் நடமாடவே அஞ்சுகின்றனர். எதற்கும் இதுவரை புலிகள் உரிமை கோரவில்லை.**

அதே பாணியில்தான் யாழ் குடாநாட்டு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கும் குறி வைக்கப்பட்டுள்ளது.

முதல் குறிவைப்பே வெற்றியாக முடிந்திருப்பதால், அடுத்த குறிவைப்புக்களுக்கும் திகதி குறிக்கப்பட்டிருக்கலாம்.



**புலிகளின் அனுமதி பெறுவதற்காக பதவி ஏற்பை இரண்டு மாதங்கள் ஒத்திப் போட்டிருந்தார். "அண்ணை விரும்பவில்லை" என்று பதில் வந்தது.**

தொடராக இல்லாமல் நிதானமாக அவ்வப்போது ஒவ்வொருவராக வீழ்த்துவதுதான் நோக்கம் என்று தெரிகிறது.

கட்சிகளது உறுப்பினர்களான உள்ளூராட்சிச் சபை பிரதிநிதிகள் முகாம்களில் தங்கி பாதுகாப்பு தேடிக்கொள்வர். கட்சிகள் சார்பாக போட்டியிட்டு வென்ற வெளியாட்களான குடும்பஸ்தர்களது நிலைதான் கவலைக்கிடமாகும். என்றாவது தமக்காக விரிக்கப்பட்ட வலையில் அவர்கள் விழும் அபாயம் இருக்கிறது.

**யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பாவை சுட்டதோடுதான் புலிகளது நடவடிக்கைகள் தீவிரம் பெறத் தொடங்கின. புலிகளைப் பொறுத்தவரை இன்று மாநகர முதல்வராகும் எவரும் துரையப்பாவுக்கு சமமானவர்களே. ஏனெனில் அன்று போராட்டத்தை திசை திருப்ப அபிவிருத்தி பற்றிய ஆசை வலைகள் வீசியவரே துரையப்பா. இன்று போராட்டம் ஒரு தீர்க்கமான கட்டத்தில் பிரவேசித்திருக்கையில் அபிவிருத்தி முழக்கங்கள் எழுப்புவதை அன்றைய காலத்தைவிட மோசமான துரோகச் செயலாகவே புலிகள் நோக்குகின்றனர்.**

எனவே, சபைத் தலைவர்கள் மற்றும் முக்கியமானவர்கள் குறிவைக்கப்பட்டே தீருவர். ஏனைய உறுப்பினர்களும் வாய்ப்பாக மாட்டினால் தீர்த்துக்கட்ட தயங்க மாட்டார்கள்.

யாழ் குடாநாட்டில் பரவலாக புலிகளது ஊடுருவல் அதிகமாகியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

**அதேசமயம் தமிழ்க் கட்சிகளுக்கு இடையேயும் பிசகுகள் உள்ளன. சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது விரோதங்களை தீர்க்கவும் அவை முற்படலாம். எனவே, யார் காரணம் என்றுகூட தெரியாத மர்மமான சூழ்நிலை ஒன்றே நிலவப் போகிறது.**

தமது பட்டியலில் உள்ள ஒருவரை பதவி விலக்கி இன்னொருவருக்கு பதவி கொடுக்க நினைக்கிறது ஒரு கட்சி என்று வைத்துக்கொள்ளுங்கள், குறிப்பிட்ட உறுப்பினரோ, ஆதரவாளரோ பதவி விலக மறுத்தால், அவரை போட்டுத் தள்ளிவிட்டு புலிகள்தான் சுட்டனர் என்பது போல இருந்துவிடலாம்.

மொத்தத்தில் குறி வைக்கப்பட்டுவிட்டது. எங்கே, எப்போது, எப்படி என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கே வெளிச்சம்.

நா ர த ர்

## சுடு குறிக்கு உத்தரவாதம்

'சினைப்பர் தாக்குதல்' என்று அடிக்கடி செய்திகளில் அடிபடுகிறது அல்லவா. சினைப்பர் தாக்குதலில் பயன்படுத்தப்படும் சினைப்பர் ரை'.'பிள் இது. எஸ்விடி 7.62 எம்.எம்.ரக சினைப்பர் ரை'.'பிள் இது. ரசியத் தயாரிப்பு.

நீண்ட சுடுகுழல் கொண்டது. துல்லியமான சுடுகுறிக்கு உத்தரவாதம். அதன் மேல் உள்ள தொலைநோக்கியில் வைத்த கண் வாங்காமல் எதிரியின் நிலையை அவதானித்தபடியே இருக்க வேண்டும். எதிரியின் அசைவு தெரிந்ததும் தொலைநோக்கியால் இலக்கை துல்லியமாக நோக்கி சுட வேண்டியதுதான்.

எதிரி காலி. ஒரே ஒரு எதிரியைத்தான் சுட முடியும். ஒரே சூட்டில் முடிக்க வேண்டும். மறு சூட்டுக்கு வாய்ப்பிருக்காது. எதிரி உஷாராகி விடுவான். உயர்த்திய தலையை உள்ளே இழுத்து விடுவான். அன்றில் தரையோடு படுத்துவிடுவான்.

சினைப்பர் வீரருக்கு தளராத மனம் தேவை. பொறுமை தேவை.





சிறந்த சுடுபயிற்சி தேவை.

சினைப்பர் வீரர் ஒருவர் பொறுமையாகக் காத்திருப்பதை முதல் படத்திலும், சினைப்பர் ரை'.'பிளின் உடலின் மத்திய பகுதியை இரண்டாவது படத்திலும் காண்கிறீர்கள். ஏ.கே.47, ரி.56 போன்ற துப்பாக்கிகளுக்கான 7.62 எம்.எம். ரவைகள்தான் இதற்கும் பாவிக்கப்படுகிறது.

## அதிரடி அய்யாத்துரை



**யார் யார்** எதை எதை கண்டிப்பது என்று விவஸ்தையில்லாமல் போச்சுது. மனித உரிமை என்று வரி வரியாக பேசித்திரியும் மகேஸ்வரமான பெண்மணி யாழ் மாநகர முதல்வரது கொலைக்காக ரெண்டு எழுத்தாரை கண்டித்துப் பேட்டி கொடுத்திருக்கிறார். இவர் வரலாறுயாதெனில்: கூட்டணித் தலைவர்களான தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரை ரெலோ சுட்டுக் கொன்றபோது ரெலோவில் இருந்தவர். இந்தியப் படைகாலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் இருந்து தன்னால் இயன்ற சேவைகளை வழங்கியவர். எங்கெங்கு எப்போதெல்லாம் மனித உரிமைகள் மீறப்பட்டதோ அங்கெல்லாம் அவ்வப்போது துணையிருந்தவர். என்ரை வேலாயுதா!

**ஜூனியர் விகடன்** சஞ்சிகையிடம் திருமதி சரோஜினி கூறினாராம்: "பொன்னாலையில் துரையப்பாவை சுட்டுவிட்டு எம்.பி. யான எனது கணவரிடம்தானே ஓடிவந்தார் பிரபாகரன்; எனது கையால்தான் தேநீர் போட்டுக் கொடுத்தேன்!" என்று கூறியதாக கட்டுரை வெளியாகியுள்ளது. விஷயம் என்ன தெரியுமோ? துரையப்பா சுட்டுக் கொல்லப்பட்டபோது யோகேஸ்வரன் எம்.பி.யே அல்ல; அல்ல! ஆகவே, அப்போது யோகேஸ் வீடு பாதுகாப்பானதுமல்ல!

**நேற்று** எல்லாளன் படை, இன்று சங்கிலியன் படை, நாளை... பண்டாரவன்னியன் படையோ? அது சரி-சங்கிலியன் படை செய்தி முரசில் வந்தபோது, "அப்படி ஒரு படையோ பிரசுரமோ வரவில்லை" என்று மறுத்த யாழ் சிருடை தரப்பார் இப்போது என்ன சொல்லுகினம்?!

**இரண்டு வாகனங்களில்** நீர்கொழும்பு நோக்கிச் சென்றனர். வெளிநாட்டு முகவர் அவரது நண்பர்கள், நண்பி ஒருவர் ஆகியோரே சென்றனர். ஒரு கார் இடையிலே பழுதாகிவிட்டது. முன்னால் சென்ற காரில் இருந்தவர்களுக்கு இதுதெரியாது. போய்விட்டனர். பழுதான காரை அதில் சென்றவர்கள் இறங்கித் தள்ள-அவர்களது கஷ்டகாலம்-பொலிஸாரும் கண்டு, செந்தமிழர் என்றதும் உஷாராகி பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். இதனை எப்படியோ அறிந்த வானொலிச்சேவை ஒன்று "ஒரு பெண்புலி உட்பட மூவர் கைது. காரில் தப்பிச்சென்ற புலிகளைத் தேடி வலைவிரிப்பு!" என்று செய்தி கூறியதாம்! அச்செய்தி கூறப்பட்டுக் கொண்டிருக்கும்போதே கைதான மூவரும் விடுதலையாகிவிட்டனர்.

**"ரெண்டு எழுத்தாரால்** பிரச்சனை வராது; யாழ்ப்பாணத்தை சிங்கப்பூராக்குவேன், ஹொங்கொங்காக்குவேன் என்று பேசுவதை மட்டும் நிறுத்துங்கோ, லைன் கிளியர்." எண்டு கூட்டான கட்சித் பிரமுகர் ஒருவர் சொன்னவராம். ரெண்டு எழுத்தாருடன் கதைத்துவிட்டதாகவும் புலுடா விட்டாராம். அதை நம்பித்தான் முதன்மையானவர் "பாதுகாப்பு வேண்டாம்!" என்று கூறியிருந்தாராம். தலைநகரில் கூட எக்கச்சக்கமான பாதுகாப்போடு கூட்டான பிரமுகர்கள் இருக்கினம். பாவம் அந்த மனுஷியின் பாதுகாப்பில் மட்டும் பாராமுகமாக இருந்திருக்கினம்.

**மினித்தேர்தல்** நடந்தபோது முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணசபை கட்சியினரை நீர்வேலி ரெண்டு எழுத்தார் தாக்கினவை. ஆனைக்கோட்டையிலும் தாக்கினவை. அதையெல்லாம் வெளியே சொல்லாமல் மூடி வைத்திருந்தவை. வேட்டுப்பற்றிச் சொன்னால் வோட்டு விழாதே, எண்டுதான் மறைச்சவை: மாநகர முதல்வர் விடயத்தில் மட்டும் மறு நொடியே ரெண்டெழுத்தாரை ஒரு பிடி பிடிச்சுப்போட்டினம். கண்டிக்கட்டும்: வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் புத்திஜீவிகளை சுடுவது பற்றி வருந்திருப்பதுதான் உறுத்துகிறது. இவை அயலகப் படை காலத்தில் சுட்டவையெல்லாம் புத்தியில்லாத சீவிகளோ?

**ரூபவாஹினி** நாடகங்களில் சிங்களம்-டமில் பேசி நடைபெறும் தமிழ்ப் படுகொலையை திட்டாத ஆக்கள் உண்டோ? இது பற்றி ரூபவாஹினி தமிழ்ப்பிரிவுத் தலைவரிடம் ஒருவர் கேட்கிறார்: "பத்திரிகை ஒன்று தமிழ்பிரயோகங்கள் பற்றி விமர்சித்துள்ளதே?" அதற்கு தலைவர் சொன்ன ஜோக்கான பதில்: "இந்தப் பத்திரிகைகள் இப்படித்தான். மாற்றத்தை விரும்பமாட்டா. தொழில்நுட்ப முன்னேற்றத்தை விமர்சிக்கின்றன!" மொழிப் பிரயோகம் பற்றிய கேள்விக்கும் தொழில் நுட்பத்துக்கும் என்ன சம்பந்தம்? இவர்களெல்லாம் தலைவர்களாக இருந்தால் தமிழ்ப்பிரிவு எப்படி உருப்படும்? அன்னாருக்கு வால் கொஞ்சம் நீளம்.

**யாழில் வேலை வாய்ப்பு** பெற்றுக் கொடுக்க, என்று பணம் கறக்கும் ஆசாமிகள் பெருகிவிட்டனர். யாழில் உள்ள அதிகாரத் தரப்பாரின் முன்னணியினரும் பலருக்கு வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுத்துள்ளனராம். அதற்காக முன்கூட்டியே கறக்கப்பட்டதாம். நூறுபேருக்குக் கூட வேலை கிடைக்குதோ தெரியாது. ஆயிரம்பேரை ஏமாற்றிப்போடுவினம்.

**இவ்வாரப் பொன்மொழி:**

**"ஒவ்வொருவரும் தன்வீட்டு வாசலைக் கூட்டட்டும்; உலகம் சுத்தமாகிவிடும்!"**



படிப்பகம்

www.padippakam.com

183

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

பிரபாகரன் வன்னிக் காட்டில் இருந்தபோது இரகசிய விஜயம் மேற் கொண்டவர் நெடுமாறன்.

இந்தியப் படையினர் வெளியேறிய பின்னர் தமிழ் நாட்டில் இருந்து விமானம் மூலம் கொழும்பு வந்து சேர்ந்தார்.

முதலில் இரகசியப்படகுப் பயணம். பின்னர் சட்டபூர்வமாக விமானப் பயணம்.

இந்தியப் படைகள் இருந்தபோது கண்ட காட்சிக்கும் பின்னர் வந்தபோது கண்ட காட்சிக்கும் இடையே வேறுபாடு அதிகம்.

திரு. நெடுமாறனே அதனை விபரித்திருக்கிறார்:

"கொழும்பில் இருந்து யாழ்தேவி ரயில் மூலம் புறப்பட்டு கிளிநொச்சி ரயில் நிலையத்தில் சென்று இறங்கினேன்.

## காட்டுக்குள் சந்திப்பு

எங்கு பார்த்தாலும் புலிக்கொடிகள் கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தன. வன்னித் தளபதி ஜெயம், கிளிநொச்சித் தளபதி ரத்தன் ஆகியோர் என்னை வரவேற்று அழைத்துச் சென்றனர்.

கிளிநொச்சியில் எனது பழைய நண்பர் நாதன் வீட்டுக்குச் சென்றேன். அங்கு உணவு அருந்திவிட்டுப் பயணமானேன். மூன்று இடங்களில் கார்களும், காவலர்களும் மாற்றப்பட்டனர்.

அந்தி மயங்கும் நேரத்தில் ஒரு கானகத்தின் வெளிப்புறத்தை அடைந்தோம்.

அங்கு இரவு தங்கிவிட்டு தம்பி பிரபாகரன் இருக்கும் முகாமுக்கு செல்லலாம் என்று அன்பு என்ற புலி கூறினார்.

இரவில் அந்த முகாமில் இருந்த புலிகளுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

காட்டில் மழைக்காலத்தில் பெரும் கஷ்டம். மழைக்கான ஆடைகள் இன்றி, ஒதுங்குவதற்கு இடமின்றி ஈரமண்ணிலேயே படுத்துறங்கினர்.

பிரபாகரன் இருந்த காட்டில் மட்டும் 250 கிலோ கொண்ட சுமார் ஐயாயிரம் குண்டுகள் வீசப்பட்டன. அக் குண்டுகள் காட்டில் பெரும் நாசத்தை ஏற்படுத்தி இருந்தன.

மரங்கள் முறிந்து தரையில் பெரும் பள்ளங்களையும் ஏற்படுத்தி இருந்தன.

சூரிய ஒளி புகுவதற்கு தயங்கும் அந்த அடர்ந்த காட்டில் பிரபாகரனைச் சந்திக்க மற்றத் தோழர்களுடன் நான் நடந்து சென்றேன்.

வழிநெடுக விடுதலைப் புலிகள் ஆங்காங்கே பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருப்பதை பார்த்தேன். மரம் வெட்டுதல், பொருட்களைச் சுமந்து செல்லுதல் போன்ற பணிகளில் பெண் புலிகளும் ஈடுபட்டிருந்தனர்.

### குன்றாத இளமை

பல மைல் தூரம் நடந்து சென்று காலை சுமார் பதினொரு மணியளவில் தம்பி இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

கூடாரத்திற்குள் இருந்த தம்பி வெளியே வந்து என்னைக் கட்டித் தழுவியபோது உணர்ச்சிப் பெருக்கால் என் கண்கள் பனித்தன.

தம்பிக்காக நான் கொண்டு சென்ற விதையில்லாத திராட்சைப் பழங்கள் அடங்கிய பெட்டியை அவரிடம் கொடுத்தபோது மகிழ்ச்சியுடன் அவற்றைப் பெற்றுக்கொண்டார். ஒன்றிரண்டு பழங்களை எடுத்து வாயில் போட்டார். மறுகணம் பக்கத்திலிருந்த இளம் புலி ஒருவரை அழைத்து அவர் கையில் கொடுத்து எல்லோருக்கும் கொடுக்கும்படி கூறிவிட்டார்.

ஒருநாள் அவரைச் சந்திக்க மாத்தையா வந்தார். திடீரென்று பிரபாகரன் எழுந்து நின்று, 'மக்கள் முன்னணித் தலைவரே வருக, வருக' என்று வரவேற்றார்.

மாத்தையாவும், 'நல்ல வேளை மேளதாளங்களுடன் வரவேற்கவில்லை' என்றதும் அனைவரும் சிரித்தோம்.

கவிஞர் காசி ஆனந்தன் எனது அருகில் உட்கார்ந்தார். அவரின் வயதும், எனது வயதும் கிட்டத்தட்ட சமமாக இருக்கும். அவருக்கு, தலைமுடியோ, மீசையோ கொஞ்சமும் நரைக்காது இருப்பது கண்டு நான் வியந்தேன்.

அவரிடம் "குன்றாத இளமையின் இரகசியம் என்ன?" என்று கேட்டேன்.

அவர் பதில் சொல்லாமல் சிரித்து மழுப்பினார்.

அருகிலிருந்த பிரபாகரன் "அண்ணா, நான் சொல்லுகிறேன், காசி அண்ணாவின் குன்றாத இளமையின் மாறாத இரகசியம் 'டை' போடுதல்" என்று சொன்னபோது சிரிப்பலைகளால் கூடாரமே அதிர்ந்தது.

புலிகள் இயக்கத்தினருக்கிடையே சச்சரவுகளுக்கு இடமில்லை. சில நேரங்களில் யாரேனும் இரண்டு பேருக்கு இடையே சச்சரவுகள் வந்துவிடுமானால் அவர்களுக்கு பிரபாகரன் விதிக்கும் தண்டனை மிக வேடிக்கையானது.

ஒருவரின் வலது கரத்தையும் இன்னொருவரின் இடது கரத்தையும் இணைத்து விலங்கு பூட்டி இருத்தி வைத்துவிடுவார். இருவரும், ஒருவர் உதவியில்லாமல் மற்றவர் எதுவும் செய்ய இயலாது.

## வேடிக்கையான தண்டனை

தண்டனை விதிக்கப்பட்ட இரண்டு இளைஞர்கள் தற்செயலாக நாங்கள் அமர்ந்திருந்த மரத்தடிப்பக்கம் வந்தனர்.

அவர்களை அருகில் அழைத்த பிரபாகரன்: "இந்த இணைபிரியாத நண்பர்களைப் பார்த்தீர்களா? எவ்வளவு ஒற்றுமை, எங்கே போனாலும் ஒன்றாகச் செல்லுவார்கள், இப்படி ஒற்றுமையானவர்கள் உங்கள் நாட்டில் உண்டா?" என்று கேட்டார்.

புலிகளின் உணவு, உடை, குளிப்பு, பல் விளக்குதல், முடிவெட்டுதல், பொழுது போக்குதல் போன்ற சகல விஷயங்களையும் பிரபாகரனே மேற்பார்வையிடுகிறார்.

காட்டு வாழ்க்கையில் சுத்தமும், சுகாதாரமுமே முக்கியமானது என்று அவர் போதிக்கிறார்.

இயக்கத்திற்கு அப்பாற்பட்ட பொது மக்களும், இயக்கத்தில் உள்ளவர்களும் தங்கள் குறைகளை பிரபாகரனுக்கு தெரிவிக்க விரும்பினால் அதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

புலிகளது அலுவலகங்களில் 'தலைவருக்கு' என்று எழுதப்பட்டுள்ள அஞ்சல் பெட்டிகள் உள்ளன. அதில் எழுதிப் போட்டால் பிரபாகரனுக்கு கிடைக்கிறது.

கூடுமானவரை எல்லாக் கடிதங்களையும் அவரே பார்க்கிறார். சுட்டிக் காட்டப்படும் குறைகள் புலிகளைப் பற்றியதாக இருந்தாலும் அவற்றின்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



புலிகளின் மக்கள் முன்னணிச் சின்னம்

### குழந்தைகள்

பிரபாகரனின் மனைவி மதிவதனி மட்டுமன்றி மகன் சாள்ஸ், மகள் துவாரகா ஆகியோரும் காட்டில் முகாமில் இருந்தனர்.

குழந்தைகள் இருவரும் துடிதுடிப்புடன் இருக்கின்றனர். சில மாதங்களுக்கு முன்பு வரை சொல்லமுடியாத துயரங்களை அனுபவித்தனர்.

அவர்களுக்கு மற்றப் பிள்ளைகளைப் போல பள்ளிக்கூடம் செல்லவோ, சேர்ந்து விளையாடவோ, அப்போது வாய்ப்பிருக்கவில்லை.

விடுதலைப் புலிகள்தான் அவர்களது விளையாட்டுத் தோழர்கள். பிரபாகரனைக் காணவரும் இயக்க உறுப்பினர்கள் இந்தக் குழந்தைகளுடன் கொஞ்ச நேரம் வேடிக்கையாகப் பொழுதைப் போக்குவார்கள்.

ஒருநாள் மரத்தடியில் அமர்ந்து நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது குழந்தைகள் இரண்டும் புள்ளிமான்களாகத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன.

அப்போது பிரபாகரன்: "அண்ணா! சிரித்து விளையாடும் இந்தப் பிள்ளைகள் நாளை குண்டுவீச்சில் பிணமாக மாளலாம். கனவு போல அவர்கள் நினைவு கலையலாம். எனவேதான் அவர்கள்மீது அதிக பாசம் வைப்பதில்லை. என்ன நேர்ந்தாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் மன்ப்பக்குவத்தை நாங்கள் பெற்றுவிட்டோம்" என்று கூறினார்.

இவ்வாறு நெடுமாறன் தனது அனுபவத்தை விபரித்துள்ளார்.

### முகாம் வாபஸ்

பிரேமதாசாவுக்கு புலிகளுடன் உடனடியாக பேச்சை முறிப்பதில் நாட்டமில்லை. எனவே சில விட்டுக்கொடுப்புக்களுக்கு முன்வந்தார்.

அதில் ஒன்று கிளிநொச்சி இராணுவ முகாம் வாபஸ்.

கிளிநொச்சி நகரில் இருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டு அங்கிருந்த படையினர் ஆனையிறவு இராணுவ முகாமுக்குச் சென்றனர்.

மூன்று வாகனங்களில் இராணுவத்தினர் ஆனையிறவு நோக்கிச் சென்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ முகாம்களுக்கு மேலதிக படைகள் அனுப்பப்படத் தேவையில்லை என்றும் புலிகள் கூறியிருந்தனர்.

யாழ்ப்பாண முகாம்களில் ரயில் வண்டிகளில் பெருந்தொகையான படையினர் புறப்பட்டிருந்தனர்.

ரயில் வண்டியில் செல்லும் படையினரை கீழே இறங்க புலிகள் அனுமதிக்க மாட்டார்கள். முறுகல் நிலை ஏற்படும். அப்படி ஏற்பட்டால் புலிகள் தாக்குதல் நடத்தவும் தயங்க மாட்டார்கள் என்று பிரேமதாசாவுக்கு தகவல் கிடைத்தது.

உடனே உத்தரவு பறந்தது. ரயிலில் சென்ற படையினர் மதவாச்சியில் வைத்து இறக்கப்பட்டனர்.

உடனடியாக வாகனங்களில் ஏற்றப்பட்டு அநுராதபுரம் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

### சிவகுமாரன் சிலை

யூலை 5ம் திகதி 1990ல் உரும்பிராயில் சிவகுமாரன் சிலை புலிகளின் மக்கள் முன்னணியால் புனரமைக்கப்பட்டது.

இந்தியப்படை காலத்திலும் உடைந்து கிடந்த சிலை மறுபடி எழுந்து நின்றது. (இன்று மீண்டும் உடைந்து கிடக்கிறது)

அரசுடன் பேச்சு நடத்தியபோது புலிகள் சிவகுமாரன் சிலையை மீண்டும் புனரமைத்து, முதற் பலியான போராளிக்கு மரியாதை செலுத்தினர்.

இன்று யாழில் உள்ள தமிழ்க் கட்சிகள் சிவகுமாரன் சிலையை புனரமைக்க எவ்வித முயற்சியும் செய்யவில்லை.

(தொடர்ந்து வரும்)

### பெயரும் சூடும்



பிரபாகரன் என்று தனது பெயரைக் கூறியதும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சின்னத்துரை பிரபாகரன் இவர்தான். இச்சம்பவம் தொடர்பாக முன்னர் விபரித்திருந்தேன். சின்னத்துரை பிரபாகரனின் புகைப்படம் தற்போதுதான் கிடைத்தது.

## துரோகிகளும் கூட்டணியும்

கூட்டணியின் தலைவர் தந்தை செல்வாவின் சொந்தப் பத்திரிகையும், கூட்டணியின் குரலாக வெளிவந்ததுமான சுதந்திரன் பத்திரிகையின் நறுக்குகள் இவை.

### குண்டர்களுடன் மட்டுநகரில் இராசன் ஆடிய துரோகக்கூத்து!

#### தினபதியாரின் பின்னணிச் சதி அம்பலம்

எந்த ஒரு நாட்டின் சுதந்திரப் போராட்ட வரலாற்றை எடுத்துப்பார்த்தாலும், சுதந்திரத்துக்குப் போராடுகின்ற மக்கள் மத்தியில் காட்டிக்கொடுக்கும் துரோகிகளும் ஒருசிலர் இருந்திருக்கவே செய்கிறார்கள் என்பதை அறிகிறோம். கட்டபொம்மனைக்காட்டிக்கொடுத்தான் ஒரு எட்டப்பன்—சங்கிலிமன்னனைக்காட்டிக்கொடுத்தான் ஒரு காக்கை வன்னியன். இதெல்லாம் வரலாறு.

தன்மான உணர்வோ, சுதந்திர உணர்வோ அற்ற சில சோற்றுலடித்த பிண்டங்கள், ஆதிக்கம் செலுத்துவோரை எதிர்க்க அஞ்சி, அவர்களை அண்டி கால்கழுவி குற்றேவல் செய்து, சுதந்திரத்துக்குப் போராடும்தன் சொந்த இனத்து வீரர்களையே காட்டிக்கொடுத்து-எசமான் போடுகின்ற எலும்புத்துண்டைச்சுவைத்து நக்கி, நாய்போல வாலை ஆட்டிக்கிடப்பதை இந்நாட்டிலும் கண்டு வருகிறோம்.

திருவாளர்கள் ஆ. தியாகராசா, கி. எக்ஸ். மாட்டின், சிமோல் அருளம்பலம், இராசன் செல்வநாயகம், வி. பொன்னம்பலம் குமாரசூரியர் போன்றோர் இந்த வகையினர் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

#### மானத்தை குழிதோண்டி புதைத்தார்

தனது எசமானின் மொழியாகிய சிங்களத்தில்பாராளுமன்றத்தில் "பக்சாய்" சொல்லி, சிங்கள எசமானர்களின் முகத்தில் குதூகலம் ஏற்படுவது கண்டு, அவர்களது குதூகலத்தில் கைலாசம் கண்டுவந்த இராசன் செல்வநாயகம், தனது குற்றேவல் தொழிலுக்குமகிமை சேர்ப்பதற்காகவும் சிங்கள எசமானர்களைத் திருப்திப் படுத்துவதற்காகவும் கடந்த வாரம் ஒரு காரியம் செய்திருக்கிறார். மட்டக்களப்பு மண்ணின் மானத்... அத்துடன் ...

01.04.1973

### பொதுமன்றங்களில் இனியும் தமிழ்த் துரோகிகளுக்கு இடமா?

#### எதிர்ப்பு உருவாகி வளர்ந்து வருகிறது!!

பெற்றோர் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்ற பொதுமன்றங்களில், தமிழ் இனத்தின் அபிலாசைகளுக்கு விரோதமாக, அரசாங்கத்துடன் சேர்ந்து தமிழ் மக்களை காட்டிக் கொடுத்து வரும் தமிழ்த் துரோகிகள் அங்கம் வகிப்பதற்கு ஆங்காங்கே கடுமையான எதிர்ப்பு உருவாகி வளர்ந்து வருகிறது. இத்தகைய மன்றங்களிலிருந்து தமிழ்த் துரோகிகள் வெளியேற்றப்பட வேண்டுமென்றும் மன்றங்கள் நடாத்தும் விழாக்களுக்கு இவர்களை அழைக்கக் கூடாதென்றும் உணர்ச்சி மிக்க தமிழ்மக்கள் கோரி வருகிறார்கள்.

#### துரோகிக்கு இடமா?

இந்நிலையை சிலர் அறியாமையாலும், துரோகத் தனத்தாலும் உறுதிப்படுத்தி ஆங்காங்கே நடக்கும் சிறு விழாக்களில்கூட ஆளுங்கட்சிக் கும்பலை உள்ளுக்கிழுத்து விட நினைக்கின்றார்கள். இச் சந்தர்ப்பத்தில் மக்கள்விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டுமெனக்கோப்பாய்ப் பெற்றோர்களாகிய யாம் தமிழ் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

கோப்பாய், நல்லூர்த் தொகுதிப் பிள்ளைகள் கல்வி கற்றுவரும் மேற்படி வித்தியாசாலையில், கோப்பாய்ப் பிள்ளைகளும், பெற்றோர் ஆசிரி... னதும், நல்லூர்த் தொகுதிப் பெற்றோர்களினதும் எதிர்ப்பையும்பொருட்படுத்தாமல் தமிழ்த்தாயின்சிதையில்எண்ணெய் ஊற்றிக் கொண்டிருக்கும் துரோகக் கும்பல்களுள் ஒருவரான திரு. சி. அருளம்பலத்தை அழைத்ததன் மூலம் ஆசிரியர்கள் திட்டமிட்டுச் செயலாற்றியுள்ளனர்.

நல்லூர்ப் பிரதிநிதி தமிழினத்தாற் புறக்கணிக்கப்பட வேண்டியவர் எனத் தமிழினம் தீர்மானித்துவிட்ட பின்னர் அடிவருடிக் கும்பல்கள் ஆர்ப்பாட்டம் செய்து விழா வெடுப்ப முயல்வதேன்?

பெற்றோருக்கு மதிப்பளியாமல் ஆசிரியர்கள் தாம்...



படிப்பகம்

www.padippakam.com

# உதவி வழங்கும் நாடுகளது மாநாடும் மனித உரிமை ஆணைக்குழு விசாரணையும்

## அலசுவது- இராஜதந்திரி

சமீபத்தில் மே-26, 27ம் திகதிகளில் ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது மாநாடு நடைபெற்றுள்ளது.

வருடா வருடம் இந்த மாநாடு நடைபெறுவதுண்டு. மாநாடு நெருங்கும் காலகட்டத்தில் இலங்கை ஆட்சியாளர்கள் சில உபாயங்களை மேற்கொள்வதும் வழக்கமாகும்.

**உதவி வழங்கும் நாடுகளது அதிருப்திகளை போக்கும் வகையிலும், அந்த நாடுகளது அனுதாபத்தை சம்பாதிக்கும் வகையிலும் அந்த உபாயங்கள் அமைந்திருக்கும்.**

யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பதுபோன்று, பாரிஸ் மாநாடு வரும் பின்னே, இலங்கை அரசின் மனித உரிமை முழக்கங்கள் வரும் முன்னே என்று கூறுவது பொருத்தமுடையதாகும்.

**இன்றைய சந்திரிக்கா அரசாங்கம் மட்டுமன்றி, முன்னர் இருந்த அரசாங்கங்களும் பாரிஸ் மாநாட்டின் முன்னர் மனித உரிமைகளை காப்பதில் அக்கறையுடையவர்களாக காண்பிக்க விமரிசையான தந்திரங்களை மேற்கொண்டே வந்தன.**

இம்முறை கடந்த காலங்களைவிட சந்திரிக்கா அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

வடக்கில் கைதாகி காணாமல்போன அறுநூறுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுவிட்டனர் என்ற உண்மையை சர்வதேச மன்னிப்புச்சபை வெளிப்படுத்தி இருக்கிறது.

இலண்டன் மனித உரிமை அமைப்பு இலங்கை அரசுடன் முரண்பட்டு பிரச்சனை கிளப்பியுள்ளது.

**சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் தங்களது அறிக்கைகளை இலங்கை அரசிடம் காண்பித்து தணிக்கை செய்ய வேண்டும் என்று ஆட்சியாளர்கள் கட்டுப்பாடு விதித்துள்ளனர்.**

இக் கட்டுப்பாடுகள் சந்திரிக்கா அரசாங்கம் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மைகள் வெளியாகாமல் தடுக்க முற்படுகிறது, இரும்புத்திரைமீது நம்பிக்கை கொள்ளத் தொடங்கியுள்ளது என்பதையே வெளிப்படுத்தியுள்ளன.

**சமாதானத்தை கொண்டுவருதல், அரசியல்தீர்வு வழங்குதல், புலிகளை ஓரம் கட்டுதல் போன்றவை தொடர்பான சந்திரிக்கா அரசாங்கத்தின் காலவரையறைகள் சர்வதேச சமூகத்தின் செவிகளில் புளித்துப்போனவையாக மாறியுள்ளன.**

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி தேர்தலை நடத்தி முடித்ததை காண்பித்து "மேலும் ஜனநாயகத்தை கட்டியெழுப்ப நிதி தாரீர்" என்று கேட்கக்கூடிய வாய்ப்பையும், யாழ் மேயர் கொலையான செய்தி இல்லாதொழித்துள்ளது.

அரசின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதியான யாழ் நகருக்கு இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது தூதர்கள் பலர் சென்றுவந்தனர்.

**அவர்கள் உள்ளூராட்சி உறுப்பினர்களையும் குறிப்பாக யாழ் மேயரையும் சந்தித்து உரையாடிவிட்டு, யாழ் நகரில் சகஜநிலை ஏற்பட்டுவிட்டது என்ற திருப்தியுடன் திரும்பினர்.**

மனித உரிமை அமைப்புக்களது அறிக்கைகளை தணிக்கை செய்யமுனையும் சந்திரிக்கா அரசாங்கம், வெளிநாட்டுத் தூதர்களை மட்டும் யாழ் நகருக்கு சென்று சுற்றிப்பார்க்க தாராளமாக அனுமதித்தமையின் இரகசியமும் அதுதான்.

யாழ் குடாநாட்டை அபிவிருத்தி செய்யப்போவதாக சமீபத்தில் 'யாழ் திட்டம்' என்று பெயர் சூட்டி நடந்த ஆரவாரம்கூட பாரிஸ் மாநாட்டுக்காக நடந்த நாடகமாகவே அமைந்திருந்தது.

**யாழ் மேயர் கொலையானது அரசியற் படுகொலை என்று கண்டிக்கப்பட்டாலும்கூட, தமிழ் பேசும் தரப்பை பலவீனமாக்கும் அரசின் இராணுவத்தீர்வு முயற்சிகளுக்கு நிதி ஆதாரம் திரட்டும் நாடகத்திற்கு கொடுக்கப்பட்ட பதிலடியாகவும் அமைந்ததை மறுக்கவியலாது.**

தமிழ்பேசும் தரப்பை பலவீனமாக்கும் யுத்தத்தில் வெற்றி பெற, தமிழ்பேசும் தரப்பின் பெயரிலேயே நிதி ஆதாரம் திரட்டும் திட்டமானது வெகு புத்திசாலித்தனமான ஒன்றேயாகும்.

ஆனால், அரசின் சகல உபாயங்களும் விடுதலைப் புலிகளின் இராணுவ நகர்வுகள் காரணமாக தோல்வியைத் தழுவியுள்ளன.

இந்நிலையில் பாரிஸ் மாநாட்டுக்கு முன்பாக மனித உரிமை நாடகம் ஒன்றை யாருக்கும் சந்தேகம் வராதபடி கொழும்பில் அரங்கேற்றி முடித்திருந்தனர் ஆட்சியாளர்கள்.

பாரிஸ் மாநாட்டுக்கு நாலு நாட்களுக்கு முன்னர் கொழும்பில் நடத்தப்பட்ட இந்த நாடகம் பற்றி செய்திகளில் மிகுந்த முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நாடகத்தின் பிரதான பாத்திரங்களாகவும் இரண்டு தமிழ் அரசியல்வாதிகளே பங்குகொண்டு, மிகவும் கச்சிதமாக நடித்து உதவியுள்ளனர்.

கொழும்பில் வகை தொகையின்றி தமிழர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு நடத்திய விசாரணையே அந்த நாடகமாகும்.

**கைதுசெய்தது படையினர்; விளக்கம் கேட்கப்பட்டதோ பொலிஸ் அதிகாரிகளிடம்!**

## கச்சிதமாக அரங்கேறிய நாடகம்

ஏற்கனவே பாராளுமன்றத்தில் கொழும்புக் கைதுகள் தொடர்பாக விவாதம் கோரி நீதியமைச்சர் பீரிசின் போதனைகளை கேட்டபடி வாய்மூடி இருந்தவர்கள் கூட்டணியினர். கைதுகளை நியாயப்படுத்துவதற்கு அரசுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகவே அந்த விவாதம் முடிவுற்றிருந்தது.

விவாதங்களில் அமைச்சர்கள் பதிலளிக்கையில், தவறான தகவல்கள், தவறான நியாயப்படுத்தல்கள் இருக்குமானால் எழுந்து குறுக்கீடு செய்து உண்மையை எடுத்துரைப்பது விவாதம் கோரிய பாராளுமன்ற உறுப்பினர்களது கடமையாகும். அவ்வாறு இல்லையெனில் விவாதம் என்ற பெயர் சூட்டல் அவசிய மற்ற ஒன்றாகும்.

**ஆனால் கூட்டணி செயலதிபரான இரா.சம்பந்தன் பா.உ. உட்பட அனைவரும் பேசாமடந்தைகளாகவே அமர்ந்திருந்தனர். அதன்மூலம் தமது அரச விசுவாசத்தை வெளிப்படுத்திருந்தனர்.**

அதேபோன்று பொல்லைக் கொடுத்து தமிழ்பேசும் தரப்புக்கு அடிவாங்கிக் கொடுக்கும் நாடகம் ஒன்றிலேயே இரா.சம்பந்தன், நீலன் திருச்செல்வம் இருவரும் இணைந்து பங்கேற்றுள்ளனர்.

மனித உரிமை ஆணைக்குழுவுக்கு கூட்டணியினர் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே விசாரணை நடத்தப்பட்டதாக பத்திரிகைகளுக்கு செய்தி வழங்கப்பட்டிருந்தது.

இத் தெரிவிப்பானது பொருந்தச் சொல்லாத பொய்யாக விளங்குகிறது. ஏனெனில் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு கூட்டணித் தலைவர் சிவசிதம்பரமும், நீலனும் 10.4.98 அன்றுதான் முறையிட்டிருந்தனர்.

இருவரும் விரிவாக எடுத்துரைத்ததாகவும், தக்க நடவடிக்கை எடுப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் உறுதியளித்ததாகவுமே கூட்டணியினர் அப்போது கூறியிருந்தனர்.

**கொழும்புக் கைதுகளுக்கு தக்க நடவடிக்கை என்பது, அதற்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள்மீதான நடவடிக்கையாகவே அமையவேண்டும்.**

கிட்டத்தட்ட ஒருவாரமாக திட்டமிட்டு பகுதி பகுதியாக நடத்தப்பட்ட தேடுதல், கைது சம்பவங்கள் யாரோ சில படையினரின் தான்தோன்றித்தனமான நடவடிக்கையாகவோ, கட்டுப்பாட்டு மீறலாகவோ அமைந்திருக்கவில்லை.

பாதுகாப்புச் சபையில் முடிவு எடுக்கப்பட்டு பொறுப்புமிக்க உயரதிகாரிகளது வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகவே **விளங்கியிருந்தன.**

இன்றுவரை ஜனாதிபதியோ, பிரதிப் பாதுகாப்பு அமைச்சரோ அன்றி முக்கிய அமைச்சர்களோ மேற்கண்ட பாரிய தேடுதல் மற்றும் இன அவமதிப்புத் தொடர்பாக வருத்தம் தெரிவிக்கவும் இல்லை. உத்தரவிட்டவர்களே வருத்தம் தெரிவிப்பது இயலாத ஒன்றேயாகும்.

இவ்வாறான சூழலில் திடீரென்று 22.05.98 அன்று மனித உரிமை ஆணைக்குழு கொழும்புக் கைதுகள் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகளை அழைத்து விசாரித்ததாகவும், நீலனும், சம்பந்தரும் சாட்சியமளித்ததாகவும் செய்திகள் கூறப்பட்டிருந்தன.

**கடந்த மாதத்தில் நடைபெற்ற கொழும்புக் கைதுகள் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டவையல்ல. பொலிஸ் நிலையங்களுக்குக்கூட அறிவிக்காமல் இராணுவத்தினரே பகுதி பகுதியாகச் சென்று தமிழர்களை கைது செய்து பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டுசென்று ஆடுமாடுகள்போல இறக்கிவிட்டுச் சென்றிருந்தனர்.**

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் பலரே 'நாங்கள் செய்யும் வேலையை இவர்கள் ஏன் செய்கிறார்கள்?' என்று கைதான மக்களிடமே அதிருப்தி தெரிவித்தும் இருந்தனர்.

அவசரகால சட்டம் வழங்கும் அதிகாரத்தின்கீழ் படையினர் மேற்கொண்ட பாரிய கைது வேட்டையே அதுவாகும்.

**கைதுகளை விடவும் இன அவமதிப்பாக கருதப்பட்டவை மூன்று முக்கிய விடயங்களாகும். இரவு உடைகளோடு பெண்கள் கைது செய்யப்பட்டமை, வீடுகளுக்குள் புகுந்து படம் எடுக்கப்பட்டமை, இந்து மதகுருமார்கள் அவமதிக்கப்பட்டதுடன், இந்து ஆலயங்களுக்குள் அடாவடித்தனமாக நடந்துகொண்டமை போன்றவையே மாபெரும் வெறுப்புணர்வை தோற்றுவித்தன.**

மேற்கண்ட மூன்று விடயங்களும் இராணுவத்தினராலேயே மேற்கொள்ளப்பட்டன. பொலிசாருக்கு அச் சம்பவங்களுடன் தொடர்பு இருக்கவில்லை.

22.05.98 அன்று நடைபெற்ற விசாரணை நாடகத்தில் இராணுவ அதிகாரி எவரும் மனித உரிமை ஆணைக்குழுவால் அழைக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கண்ட முக்கிய பிரச்சனைகளுக்கு விளக்கம் கோரப்படவும் இல்லை.

**இந்த நாடகத்தில் நீலனும், சம்பந்தரும் தெரிந்தே பங்குகொண்டனர் என்றுதான் கருதவேண்டியுள்ளது. இல்லையெனில் இராணுவ அதிகாரிகள் அழைக்கப்படாததை அவர்கள் சுட்டிக்காட்டி சாட்சியமளிக்க மறுத்திருக்கலாம். மனித உரிமை ஆணைக்குழுவின் கண்துடைப்பு விசாரணையை அம்பலமாக்கியிருக்கலாம்.**

கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகளுக்குக்கூட அது தமக்கு பாதகமான விசாரணை அல்ல என்பது தெரிந்தே இருந்திருக்கிறது. இல்லையெனில் இராணுவத்தினரால் நடைபெற்ற கைதுகளை தமது தலையில் ஏற்று விளக்கம் கூறியிருக்கமாட்டார்கள்.

மனித உரிமை ஆணைக்குழு மூன்று மணி நேரத்தில் நடத்திய விசாரணையின் முடிவு நாடக உள்நோக்கத்தை நன்கு தெளிவுபடுத்தியுள்ளது.

**கைதுகள் சரியானதே, தவிர்க்க முடியாததே என்று பொலிஸார் விளக்கியுள்ளனர். அதனை ஆணைக்குழுவும் ஏற்றுக்கொண்டு, இறுதியாக சில வார்த்தைகள் நீதிக் கருத்துக்களை உதிர்த்துள்ளனர்.**

'கைது செய்யுங்கள், கவனமாக கைது செய்யுங்கள்' என்ற பாணியில் ஆணைக்குழுத் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

**மனித உரிமை ஆணைக்குழுவிடம் இருந்து உபதேசங்களை யாரும் எதிர்பார்க்கவில்லை. நடைபெற்ற அத்துமீறல்களுக்கு காரணமான அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதே இன அவமதிப்புக்கு உள்ளான தமிழ் மக்களின் அபிப்பிராயமாகும்.**

சம்பந்தா சம்பந்தம் இல்லாதவர்களை அழைத்து விளக்கம் கேட்பதும், பின்னர் பொதுவாக சில நீதிக் கருத்துக்களை உதிர்ப்பதும் கண்துடைப்பு நடவடிக்கைகளேயாகும்.

உதவி வழங்கும் நாடுகள் கடன் தொகையை குறைக்க உள்ளதாக நீதியமைச்சர் பீரிஸ் அவர்கள் வருத்தப்பட்ட மறுநாள்தான் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை நாடகம் அரங்கேறியிருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

நீலனும், சம்பந்தரும் நீதியமைச்சர் பீரிஸ் அவர்களுக்கு மிக நெருக்கமானவர்கள். கூட்டணிக்குள் அரசின் தீர்வுப் பொதியை ஆதரித்து நிற்கும் இரட்டையர்களாகவும் அவர்களே உள்ளனர்.

**பல சந்தர்ப்பங்களில் இவர்கள் இருவரும் சந்திரிக்கா அரசாங்கத்துக்கு கைகொடுத்து உதவியிருக்கின்றனர்.**

தமிழர்கள் தொடர்பாக தவறான வார்த்தைப் பிரயோகம் ஒன்றை ஜனாதிபதி கூறியதாக சர்ச்சை கிளம்பியபோது இரா. சம்பந்தருக்காக தானே கையொப்பம்போட்டு நீலன் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்று கூறிவந்த சம்பந்தர்; அரசு அதனை நிராகரித்தவுடன், 'முத்தரப்பு பேச்சு' என்று கரணமடித்திருந்தார்.

**தனது சொந்த மாவட்ட மக்கள் உப்புவெளி போன்ற பகுதிகளில் இருந்து விரட்டப்பட்டபோதுகூட அதனை அம்பலப்படுத்த சம்பந்தன் எம்.பி. முன்வரவில்லை.**

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சந்திரிக்கா அரசாங்கம்மீது ஏற்பட்டு வருகின்ற சர்வதேச அதிருப்தியை தணிக்கவும், உதவி வழங்கும் நாடுகளை திருப்தி செய்யவும் பயன்பட்ட நாடகத்தில் இருவரும் இணைந்தே பங்கேற்று முடித்திருக்கின்றனர்.

**"இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உடனுக்குடன் விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பயங்கரவாதிகளது செயற்பாடுகளால் கைதுகள் தவிர்க்க முடியாமல் உள்ளன" என்ற செய்தியே 'மனித உரிமை ஆணைக்குழு விசாரணை' என்ற பெயரில் பாரிஸ் மாநாட்டுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.**

பாரிஸ் மாநாட்டு தருணத்தில் தமது உபாயம் பலிக்காமல் புலிகள் தடுத்ததை, இன்னொரு தமிழ்க் கட்சியின் உதவியாலேயே முறியடிக்க முனைந்த ஆட்சியாளரின் புத்திசாலித்தனம் பாராட்டத்தக்கதேயாகும்.

'ஜனநாயக வழி' என்ற போர்வையும் மக்களை முட்டாள்களாக்குவதுடன், தமிழ் பேசும் தரப்பையும் பலவீனமாக்கும் உபாயங்களின் பங்குதாரர்களாகவே தமிழ்க் கட்சிகள் மாறிவருகின்றன. இதற்கு அநியாயவழி என்று பெயரிடுவதே பொருத்தமானதாகும்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

'சங்கிலியன் படை' என்ற பெயரில் யாழ் மேயர் கொலைக்கு உரிமை கோரிவிட்டு பின் மறுத்ததில் நம்பகத்தன்மையை சிறிது சேதமாக்கிவிட்டனர். இப்படிச் சறுக்குவது இதுதான் முதல்முறை.

**"எமது பட்டியலில் யாழ் மேயர் சரோஜினியின் பெயர் முதலிடத்தில் இருந்தது. அதனால் அவர் கொல்லப்பட்ட செய்தி அறிந்ததும் எமது யாழ் பொறுப்பாளர் தவறுதலாக உரிமை கோரிவிட்டார். பதவி ஆசையில் தமிழ்க் கட்சி ஒன்றே இதனைச் செய்துள்ளது. எமது வேலையை சுலபமாக்கியதற்கு நன்றி" என்று அறிக்கைவிட்டது 'சங்கிலியன் படை'.**

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவத்தை யாழ்ப்பாண பொறுப்பாளரே தவறுதலாக உரிமை கோருவது நம்பமுடியாத சமாச்சாரம்.

பட்டியலில் ஒருவரது பெயர் இருப்பதால் அவர் சுடப்பட்டதும் உரிமை கோரிவிடலாமா? சுடுவது என்றால் அதற்கான ஏற்பாடு, திகதி குறிப்பு, நடவடிக்கைக்கான ஆட்களை அனுப்புதல் என்பவை யாழ் பொறுப்பாளரின் கடமைதானே. தனக்கு சம்பந்தம் இல்லாமல் இதெல்லாம் நடந்து முடிந்திருக்கும் என்று நினைத்து எப்படித் தவறுதலாக உரிமை கோரமுடியும்?

தமிழ்க் கட்சிகளுக்கு பதவி ஆசைகள் இல்லாமல் இல்லை. ஆனால் கூட்டணியின் மேயரை சுட்டால் அந்தப் பதவி இன்னொரு கூட்டணி உறுப்பினருக்குத்தான் கிடைக்கும். அப்படிப் பார்த்தால் கூட்டணிக்குள் நடந்த உள்சதி என்று அர்த்தமாகிவிடும்.

கூட்டணித் தலைவர்களுக்கு தூண்டிவிட்டுத்தான் பழக்கம், சுட்டுப் பழக்கம் இல்லை என்றுதான் நினைக்கிறேன்.

-●●-

### கொலையும் சந்தேகமும்

**யா**ழ் 'மேயர் கொலை விவகாரத்தில் புளொட், ஈ.பி.டி.பி. இரண்டின்மீதும் சந்தேகப் பார்வைகள் வீசப்பட்டன.

'சங்கிலியன் படை' உரிமை கோரி பின்னர் உப்புச் சப்பில்லாத மறுப்புத் தெரிவிக்காமல் விட்டிருந்தால் சந்தேகம் வலுத்திருக்கும்.

சந்தேகங்கள் ஏற்பட்டவிதம் கொஞ்சம் சுவாரசியமானது.

யாழ் மேயர் கொலையான செய்தி அறிந்ததும் புளொட் விழுந்தடித்து வாழைகள்,வெள்ளைக் கொடிகள் கட்டியதோடு, சாவுவீட்டிலும் புளொட் வாகனங்கள் ஓடித் திரிந்தன.

"இவர்கள்தான் செய்திருக்க வேண்டும், அதனை மறைக்கத்தான் இப்படி தலையைக் காட்டித் திரிகிறார்கள்" என்று முணுமுணுப்பு எழுந்துவிட்டது.

ஈ.பி.டி.பி. அலட்டிக் கொள்ளவில்லை. மலர் வலையம் ஒன்றை வைத்துவிட்டு போய்விட்டார்கள்.

"ஈ.பி.டி.பிதான் சுட்டுவிட்டு அமைதியாக இருக்கிறது!" என்று வேறு சிலருக்கு சந்தேகம்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். கட்சிதான் புலிகளை கண்டித்து நீண்ட அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அறிக்கைகளில் தற்போதெல்லாம் தவறாமல் இடம்பெறும் சமாச்சாரம் 'ஆயுதம் ஒழிக'.

சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் என்ற கதைதான். இந்தியப் படை காலத்தில் பல்லாயிரம் ஆயுதங்கள் இருந்தும், அதனால் பல நூறுபேரை சுட்டுத் தள்ளியும் மாகாண சபை தர்பாரை நீடிக்க முடியவில்லை. இறுதியில் அந்த ஆயுதங்களும் புலிகளிடம் போய்ச் சேர்ந்துவிட்டன.

அதுதான் ஆயுதங்களில் தீராக் கோபம். 'எங்களுக்கு உபயோகப்படாத ஆயுதங்கள் ஒழிக' என்கிறார்கள்.

-★-



**த**மிழக சஞ்சிகைகள் நம்நாட்டு செய்திகளை குழப்பித் தருவது புதிதல்ல...

யாழ் மேயர் கொலை தொடர்பாக தமிழக சஞ்சிகை ஒன்று தப்புத் தப்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலையில் கற்பித்தவர்... தனது மனதில் பட்ட கருத்துக்களைக் கூறி விமர்சனங்களுக்கு உள்ளானவர். "வாங்கோ தம்பிமார்" என்று சுடவந்தவர்களை ஹோலுக்குள் அழைத்தார், அவர்களும் வந்தனர், சுட்டனர் என்றெல்லாம்... தப்புக்குமேல் தப்பான விபரங்கள்.

அவர் கற்பித்தது வேம்படி மகளிர் கல்லூரியில். அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதோ, கருத்துக்கள் கூறியதோ கிடையாது. சுட்டவர்கள் கதவருகே நின்றுதான் சுட்டுள்ளனர்.

அதுமட்டுமல்ல, யாழ்ப்பாணப் பத்திரிகையான 'உதயன்' புங்குடுதீவில் புலிகளிடம் பெற்று வெளியிட்ட பேட்டியை தனது சஞ்சிகைக்கான பிரத்தியேகப் பேட்டி என்று ஒரு எழுத்துக்கூட மாற்றமின்றி அப்படியே பிரசுரித்துமுள்ளது அச்சஞ்சிகை.

இன்னொரு தமாஷ், இரு இளைஞர்கள் ஜோல்னாப் பையில் துப்பாக்கியைகொண்டு சென்று சுட்டார்களாம்.

'ஜோல்னாப் பை' என்பது இந்தியாவில் பத்திரிகையாளர்கள் அதிகம் பயன்படுத்துவது. தோளில் தொங்கும் துணிப்பை. நம் நாட்டில் பாவிப்பது அரிதாகிவருகிறது.

அது ஒரு புறமிருக்க, ஜோல்னாப் பையில் ரி.56 துப்பாக்கியை எடுத்துச் செல்ல முடியாது என்பது முக்கியமான சங்கதி.

யாழ் மேயர் படுகொலை பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு கருத்து இருக்கலாம். ஆனால், ஒருவர் இறந்து விட்டார் என்பதற்காக இல்லாததை எல்லாம் கூறிப் [illegible]



படிப்பகம்

www.padippakam.com

# இடி அமீன்

ஜனாதிபதி ஒபேடேயின் குடும்பத்தினர் சில இராணுவ அதிகாரிகளது உதவியுடன் எப்படியோ தப்பிச் சென்றுவிட்டனர்.

ஒபேடேயின் மகள் சிலகாலம் தனது காதலியாக இருந்தாள் என்பதால் ஒபேடேயின் குடும்பத்தினரை தப்பிச் செல்லாமல் தடுக்க அமீனும் முயற்சிக்கவில்லை.

சிங்கப்பூரில் இருந்த ஒபேடே உகண்டாவில் உள்ள தனது குடும்பத்தினருடனும்,ஆதரவாளர்களுடனும் தொடர்பு கொள்ள முயன்றார்.

எங்கும் மணியடித்தபடியே இருந்ததே தவிர, யாரும் மறுமுனையில் தொலைபேசியை எடுக்கவில்லை.

ஏதோ விபரீதம் என்று அவரது உள்ளுணர்வு உறுத்தியது. அப்போது நள்ளிரவைத் தாண்டியிருந்தது.

அந்த நள்ளிரவு நேரத்தில் தனது அந்தரங்க காரியதரிசி சியம்பாவை தொடர்புகொண்டார் ஒபேடே.

சிங்கப்பூரில் ஒபேடே தங்கியிருந்த மாளிகையின் ஒரு அறையில் தனது பெண் செயலாளருடன் இரவைக் கழித்தும், களித்தும் கொண்டிருந்தார் சியம்பா.

உள்தொலைபேசியில் ஒபேடே அவரை அழைக்கும்போதுதான் சியம்பா தன் அழகான செயலாளரை ஆராய்ந்து முடித்து அடுத்த கட்ட ஏற்பாடுகளில் இறங்கியிருந்தார்.

"உடனே வாருங்கள், தலைபோகும் அவசரம்," என்ற ஒபேடேயின் குரலில் இருந்த பதற்றம் சியம்பாவையும் தொற்றிக் கொள்ள, உடைகளை வாரி அணிந்து கொண்டு, விழுந்தடித்து ஓடியவரைப் பார்த்து, 'களுக்'என்று சிரித்தபடி, உடைகளை புறக் கணித்து அப்படியே நடந்துபோய், தொலைபேசியில் உகண்டாவுக்கு தொடர்பு கொண்டாள் பெண் காரியதரிசி.

அவள் தொடர்பு கொண்ட்து இடி அமீனை. தொடர்பு கொண்டபோது இடி அமீன் மலைப்பாம்பில் செய்த இரவு உணவை ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

மலைப்பாம்பு கறி என்றால் இடி அமீனுக்கு கொள்ளை ஆசை. நள்ளிரவின் பின்னர்தான் இரவு உணவை சாப்பிட நேரம் கிடைத்தது. ஆவி பறக்க மலைப்பாம்பை மசாலாக் கறியாக கொண்டு வந்து கொடுத்திருந்தார்கள்.

சியம்பாவின் செயலாளராக இருந்தவள் அமீனின் உளவாளி, ஒரே ஒருநாள் அவளை கட்டிலில் சந்தித்திருக்கிறான். எவ்வித நிபந்தனையும் இல்லாமல் அமீனின் கம்பீரம் முன்னால் பணிந்து விட்டாள்.

சிங்கப்பூரில் ஒபேடேயின் நடவடிக்கைகளை தினமும் அமீனுக்கு தெரிவிப்பது தான் அவள் வேலை.

"சியம்பா பதற்றத்தோடு ஓடுகிறார், ஒபேடேதான் அழைத்திருக்கிறார்" என்றாள்.

அமீன் கறியைச் சுவைத்தபடியே **"இப்போதுதான் தகவல் கிடைத்திருக்க வேண்டும்"** என்றான்.

"என்ன தகவல்?" என்றவளை, **"கொடுத்த வேலையைச் செய்யடி, குறுக்கு கேள்விகள் தேவையில்லை, உனக்கு என்ன தேவையோ கேள்"** என்றான்.

அவள் சொன்ன பதிலில் ஏக்கம் கொப்பளித்தது:

"இன்னும் ஒரே ஒரு நாள் மட்டும் நீங்கள் வேண்டும்..."

**"நீ ஒரு அழகான மலைப்பாம்பு, முதலில் வேலையைக் கவனி, பின்னர் நான் உன்னைக் கவனிக்கிறேன்"** என்று ஃபோனை வைத்தான்.

ஜனாதிபதி ஒபேடேயை அமைதிப் படுத்திவிட்டு, சியம்பா யோசித்து, உகண்டா பொலிஸ் தலைமையகத்துக்கு ஃபோன் செய்தார்.

மணியடித்தது. மறுமுனை தூக்கப் பட்டது. பொலிஸ் தலைமை அதிகாரி அங்கிருந்தார். 'நள்ளிரவிலும் கடமை உணர்ச்சியை கைவிடாத அதிகாரியும் உகண்டாவில் உண்டா?' என்று ஆச்சரியப் பட்டபடி, ஜனாதிபதியிடம் ரிசீவரைக் கொடுத்து, "பொலிஸ் தலைமை அதிகாரியே இருக்கிறார்" என்றார் சியம்பா.

ஜனாதிபதி ஒபேடே என்றதும் பொலிஸ் அதிகாரி, எடுத்த எடுப்பிலேயே சொன்ன வார்த்தை, "மாட்சிமை பொருந்தியவரே ஒரு கெட்ட செய்தி"

"என்ன செய்தி?" என்றார் சுரத்தில்லாமல் ஒபேடே.

"அவர்கள் முன்னேறி வருகிறார்கள்."

"அவர்கள் என்றால்...?" என்று ஒபேடே கேட்டதற்கு குரலைத் தாழ்த்தி "இராணுவத் தளபதி இடி அமீனின் தலைமையிலான இராணுவம்" என்றார். ஒபேடே எதிர்பார்த்ததுதான்.

"நீங்கள் என்ன செய்கிறீர்கள்?"

"தயாராகிக்கொண்டிருக்கிறோம்!" என்று பொலிஸ் அதிகாரி கூறியதும், சினவசப்பட்ட ஒபேடே:

"எதற்கு, அவர்கள் முன்னேறும் போது பின்வாங்குவதற்கா?" என்று உரத்துக் கேட்டுவிட்டு, ஓங்கி அடித்து ரிசீவரை வைத்த ஒலி மறுமுனையில் பொலிஸ் அதிகாரியின் காதில் எதிரொலித்தது.

"சியம்பா இப்போது என்ன செய்யலாம்?" என்றார் ஒபேடே.

"எதுவும் செய்வதற்கில்லை. வெள்ளம் தலைக்குமேல் வந்துவிட்டது, சிங்கப்பூரில் இருப்பதால் உங்கள் தலை மூழ்கவில்லை" என்றார் சியம்பா.

நாற்காலி கவிழ்ந்து கொண்டிருக்கிறது என்பது தெரிந்ததும், அந்தரங்க காரியதரிசி தன்னுடன் பேசும் தோரணையில்கூட மரியாதையின் சதவீதம் குறைந்திருப்பதுபோல் ஒபேடேக்கு தோன்றியது.

உகண்டாவில் உள்நாட்டு அமைச்சர் அலுவலகத்திற்கும், வீட்டுக்கும் பலமுறை



முயன்றும் தொடர்பு கிடைக்கவில்லை.

அதேசமயம் உள்நாட்டு அமைச்சர் இடி அமீன் முன்பாக நின்று கொண்டிருந்தார்.

**"உமது தூக்கத்தை கெடுத்துவிட்டேனா?"**

"இ...இல்லை!"

**"என்னைக் கொல்ல நினைத்தீர், இப்போது எதையோ சொல்ல நினைக்கிறீர்!"** இடியென அமீன் சிரித்த சிரிப்பில், உள்நாட்டு அமைச்சருக்கு காத்திருக்கும் மரணம் தன்னைப் பார்த்து நகைப்பது போலிருந்தது.

"நா...நான்" என்று அவர் தடுமாற இடி அமீன் தன் நாற்காலியில் இருந்து எழுந்து, அவரை நெருங்கினான். கறுத்த மலையொன்று ஆடி அசைந்து வருவது போலிருந்தது அமைச்சருக்கு.

ஓங்கி ஒரு அறைவிட்டான் இடி அமீன். அமைச்சருக்கு காதுக்குள் ரயில் கூவியது.

**"இந்தா ஒரு இடி அமீன் குத்து!"** வயிற்றில் குத்தினான். எடை கூடிய அந்தக்குத்தோடு அப்படியே மயங்கிச் சரிந்தவரின்



முதுகில், தன் முழங்கையை மடக்கி ஒரு இடியை இறக்க, அமைச்சர் முகம் தரையை முத்தமிட விழுந்தார். சுயநினைவை இழந்தார்.

அடுத்து இடி அமீன் செய்த செயல்தான் பயங்கரமானது. கோரமானது.

தன் அலுவலகக் கதவை உற்புறமாக தாழிட்டுவிட்டு, பூட்ஸ்கால்கள் சரசரக்க நிதானமாக நடந்து வந்து, அமைச்சரை தன் கைகளில் தூக்கி, அலுவலகத்தில் கிடந்த நீளமான மேசையில் கிடத்தினான்.

**அவரது வலது கையை எடுத்து, கை விரல் ஒன்றை கத்திகொண்டு கீறினான்.**

**சிந்திய இரத்தத்தை நாவை சப்புக் கொட்டிக் கொட்டி உறிஞ்சினான், அதன் பின்னர்தான் அமீனின் முகத்தில் இருந்த வெறித்தனம் மறைந்து அமைதி குடி கொண்டது.**

அப்படியே அமைச்சரை தூக்கி மூலையில் குப்பையாக வீசிவிட்டு, கதவைத் திறந்து, உதவியாளர்களை அழைத்து, **"இதோ இவனையும் சிங்கப்பூருக்கு அனுப்பிவையுங்கள்"** என்றான்.

இடி அமீனின் ககாவா இனத்தாரின் பழக்கவழக்கங்கள் பல விசித்திரமானவை. தங்கள் எதிரிகளின் இரத்தத்தை குடித்தால் தான் முழு வெற்றி கிடைத்ததாக திருப்தி அடையும் குணம் கொண்டவர்கள் இடி அமீனின் மூதாதையர்கள்.

அந்தப் பழக்கத்தை இடி அமீனும் இரசனையோடும், பசியோடும் கடைப்பிடித்தான். மனித இறைச்சி சாப்பிடும் பழக்கமும் இடி அமீனின் மூதாதையரிடம் இருந்தது.

மலைப்பாம்புச் கறிச் சுவையும், மனித இரத்தமும் இடி அமீனுக்கு அன்று வயிற்றை நிரப்ப, அதே குஷியில் தன் தளபதிகளை அந்த அதிகாலை நேரத்தில் தனது அலுவலகத்துக்கு அழைத்தான்.

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 11

**கடந்தவாரம்**

**உகண்டா ஜனாதிபதி ஒபேடே சிங்கப்பூரில் இருக்கிறார். உகண்டாவில் அவரது அதிகாரத்திற்கு முடிவு கட்ட அமீன் திட்டமிடுகிறான். அமீனின் விசுவாசப்படைகளால் ஒபேடேயின் ஆதரவாளர்கள் கைது செய்யப்படுகின்றனர். இராணுவ உயர் அதிகாரியான சுலைமான் ஹுசனின் தலையைச் சீவி குளிர்பதனப் பெட்டியில் வைக்கிறான் இடி அமீன்....**

**இனி...**

தூக்கமே இல்லாமல் தான் பணியாற்றுவதை அவர்களுக்கு காண்பிப்பதும் அமீனின் நோக்கமாக இருந்தது.

அடுத்து மேற்கொள்ள வேண்டிய வேலைகளை விளக்கிக் கூறிவிட்டு, எழுந்த அமீன், முக்கிய அதிகாரிகளை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு சிறைமுகாம்களுக்குச் சென்றான்.

ஒபேடேக்கு விசுவாசமான அதிகாரிகள் சிலர் ஒரு அறையில் அடைத்து வைக்கப் பட்டிருந்தனர்.

**"எத்தனைபேர் இருக்கிறார்கள்?"**

"பத்துப்பேர்"

**"அத்தனைபேரும்...?"**

"அதிகாரிகள்..."

**"பத்து ரவைகளை ஏன் விரயமாக்க வேண்டும்... நீங்கள் ஒரு சுருக்கமான வழி கூறுங்களேன்...?"** என்று கேட்டான் தன்னுடன் வந்த அதிகாரிகளிடம்.

அவர்கள் யோசிக்க, **"இதற்கெல்லாம் தனித் திறமை வேண்டும், ஒரே ஒரு கைக் குண்டை கிளிப்பை அழகாக கழற்றி, கூண்டுக் குள் போட்டுவிடு. பத்துப்பேரும் செத்துப் போவார்கள். கூண்டோடு போகட்டும் சிங்கப் பூருக்கு..."** அவன் கூறிய யோசனையும், சிரித்த சிரிப்பும் கூட நின்ற அதிகாரிகளுக்கே குலை நடுக்கத்தைக் கொடுத்தது.

சிறை முகாமை விட்டு அதிகாரிகளுடன் வெளியேறி, ஜீப்பில் அமீன் ஏறியபோது, கைக்குண்டு வெடித்த சத்தம் துல்லியமாகக் கேட்டது.

தாவி ஏறியபடியே, மீண்டும் ஒருமுறை இடி இடித்ததுபோல சிரித்தான் அமீன்.

பின்னால் இருந்த அதிகாரிகளிடம் திரும்பி, **"பயந்துவிட்டீர்களா?"** என்றான். "இல்லை" என்றனர் உள்ளே பயந்தபடி.

**"பயப்படத்தேவையில்லை, என் எதிரிகளை மட்டும்தான் கொல்லுவேன்... இரசித்து இரசித்துக் கொல்லுவேன்."** என்று அவன் கூறிய தொனியே அச்சம் ஏற்படுத்துவதாக இருந்தது.

லிரா என்ற இடத்தில் உள்ள இராணுவ முகாமுக்கு ஜீப் சென்றது.

அந்த முகாம் நைல் நதியின் கரை யோரத்தில் இருந்தது.

அமீன் செல்வதற்கு முன்னரே அவன் சொன்னதை செய்து கொண்டிருந்தனர்.

லாங்கி இனத்தை சேர்ந்த துருப்புக்கள் ஒபேடேக்கு விசுவாசமானவை என்பதால், முன்கூட்டியே தந்திரமாக அவர்களை லிரா முகாமுக்கு அழைத்து நிராயுதபாணிகளாக்கின அமீனின் படைகள்.

**தருவது– ரசிகன்**

பின்னர் துப்பாக்கிச் கத்திகளால் குத்தியும், சுட்டும் சடலங்களை நைல் நதியில் வீசியெறிந்தனர்.

மரண ஓலங்களும், துப்பாக்கி வேட்டொலிகளும் கேட்டவண்ணமிருந்தன.

அமீன் அங்கு நடக்கும் வேட்டைகளைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென்று வெறிபிடித்தவன்போல தன் இடுப்பிலிருந்த பிஸ்டலை உருவி சிலரை தன்பங்குக்கு சுட்டுத்தள்ளினான்.

அதேவேகத்தில் திரும்பி ஜீப்பில் ஏறி மெய்க்காவலர்கள் சகிதம் சென்று விட்டான் அமீன்.

அமீனுடன் வந்த அதிகாரிகள் அந்த முகாமின் இராணுவ வாகனங்களில் தங்கள் அலுவலகங்களுக்குப் போய்ச் சேர்ந்தனர். ஒரு அதிகாரிகூட தங்களை இடைவழியில் விட்டுச் சென்ற அமீனைப் பற்றியோ, அவன் செயலையோ எண்ணி முணு முணுக்கக்கூட இல்லை.

அதிகாரிகள் அனைவரும் தங்கள் அலுவலகங்களுக்கு சென்று சேர்ந்த பின்னர் அத்தனை அதிகாரிகளுக்கும் அமீனே நேரடியாக ஃபோன் செய்தான்.

**"உங்களைப் பரீட்சித்துப் பார்க்கத்தான் அப்படிச் செய்தேன். என்னை எந்தளவு நம்புகிறீர்கள், எந்தளவுக்கு விசுவாசமாக இருக்கிறீர்கள்? என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? அதற்குத்தான் பரீட்சை. சினக்காமல், முணு முணுக்காமல் முதல் கட்டத்தில் தேறிவிட்டீர்கள். வாழ்த்துக்கள்!"** என்று கூறிவிட்டு ஃபோனை வைத்துவிட்டான்.

(இடி தொடரும்)

## சேவைக்கு தயாரான சீமாட்டி



பிரிட்டிஷ் இளவரசர் வில்லியமுடன் பனிச்சறுக்கு விளையாட்டில் கலந்து கொள்ள முடியாமல் போனமையினால் மனமுடைந்த செல்வச் சீமாட்டி தற்போது மன நோயாளிகளுக்கான மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கனடா நாட்டின் முன்னாள் பிரதமர் பியெறி ட்றூடோவின் முன்னாள் மனைவியான மார்கிரட் கெம்பா என்பவருக்கே இந்தக் கதி ஏற்பட்டிருக்கிறது.

இவர் இப்பொழுது ஒட்டாவாவைச் சேர்ந்த பெரும் சொத்துக்கு அதிபதியான செல்வந்தர் ஒருவரைத் திருமணம் முடித்திருக்கிறார். எழுபதாம் ஆண்டுகளில் பிரசித்தி பெற்ற இசைக்குழுக்களுடன் இவருக்கேற்பட்ட நெருக்கமான உறவுகளால் இவர் வெளியுலகுக்கு ஒரு வித்தியாசமான கோணத்தில் அறிமுகமானார்.

இளவரசர் சாள்சுடன் புதல்வர்கள் வில்லியமும் ஹரியும் கனடாவிலுள்ள பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு கடந்த மாதம் சென்றிருந்தனர்.

அரச குடும்பத்தவர் வருகின்றனர் என்பதை அறிந்து பனிச்சறுக்கு விளையாட்டு மையமான விஸ்றலர் என்ற பனிபடர்ந்த பிரதேசத்தில் ஓர் மாளிகையை வாடகைக்கு எடுத்து அரச குடும்பத்தினர் தங்குவதற்கேற்றாற்போல் பல புது மாற்றங்களைச் செய்திருந்தார். இவருடைய இந்த ஏற்பாடு பற்றி கனடிய அதிகாரிகள் எதுவித அக்கறையும் காட்டவில்லை.

இளவரசர்களுடைய நிகழ்ச்சியிலும் திருமதி மார்கிரட்டைச் சந்திப்பதற்கான ஏற்பாடும் இடம்பெறவில்லை. அவர்கள் வந்திருந்தபோது அவர்களை எட்டத்தில் நின்றாவது பார்ப்பதற்குக்கூட மார்கிரட்டால் முடியவில்லை.

இதனால் மனம் பேதலித்த நிலையில் 49 வயதான மார்கிரட் மனநோயாளராகி விட்டார் என்று பத்திரிகைகள் தெரிவித்தன.

மார்கிரட் கெம்பா தன் நிலைபற்றி இவ்வாறு கூறியதாக பத்திரிகைகள் தெரிவித்துள்ளன:

"கடுமையாக உழைத்துக் களைத் திருப்போருக்கு பாலியல் ரீதியில் உற்சாகமூட்டுவதே இவ்வுலகத்தில் எனது பெரும் பணியாக இருக்க வேண்டும். ஆனால் இன்று நான் அதற்குப் பயனற்றவளாகி விட்டேன்!" என்ன மாதிரியான சேவையுள்ளம் பார்த்தீர்களா?!

## போலி டாக்டர்கள் ஓட்டம்



தமிழ்நாட்டில் சிறுவன் ஒருவன் தவறான சிகிச்சையால் பலியானதை அடுத்து போலி டாக்டர்கள் பற்றிய திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

போலிச் சாமியார்கள் மாதிரி போலி டாக்டர்களும் பெருமளவில் உருவாகியுள்ளனர்.

டாக்டர் ஒருவரது உதவியாளராக இருந்த ஒருவனே பின்னர் போலி சான்றிதழ் தயாரித்து தானும் ஒரு டாக்டர் என்று கலக்கியிருக்கிறான். இந்தப் பாவியால் இரு சிறுவர்கள் பலியானார்கள்.

இந்த போலி டாக்டரிடம் பணியாற்றிய தாதிகளும் போலிகள்தான். பகலினில் தாதிவேடம். இரவினில் போலி டாக்டருடன் கும்மாளம் என்று இருந்திருக்கிறார்கள்.

போலி டாக்டர்களை தேடி தமிழகப் பொலிசார் வேட்டையைத் தொடங்கியதும் மளமளவென்று பல தனியார் மருத்துவமனைகள் மூடப்பட்டன. போலி டாக்டர்கள் மூட்டை முடிச்சுக்களுடன் தலைமறைவாகிவிட்டனர்.

போலிகளில் பெண் டாக்டர்களும் அடக்கம். அவர்களும் மருத்துவமனைகளை கைவிட்டு ஓட்டம் பிடித்துள்ளனர்.

பலர் தப்பியோட முன்னர் கைதுசெய்யப்பட்டு உள்ளே தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் போலி டாக்டர்களது தவறான சிகிச்சைகளால் வெளியே தெரியாமல் எத்தனைபேர் மரணமானார்களோ யார் கண்டது?

இவர்களில் சிலர் கைராசிக்கார டாக்டர்களாக கொண்டாடப்பட்டதுதான் மகா கொடுமை.

## நண்பர் தேடுகிறார்கள்



நம்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகள் சிலவற்றில் இடைக்கிடையே வித்தியாசமான விளம்பரங்கள் தலைகாட்டுகின்றன. குறிப்பிட்ட பத்திரிகை ஒன்றில் அடிக்கடி அத்தகைய விளம்பரத்தைக் காணலாம்.

"நான் நாற்பது வயதான ஆரோக்கியமான பெண். நட்புக் கொள்ள துடிப்பான, திடகாத்திரமான, ஆள் தேவை. தொடர்பு கொள்ளவும்..."

"ஐம்பது வயதான உயர்ந்த பதவியில் உள்ள, ஆரோக்கியமான பெண்ணுக்கு நண்பர் தேவை. கலை நயம் உள்ளவராகவும், ஆரோக்கியமான உடல் நலமும், உற்சாகமான செயற்திறன் கொணடவராகவும் விரும்பப்படுவர்."

இத்தகைய தேடல் விளம்பரங்கள் மத்தியில், மேலும் ஒருவிதமான விளம்பரம் இப்படியும் இருக்கும்:

"25 வயதான அழகான இளம் பெண் ஒருவருக்கு அதே வயதான அழகான, தாராளமான குணம் உள்ள நண்பி தேவை."

மேற்கண்ட விளம்பரங்கள் முன்னர் மேலை நாடுகளில் மட்டுமே வெளியாகின. தற்போது நம்நாட்டிலும் தலைநகரில் உள்ள பெண்களே துணிச்சலாக விளம்பரம் போடுகின்றனர்.

'இன்டர் நெட்'டிலும் இவ்வாறான விளம்பரங்கள் வெளியாகின்றன. ஆண்கள் சிலரே பெண்கள் போல விளம்பரம் கொடுத்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

## இன்டர்நெட் விநோதம்

என்ன வளம் இல்லை இந்தத் திரு நாட்டில் என்பதற்கு பதிலாக இன்டர் நெட்டில் என்று திருத்திக் கொள்ளலாம்.

பாலாடை பற்றிய தகவல் முதல் பாலியல் பற்றிய நுணுக்கங்கள்வரை தகவல் பெறலாம். 'அந்த' சமயத்தில் எப்படி தொழிற்படுவது என்பதை செய்முறை விளக்கங்களுடன் காண்பிக்கிறார்கள். 'இன்டர் நெட்'டால் இளைய தலைமுறை கெடுகிறது என்று மேலை நாடுகளில்கூட அதிருப்திக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன.

ஆனாலும் 'இன்டர்நெட்'டை யார் நொட்டை நொடி கூறியும் தடுக்க முடியாது. நவீன உலகின் அதிவேக தகவல் சுரங்கம் அதுதான்.

## சர்ச்சையின் நாயகர்



பூலான் தேவியின் வாழ்க்கை வரலாற்றைப் படமாக்கி பெரும் சர்ச்சைக்கு உள்ளானவர் சேகர் கபூர். நிர்வாணக் காட்சியை படமாக்கி பரபரப்பையும் ஏற்படுத்தியவர். இன்னொரு சர்ச்சையிலும் விரைவில் சிக்கத் தயாராகி வருகிறார். முதலாம் எலிச பெத் பற்றிய கதையை படமாக்கி வருகிறார்.

திருமணமாகாமல் கடைசிவரை செல்வியாகவே வாழ்ந்தார் என்றே அவரைப்பற்றி கூறப்பட்டு வருகிறது. அது தப்பு. அரசியாருக்கும் லிகெஸ்டர் பிரபுவுக்கும் இடையே உறவு இருந்ததாக சேகர் கபூர் திரைக்கதை எழுதியுள்ளார். என்னாகப் போகிறதோ?

## விருது போச்சு



ஜாக நிககலஸன

என்னதான் பிரமாண்டம் காட்டியும், வசூலை வாரிக் குவித்தும் டைட்டானிக் ஒஸ்காரில் கோட்டை விட்டுவிட்டது. சிறந்த நடிகை, நடிகருக்கான ஒஸ்கார் விருதை மயிரிழையில் தவறவிட்டுள்ளது டைட்டானிக்.

டைட்டானிக்குடன் போட்டி போட்டு அந்த விருதுகளை தட்டிச் சென்றுள்ள படம் 'அஸ் குட் அஸ் இட் கெட்ஸ்' (AS GOOD AS IT GETS) அப்படத்திற்காக சிறந்த நடிகர் விருது ஜாக் நிக்கல்ஸனுக்கும், சிறந்த நடிகை விருது ஹெலன் ஹொாண்ட்டுக்கும் கிடைத்திருக்கிறது. இத்தனைக்கும் படம் ஒன்றும் பிரமாண்டமல்ல.

இதற்கிடையே டைட்டானிக் பட நாயகி இந்தியாவுக்கு இரகசிய விஜயம் செய்தார். திடீரென்று கிடைத்த கோடி கோடிப் பணமும், பெரும் புகழும் தலை சுற்ற வைத்துவிட்டதாம். அதனால்தான் மன அமைதி தேடி இந்தியா சென்றார். யோகாசன குரு ஒருவரைச் சந்தித்து யோகாசனம், தியானம் என்பவற்றை கற்றுக்கொண்டு திரும்பச் சென்றுள்ளாராம்.



படிப்பகம்



## இரண்டு பக்கமும் இடி

அரசுக்கும், புலிகளுக்கும் இடையே நடக்கும் போரின் நடுவே தாம் வெட்டி ஓடித்திரியலாம் என்று தப்பாக நினைத்து, இடைக் கிடையே இரண்டுக்கும் நடுவே சிக்கி இடிபடும் தமிழ்க் கட்சிகளாக இக் காரை நீங்கள் நினைத்தால் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.

இரு பஸ்கள் இடையே விபத்தில் சிக்கிய இக் காருக்கு இரண்டுபக்க இடி என்றால் என்னவென்று புரிந்திருக்கும். மத்தளமான கார்.

## 50 கோடி

இவரது வெண்பற்களை மின்னும் வைரங்கள் என்று அழைக்கும் பொறுப்பை கவிஞர்களிடம் விட்டுவிடலாம். இவர் விரலிடுக்கில் இருப்பது உண்மையான மகா புகழ் வைரம். அதைப் பார்ப்போம். இதன் எடை 74.79 காரட். மிகப்பெரிய வைரக்கல் இது. இதன் மதிப்பு இலங்கை பணமதிப்பில் எவ்வளவு தெரியுமோ? அம்மாடியோவ். 50 கோடி.



உலகப் புகழ்பெற்ற 'சாத்பை' என்னும் ஏலக்கம்பனி ஜெனிவாவில் இதனை ஏலம்விட்டது. இக் கம்பனி ஏலம் விட்டதில் நாலாவது பெரிய வைரக்கல் இதுவாகும்.

## மரண ஏற்றம்

சினிமாக்களில் கமரா சாகசம் மூலம் உச்சங்களுக்கு ஏறுவதுபோன்ற காட்சிகளை சுட்டுத் தருகிறார்கள். நாமும் வாயைப் பிளந்து கதா நாயகனின் வீரத்தை மெச்சிக் கொண்டிருப்போம்.

ஆனால் இங்கு உள்ளது, தந்திரமுமல்ல, மந்திரமுமல்ல, உண்மையான காட்சி.

வழக்கமாக மலையில் ஏறுபவர்கள் கருவிகளது உதவியுடன்தான் ஏறுவர். வலை கட்டி வைத்துவிட்டு ஏறுவோரும் உண்டு.


ஆனால் இந்த சாகச மனிதர் வெறுங்கையின் உதவியால் செங்குத்தான மலையில் தாவித் தாவி ஏறுகிறார். கை நழுவினால் அப்பளமாய் நொறுங்கிப்போக வேண்டியதுதான்.

இவரது பெயர், மவுரிஷியோ. இத்தாலியில் உள்ள டோலமைட் மலையில்தான் இப்படி ஏறுகிறார்.

தற்போது வெறுங்கையால் மலையேறும் போட்டிகள் அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் பிரபலமாகியுள்ளன. ஆனால் இவ்வாறான செங்குத்தான மலைகளில் மரணத்தோடு விளையாட முன்வருவோர் அதிகமில்லை.



## கொம்புச் சிக்கல்



சண்டையென்றால் சண்டை இது மாட்டுச் சண்டை. சீனாவில் பெய்ஜிங் நகரில் இந்த மாட்டுச் சண்டை இடம் பெற்றது. இரண்டு எருதுகள் பொருதுகின்றன. பொருதும் போது இரு எருதுகளது கடும் கொம்புகளும் ஒன்றோடு ஒன்று சிக்கிக் கொண்டுவிட்டன.

இந்த கொம்புச் சிக்கலை விடுவிப்பதற்கு ஊழியர்கள் படும் பாட்டையே படத்தில் காண்கிறீர்கள்.

எப்படியோ சிக்கலை தீர்த்து எருதுகளை காப்பாற்றி விட்டனர். நம்நாட்டு அரசின் பாணியில் சிக்கலை தீர்ப்போம் என்று இவர்களும் வாய் மட்டும் அடித்துக் கொண்டிருந்தால் இந்த எருதுகள் பொருதியே அழிந்திருக்கும்.

## இந்த இரயில் போல் இருப்பவர் யார்?



அடிடா சக்கை, இரண்டு தண்டவாளங்களுக்குள் நிற்கும் இந்த ரயிலைப் பார்த்ததும் உங்களுக்கு என்ன தோன்றுகிறது? எங்கள் தமிழ்க் கட்சிகள் போல தோன்றியிருக்காவிட்டால், நீங்கள் அரசியலில் இன்னமும் ஏமாற இடமிருக்கிறது என்று அர்த்தம்.

எந்தப் பாதையை தெரிவு செய்வது என்று தெரியாமல், எப்படி செயற்படுவது என்றும் தெரியாமல் அரசை ஆதரிப்பதில் ஒருகால், அரசை எதிர்ப்பதுபோல நடிப்பதில் இன்னொரு கால் என்று திணறுகிறார்கள். இறுதியில் தடம்புரள்வது மட்டும் உறுதி.

## நன்றியாக ஆடை

பசு வளர்த்தால் பால் தரும். கோழி வளர்த்தால் முட்டை தரும். நாய் வளர்த்தால் நன்றி தரும். பிரிட்டனைச் சேர்ந்த மாவ்ரீன் என்னும் பெண்ணுக்கு அவர் வளர்க்கும் நாய்கள் கம்பளி ஆடையும் தருகின்றன.





அவர் அணிந்திருக்கும் ஸ்வெட்டர் சுத்தமான நாய் ரோமத்தில் தயாரிக்கப்பட்டது. இவர் மொத்தம் பத்து நாய்கள் வளர்க்கிறார்.

த க வ ல் பெ ட் டி

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 57

# நட்சத்திர விழாவில் வாங்கிக் கட்டினார்கள்
# திருப்பதி கணேசா திரும்பிப்பார்

ஐந்தெழுத்து நடிகை அவர். புராணப் படம் ஒன்றிலும் நடித்தவர். இலங்கை, சிங்கப்பூர், துபாய் போன்ற நாடுகளில் நட்சத்திர விழாவும் நடத்தி பிரபலமானவர். சில ஆண்டுகளுக்கு முன்னர் துபாயில் நட்சத்திர விழா நடத்த பிரபலமான இளம் பாடகர் ஒருவரும் அவருடன் சென்றிருந்தார்.

நட்சத்திர விழாவில் நடனமாட நடிகையை அழைத்த பெரும்புள்ளிகள் சிலர் நடிகை அங்கு நிற்கும்வரை தங்கள் ஒவ்வொருவரதும் கட்டுப்பாட்டில் ஒரு இரவைக் கழிக்க வேண்டும் என்று அன்புக் கட்டளை போட்டிருந்தனர்.

நடிகையும் அன்புக் கட்டளைக்கு வரவு கருதிப் பணிந்தார். இந்த விவகாரம் இளம் பாடகருக்குத் தெரியாது.

படங்களில் ஐந்தெழுத்து நடிகையின் இடையழகில் மயங்கிய இரசிகர் அவர். பாடகராக வாய்ப்புக் கிடைத்த பின்னர் சில நடிகைகளுடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது. ஆனாலும் ஒரளவுக்கு மேல் செல்ல அவர்கள் இடம் கொடுக்கவில்லை.

நட்சத்திர கலைவிழா என்பதால் நடிகையுடன் தொட்டுப் பேசுமளவுக்கு பரிச்சயம் ஏற்பட்டுவிட்டது.

ஒரே ஹோட்டலில்தான் தங்கியிருந்தனர். நடிகையின் அறைக்கு மூன்றாவது அறையில் பாடகர் தங்கியிருந்தார்.

நட்சத்திரக் கலைவிழா அன்று நடிகை நடனமாட இருந்ததால், உற்சாக பானம் அருந்தியிருந்தார்.

ஒவ்வொரு முறை நடனமாடி முடிந்தபின்னரும் நடிகைக்கு குளிர் பானம் கொடுப்பதுபோல உற்சாக பானம் கொடுக்கப்படும். நடிகையின் உதவிப் பெண் பிளாஸ்க் ஒன்றில் தயாராக வைத்திருப்பார். நடிகையின் மேக்-அப் டச்சப் பண்ணுபவரும் அந்தப் பெண்தான்.

## கைக்கெட்டியது

நேரம் ஆக நடிகைக்கு போதை உச்சத்திற்கு வந்துவிட்டது. பாடகருக்கு நடிகையின் தள்ளாட்டம் விஷயத்தை புரியவைத்தது.

நட்சத்திர கலைவிழா முடிந்தபின்னர் நடிகையைப் பாடகர்தான் கைத்தாங்கலாக அழைத்துச் சென்றார். அப்போது நடிகையின் உடலின் ஸ்பரிசம் பாடகரின் உணர்ச்சிகளை தறிகெட்டோடச் செய்து கொண்டிருந்தது.

நடிகையின் இடையை ஸ்பரிசிக்கும் வாய்ப்பு கனவிலும் கிடைக்காது என்று நினைத்தவருக்கு, இப்போது இடையை வளைத்துப் பிடித்து அணைத்துச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது.

உதவியாளர் பெண்ணும் கூடவே வந்தார்.

அறைக்குச் சென்றதும் கட்டிலில் நடிகையை இருக்கச் செய்தார் பாடகர். நடிகையோ பாடகரின் கழுத்தை தன் கைகளால் வளைத்துப் பிடித்து அவரை முத்தமிடத் தொடங்கிவிட்டார்.

இனியும் நின்றால் ஏடாகூடமான காட்சிகளைக் காணநேரும் என்று கருதிய உதவிப் பெண் தன் அறைக்கு ஓடிவிட்டார்.

கதவு தாழிடப்படாமல் இருப்பதையும் மறந்து, நடிகையும், பாடகரும் தம்மை மறந்து வேறு உலகுக்கு சென்று கொண்டிருந்தனர். நடிகை உடைகளுக்கு விடைகொடுத்துக் கொண்டிருந்தார்.

அன்று நடிகையை அழைத்துப்போக, நடிகையின் அனுமதியைப் பெற்றிருந்த புள்ளியொருவர் தனது ஆட்களுடன் நடிகையைத் தேடி வந்துவிட்டார்.

## பின்னி எடுத்தனர்

அறைக்கு சற்று தூரத்தில் ஆட்களை நிறுத்தி விட்டு, தனியாகச்சென்று அறைக்கதவை தட்ட கைவைக்க, கதவு உள்ளே தள்ளப்பட்டுவிட்டது.

கதவு விரிந்ததும் உள்ளே கண்ட கண்றாவிக் காட்சியால் பெரும்புள்ளிக்கு கோபம் வந்துவிட்டது. நடிகை தன்னை ஏமாற்றிவிட்டு இங்கு ஜாலியாக இருக்கிறாரே என்று பொங்கினார்.

தன் ஆட்களைக் கூப்பிட்டு நடிகையையும், பாடகரையும் பின்னி எடுத்து விட்டார் பெரும்புள்ளி. அரைநிர்வாணமாக அறையைச் சுற்றி சுற்றி ஓடினார் நடிகை. போதையும் தெளிந்துவிட்டது. மன்னிப்புக் கோரினார்.

பாடகர் தன் உடைகளை எடுத்தது பாதி, எடுக்காதது மீதியாக, தப்பினால்போதும் என்று தனது அறைக்கு ஓடி உள்ளே தாழ்போட்டுக் கொண்டார்.

நடிகை மன்னிப்புக் கேட்டும் அந்தப் பெரும்புள்ளி மனம் இரங்கவில்லை. நடிகையும் குழுவினரும் தங்கியிருந்த ஹோட்டல் செலவுக்கான பணத்தைக் கட்டாமல் இழுத்தடித்தார்.

மூன்று நாட்கள் நடிகை அந்த பெரும்புள்ளியுடன் தனியாக தங்க சம்மதித்த பின்னரே பணம் கட்டப்பட்டது. குழுவினர் நாடு திரும்பிய பின்னர் மூன்று நாள் கழித்து, நடிகையும், அவரது உதவிப் பெண்ணும் திரும்பிவந்தனர்.



விஜயகாந்த்-ப்ரீதா விஜயகுமார்
படம்: தர்மா

சினி விசிட்

## 'திருப்பதி கணேசா திரும்பிப்பார்'

1995ல் நடைபெற்ற சம்பவம் இது. தி.மு.க.வில் உறுப்பினராக இருந்தவர் சிவாஜிகணேசன். கடவுள் நம்பிக்கை மூடத்தனம் என்பது அன்று தி.மு.க.வின் கொள்கை.

சிவாஜி திடீரென்று தன் குடும்பத்துடன் திருப்பதிமலைக்குப் போய் வெங்கடாசலபதியை பிரார்த்தனை செய்துவிட்டு வந்தார்.

தி.மு.க. நடிகன் என்ற வட்டத்தில் இருந்து விடுபடவிரும்பி சிவாஜி செய்த தந்திரம் அது. அவர் எதிர்பார்த்தது போலவே எதிர்ப்புக் குரல்கள் கட்சிக்குள் எழுந்தன.

"திருப்பதி கணேசா திரும்பிப்பார் நீ நடந்து வந்த பாதையை!"

"நன்றி கெட்டுப்போனாயே நல்லதுதானா?" என்று தி.மு.க. மேடைகளில் பேசினார்கள்.

தலைவர் அண்ணா மட்டும், "தம்பி கணேசன் எங்கிருந்தாலும் வாழ்க" என்று வாழ்த்தினார்.

அதன்பின்னரே சிவாஜி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். காமராஜரின் சீடரானார்.

கோ...

முகப்பில் ... இருக்கவே இ... நடித்து வரு... என்று ஆசை... நட்புக்கொள்... கார்த்தி... நெருங்கிவி... சுவலட்... முயற்சி செ... என் அங்க... விதமான ... என்கிறார் ...

## கவர்ச்சிப் புயல்

"வெண்ண மேடையில் வண்ணம் பாடிடும் மின்னல் ஓவியம் பார்! உள்ள ஓடையில் மெள்ள நீந்திடும் வெள்ளிக் கெண்டை மீன் பார்"

டி. ராஜேந்தரின் மோனிஷா படத்தில் அறிமுகமாகும் கவர்ச்சிப் புயலின் பெயர் மும்தாஜ். டி.ராஜேந்தரே இரசித்து சூட்டிய பெயர். இங்கு மஞ்சள் உடையில் மயக்கும் தோற்றத்தில் அந்தப் புயல் மையம் கொண்டிருப்பதை பார்த்துக் கொள்க. வீசத் தொடங்கினால் என்னாகுமோ?



மும்தாஜ்
படம்: மோனிஷா



கரண்-நீனா
படம்: கண்ணாத்தாள்

## ரஞ்சிதாவுக்கு டும் டும்

ரஞ்சிதாவுக்கு மே 27ம் திகதி திருமணம். மாப்பிள்ளை இராணுவத்தில் அதிகாரியாம். ரஞ்சிதாவை சமாளிக்கும் தைரியத்துடன் மாலை சூட்ட முன்வந்தார். பெயர் ராஜேஷ்.

காதல் கல்யாணம்தானாம். திருமணத்தின் பின் நடிப்பு தலைமுழுக்காம். ஏற்கனவே பல நடிகைகள் கூறிய கதைதான்.

'அமைதிப் படை', 'முஸ்தபா' போன்ற படங்கள் ரஞ்சிதாவுக்கு பெயர் தேடிக் கொடுத்தன. சத்யராஜின் ஆஸ்தான நடிகைகளில் ஒருவர் என்று கிசுகிசுக்கப்பட்டவர். சினிமா உலகில் இருக்க வேண்டுமானால், கதாநாயகர்களை அனுசரிக்கத்தான் வேண்டும் என்று துணிந்து ஒப்புக்கொண்டவர்.

'சாசனம்', 'உரிமைப் போராட்டம்' ஆகிய படங்கள் ரஞ்சிதா நடித்து வெளியாக உள்ள படங்கள்.

கணவர் இராணுவ அதிகாரி என்பதால், ரஞ்சிதாவுக்கு தொல்லை கொடுக்க யாரும் துணிய மாட்டார்கள்.

## பெரிய ஆசை

'ரோஜா' படத்தில் சின்னச் சின்ன ஆசை பாடலுக்கு நடித்த மதுபாலாவுக்கு பெரியஆசை வந்துவிட்டது. அதாகப்பட்டது, திருமண ஆசை.

காதல் தோல்விகள் பல கண்ட மதுபாலா தற்போது லவ்வுவது ஒரு தொழில் அதிபரை. அவரது பெயர்: ஆனந்த் ஷா.

டிசம்பரில் திருமணம் நடக்க இருக்கிறதாம். முப்பது வயதுக்குள் திருமணம் செய்ய விரும்புகிறார் மதுபாலா.

"ஆனந்த் ஷா இனிமையானவர், நல்லவர், ஜென்டில்மேன் அவரை மணக்கப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன்" என்கிறார் மதுபாலா.

## கோபாலுவின் காதலி

'கும்பகோணம் கோபாலு' படத்தில் அறிமுகமாகியுள்ளார் மயூரி. பாண்டியராஜனின் அன்பை எக்கச்சக்கமாக சம்பாதித்துவிட்டார் என்கிறது விஷயமறிந்த வட்டாரம்.

படத்தில் கவர்ச்சியை பிழிந்து கொடுத்திருக்கிறார். என் என்றால் எண்ணெய்யாக மாறி நிற்கும் ரகம் மயூரி. ஆடைக் குறைப்பில் இயக்குநரின் விருப்பம் அறிந்து நடக்கிறார். காதல் நெருக்கத்தில் கதாநாயகனின் மனமறிந்து நடக்கிறாராம்.

மயூரிக்கு முன்னர் ரசிகாவுடன்தான் பாண்டியராஜன் ஓய்வு நேரத்தை பயனுடையதாக்கினார். மயூரி என்ன மந்திரம் போட்டாரோ மனிதர் மயூரி நாமம் பாடிக்கொண்டிருக்கிறார்.

## இல்லத் தர...
## கதாநா...

கல்லூரி ... களுக்கு விஜ... அப்பாஸ் எ... கதாநாயகன்... பிடிக்கும்.

நடுத்தர ... மணிகளுக்கு ... நாயகர்கள் யா... மணிகளிடம் ... தமிழக சஞ்... இல்லத்தரசிக... ஆய்வில் கலந்... கள். முடிவு இ...

கமல்
அரவிந்தசா...
ரஜினி
சிவாஜி
ஜெமினி
அஜித்
விஜய்
கார்த்திக்
பிரபுதேவா
தேவ் ஆனந்...
சரி, நம்...
கிட்டத்தட்ட இ...


படிப்பகம்

## ...கொடுத்தாலும்.....

தும் சுவலட்சுமிக்கு நடிப்புத் தொழில் இல்லையானால் ...து சட்டத் தொழில். அதனால் சில கொள்கைகளுடன் ... ஏனைய நடிகைகள் போல 'சான்ஸ் தருகிறேன்' ...ட்டி பணியவைக்க முடியாது. அவராக விரும்பி ...ப்தான் உண்டு.

...ர் மட்டும்தான் ஒரே ஒரு தடவை நட்புக்காக ... பின்னர் ஜாக்கிரதையாக இருக்கிறார்.

...றந்தது கல்கத்தாவில். தமிழ்பேசிப் பழக கடுமையான ...தறியுள்ளாராம். "கோடி கொடுத்தாலும் கவர்ச்சியாக ...ள காண்பிக்கமாட்டேன். கவர்ச்சி கலக்காத சகல ...ாத்திரங்களிலும் நடிக்க ஆசை"

## நான் மறுப்பேனா?

'நடிகை சுவாதி நடிப்பதற்கு முன்னர் இயக்குநர்களுக்கு நிபந்தனை போடுகிறார். தொப்புளில் பரம்பரம் விடுவது, பூவால் நெருடுவது போன்ற காட்சிகளில் நடிக்க மாட்டேன் என்கிறார்' என்று செய்தி வெளியானது.

செய்தியைப் படித்துப் பதறிப்போன சுவாதி, மறுப்பறிக்கை கொடுத்திருக்கிறார். "நான் அப்படியெல்லாம் நிபந்தனை போட்டது கிடையாது. 'நாட்டுப் புறநாயகன்' படத்தில் ஹீரோ என் தொப்புளில் மணலை அள்ளிப்போடுவது போல காட்சியில் முன்னர் நடித்திருக்கிறேன், யாரோ புரளி கிளப்பி விட்டிருக்கிறார்கள்" என்கிறார்.

## சிம்ரானின் கும் கும்

'மூன்று குத்துவிட்டு அப்படியே ஹீரோவை கட்டிப்பிடித்துக் கொள்ளம்மா' என்று சிம்ரானிடம் விளக்கினார் இயக்குநர் கே.எஸ். ரவிக்குமார்.

குத்துவிடும் கலையை சிம்ரானுக்கு கற்றுக் கொடுக்கவா வேண்டும். தயாரிப்பு உதவியாளர் ஒருவருக்கு அவர் விட்ட குத்தில் தொழிலாளர் பிரச்சனையே வெடிக்க இருந்தது.

'நட்புக்காக' படத்தில் சிம்ரானால் குத்தப்பட்டவர் சரத்குமார். கொட்டும் மழையில் நனைந்துவிட்டு, சரத்குமாரை கண்டதும் இடது தோளில் ஒரு குத்து வலது தோளில் ஒரு குத்து, முதுகில் ஒரு குத்து கொடுத்துவிட்டு, கட்டிப்பிடிப்பதுதான் காட்சி.

'மெதுவா குத்தம்மா, லேசா வயிறு பிராப்ளம்' என்று சரத் கூறியதை சிம்ரான் காதில் வாங்காமல், காட்சியில் சற்று உரக்கவே குத்துவிட்டு இறுக அணைத்துக்கொண்டார்.

கே.எஸ். ரவிக்குமார் பூரண திருப்தியுடன் கூறியது: "இந்த ஒரு அணைப்புக்கே அவனவன் விழுந்தடிச்சு ரிஸர்வ் பண்ணனும்யா."

## "ரசிகைகள் ரசிக்கிறார்கள்"


"உங்கள் படத்தில் முத்தக் காட்சி தவறாமல் இடம்பெறுகிறதே ஏன்?" இக் கேள்விக்கு கமலின் பதில்:

"இதில் என்ன தப்பு? காதலன், காதலி சந்திக்கும்போது மொழிப் பிரச்சனை இல்லாத பாஷை முத்தம்தான். காட்சிக்கு தகுந்தாற்போல விரசம் இல்லாமல்தான், என்னுடைய படத்தில் முத்தக் காட்சி இருக்கும்."

"முத்தக்காட்சியை இரசிகைகள் விரும்புவார்களா?"

"விரும்புகிறார்களோ, இல்லையோ மனதிற்குள் இரசிக்கிறார்கள். எனக்கு நன்றாகத் தெரியும்." என்கிறார் கமல்.

'காதலா, காதலா' படத்திலும் சௌந்தர்யாவின் இதழ்களை கொத்தியிருக்கிறார் கமல். என்றாலும் 'குருதிப் புனல்', 'மகாநதி' அளவுக்கு ஆழமான கொத்தல்ல.



கமல்-சௌந்தர்யா
படம்: காதலா காதலா

## திராவிடக் கழகத்தில் கமல்

கமலுக்கு அரசியல்தான் பிடிக்காது. பகுத்தறிவுப் பிரசாரம் பிடிக்கும்.

'மருதநாயகம்' படத் தொடக்க விழாவில் கறுப்பு உடையுடன் தோன்றி, ஐயர் இல்லாமல், பூசை நடத்தாமல், தேங்காய் உடைக்காமல் சினிமா உலக மூடநம்பிக்கைக்கு வேட்டு வைத்தவர் கமல்.

'காதலா காதலா' படத்திலும் போலிச் சாமியார்களை கிண்டலடிக்கிறார். அரசியல் கட்சிகளில் சேர மறுத்த கமல் திராவிடக் கழகத்தில் தன்னை உறுப்பினராக்கியுள்ளார்.

தஞ்சை பெரியாரால் உருவாக்கப்பட்டதே தி.க. என்று சுருக்கமாக அழைக்கப்படும் திராவிடர் கழகம். திராவிட முன்னேற்ற கழகத்தின் (தி.மு.க) தாய்க் கழகம் தி.க.தான்.

தேர்தலில் போட்டியிடாத அமைப்பு. பகுத்தறிவுப் பிரசாரம் மேற்கொண்டு வருகிறது. கி.வீரமணி பொதுச் செயலாளராக இருக்கிறார்.

சத்யராஜும் தி.க.மேடைகளில் ஏறி தாலி செண்டிமெண்டையும், மூடத்தனங்களையும் தாக்கிப் பேசியிருந்தார்.

## கௌரவத் தோற்றம்

கார்த்திக்-ரோஜா நடிக்கும் 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் அஜித்குமார் கௌரவ வேடத்தில் நடிக்கிறார்.

விக்ரமன் இயக்கும் இப்படத்தில் அஜித்குமாரின் பாத்திரப் பெயர் ஸ்ரீராம். ரோஜாவின் பெயர் ராதா. எஸ்.ஏ. ராஜ்குமார் இசையில் படம் வளர்கிறது.



ப்ரீதி

முகப்பில்
சுவலட்சுமி
கமல்

## காதோடு சொல்லுகிறோம்

'கொண்டாட்ட'மான படத்தில் நடிக்கும்போது சிம்ம நடிகையை கணக்குப்பண்ண ஆக்ஷன் நடிகரும், இயக்குநரும் தனித்தனியே முயற்சி பண்ணினார்களாம். இரண்டு பேருக்குமே 'அல்வா' கொடுத்து ஏமாற்றி விட்டாராம் நடிகை. இது இயக்குநர் வட்டாரத் தகவல். ஆனால் நடிகர் வட்டாரத் தகவல்படி இயக்குநருக்குத்தான் அல்வா! நடிகருக்கு கொடுக்க வேண்டியதைக் கொடுத்தாராம் நடிகை.

பிரகாச நடிகரின் மனைவி முன்னாள் நடிகை. இருவரும் அந்நியோன்யமாகவே இருந்தனர். வில்லனாக இருந்த நடிகர் கதாநாயகனாக நடிக்கத் தொடங்கியதால் நடிகைகள் சகவாசம் பெருகியதாம். சமீபத்தில் பூ வாசனையான நடிகையுடன் இரவு உலா சென்ற சமாச்சாரம் மனைவியின் காதில் விழுந்துவிட்டதாம். இதனால் ஒரே ரகளையாகி, தற்காலிக பிரிவு ஏற்பட்டுள்ளது. பிரிவைத்தடுக்க மனைவியின் சகோதரியான டிஸ்கோ நடிகை மூன்றாம் தரப்பாக தலையிட்டுள்ளாராம்.

ரஞ்சித மானவர் திருமணம் செய்ய முடிவெடுத்தது சில நடிகர்கள் மீது ஏற்பட்ட வெறுப்பால்தானாம். 'ஓசியிலே விருந்து உண்டுவிட்டு, சிபாரிசுகூட செய்யாமல் இருக்கிறார்களே' என்று சமீபகாலமாக புலம்பிக்கொண்டிருந்தார்.

'ஹீர' நடிகை மறுபடி இளம் குமார நடிகருடன் சமரசமானது தெரிந்ததே. இருவரும் விரைவில் திருமணம் செய்யப் போவதாக ஒரு கோடம்பாக்கம் வட்டாரம் கூறுகிறது. ஹீர நடிகை கர்ப்பமாக இருந்தாராம். அதனால் வயிற்றை சுத்தப்படுத்த அவரை சிங்கப்பூர் அழைத்துப் போனாராம் நடிகர். 'விரைவில் மணக்கிறேன்' என்று உத்தரவாதமும் கொடுத்துள்ளாராம்.

## உயிரில் தொடங்கி

'விடுகதை' படத்தில் நடுத்தரவயது பிரகாஷ்ராஜை காதலிப்பார் நீனா. அதைப் பார்த்துவிட்டு ஏகப்பட்ட விண்ணப்பங்களாம். 60 வயதுக்காரர் ஒருத்தர்கூட 'என் சொத்து முழுவதையும் உன் பெயரில் எழுதி வைக்கிறேன்' என்று கடிதம் போட்டாராம்.

சவுதியில் இருந்து ஒரு இரசிகர் கவிதையால் காதல் செய்திருந்தாராம். அக் கவிதையில் இருந்து ஒரு துளி:

"கண்களில் ஆரம்பித்து
இதயத்தில் முடியும் காதல் வேறு...
இதயத்தில் ஆரம்பித்து
கண்களில் முடியும் காதல் வேறு...
ஆனால் என் காதல்
உன் உயிரில் ஆரம்பித்து
என் உயிரில் முடியும்..."

"கவிதை நன்றாக இருக்கிறது, அவர் காதல்தான் நன்றாக இல்லை..." என்கிறார் நீனா.

## விருந்தும் மருந்தும்

ப்ரீதா விஜயகுமாரின் வளர்ச்சியில் அவரது தாயார் மஞ்சுளா காட்டும் ஆர்வமும், வேகமும் பல வாரிசு நடிகைகளின் வயிற்றெரிச்சலை கிளறியுள்ளது.

'எங்கள் அம்மாக்களும் இப்படி ஆர்வம் காட்டியிருந்தால் நாங்களும் எங்கேயோ போயிருப்போம். ஒரு படம் வெளியாக முன்னரே பல படங்களில் நடிக்கிறார் ப்ரீதா' என்று பெருமூச்சு விடுகிறார்களாம்.

"வாரத்தில் பல நாட்கள் விருந்து வைத்து இயக்குநர்களுக்கும், ஹீரோக்களுக்கும் கொடுக்க வேண்டிய மருந்தை கொடுக்கிறார்கள். வாய்ப்பு குவியாமல் என்ன செய்யும்?" என்கிறார் முன்னாள் நடிகையான தாய்க்குலம் ஒருவர்.

## கன்னடத்தில் கலக்கல்

தமிழ் சினிமா இரசிகர்களுக்கு திகட்டிவிட்ட நடிகைகள் வேறு மொழிப் படங்களின் ரசிகர்களை மிரட்டச் செல்வது வழக்கம். இப்போது நடிகர் ஒருவரும் கன்னடத்தில் கலக்குகிறார். அவர் ரமேஷ் அரவிந்த்.

தமிழில் பல படங்கள் நடித்தும் வரவேற்பு இல்லை. கன்னடம் சென்றார். அபிமானத்தை வென்றார். இப்போது அங்கு நம்பவர் வன் இடத்தைப் பிடித்திருக்கிறார்.

## குஷ்பு சிபாரிசு

'துள்ளித்திரிந்த காலம்' படத்தில் நடித்தபோது அருண்குமார் குஷ்புவை அக்கா என்று அழைத்தாராம். குஷ்புவுக்கு அது கூண்டோடு பிடிக்கவில்லை. அதன்பின்னர் அருண்குமார் படங்களில் நடிக்கக் கிடைத்த வாய்ப்பொன்றை புறந்தள்ளிவிட்டாராம்.

கரனுக்கு மட்டும் குஷ்புவே சிபாரிசு செய்கிறார். 'கலர் கனவுகள்' படத்தில் கரனுடன் ஜோடி சேர்ந்தபோது கரனின் அணுகுமுறை குஷ்புவைக் கவர்ந்து விட்டதாம்.

## ஜீன்சும், ஜிப்பும்

இயக்குநர் ஷங்கரை அறிமுகம் செய்தவர் குஞ்சுமோன். 'ஜென்டில்மேன்', 'காதலன்' படங்களின் பின்னர் இருவரும் பிரிந்தனர். ஷங்கர்மீது குஞ்சுமோனுக்கு கடுப்பு.

'ஜீன்ஸ்' படம் பற்றி குஞ்சுமோன் சொன்ன கருத்து என்ன தெரியுமா?

"ஜீன்ஸ் புதுசுதான், ஆனால் அதோட 'ஜிப்' ரொம்பப் பழசுப்பா."

...கிகளின்
...கன்

... மாணவி ..., சூர்யா, ...ன்று இளம் ...ளைத்தான்

...வயதுப் பெண் ... பிடித்த கதா...ர்? நூறு பெண் ...ஆய்வு செய்தது ...சிகை ஒன்று. ...ள் பலரும் இந்த ...து கொண்டார் ...தோ:

| | |
|---|---|
| | - 36 |
| ...மி | - 18 |
| | - 12 |
| | - 09 |
| | - 09 |
| | - 05 |
| | - 05 |
| | - 03 |
| | - 01 |
| ...த் | - 01 |

...ாட்டு நிலவரமும் ...துதானா?



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## கஷ்டமான கவிதை

தற்கொலை–
தண்டனைக்குரிய குற்றமில்லாதிருப்பின்
அதுவே இங்கு
பலருக்கு பயனுள்ளதாயிருக்கும்!
என்ன செய்ய?
இந்த அடிமைத்தனமிகுந்த
வாழ்தலின் சலிப்பில்
ஒரு மண்புழுவாய்
மண்ணுக்குள் புகுந்துகொண்டேன்!
0–0–0
சும்மா சொல்லக்கூடாது;
மண்ணுக்கு வெளியே என்ன உலகம்?
மண்ணுக்குள்ளேதான்
உலகமே இருக்கிறது!
0–0–0
மிஞ்சிப் போனால்
நூற்று ஐம்பது வருடங்கள் முந்திய
சமுகம்தானே வெளியே இருக்கிறது!
ஆனால்–
ஆயிரக்கணக்கில்
முந்திய சமுகமல்லவா
உள்ளே இருக்கிறது!
0–0–0
இங்கேதான் மனிதமில்லை!
மரணித்த எல்லாரிடமும் மனிதமிருந்தது!
பலரைப்பேட்டி கண்டேன்!
வாக்கு மூலங்கள் பதிவு செய்தேன்!
மதபேதம், மொழிபேதம்,
மண்ணுக்குள் இருப்பதாய்
எனக்குத் தெரியவில்லை!
செத்தவர்களைவிட,
சாகடிக்கப்பட்டவர்களே
உள்ளே அதிகமிருந்தனர்!
0–0–0
மயானம், மையவாடி, தகனத்திடல்
அனைத்திற்கும் சென்றேன்!
மண்ணுக்கு வெளியே வாழ்வோரின்
சமாதானத்திற்காய்
மண்ணுக்குள்ளேயே
பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது!
அதில் நானும் கலந்து கொண்டேன்!
0–0–0
ஆயுதம் சம்பந்தப்படாத ஒரு
சமாதானத் தீர்வுத்திட்டம்
எனக்குப் போதிக்கப்பட்டது!
நம் தீவிற்கான–
சமாதானத் தூதுவனாக
அவர்களால் நான்
ஆசீர்வதிக்கப்பட்டேன்!
0–0–0
இலங்கையில் இதுகாலவரை
விடைகாணப்படாத ஒரு வினாவிற்கு
விடைகண்டதன் மகிழ்வில்
மண்ணுக்குள்ளிருந்து மீண்டு
ஒரு வெண் புறாவாய்
வெளியே பறந்தேன்!
0–0–0
உயிரினங்களின்றி
தீவு வெறிச்சோடிக் கிடந்தது!
விகாரை, கோவில், பள்ளிவாசல்
எல்லாமே
சிதைந்து பாசிபடர்ந்து கிடக்க,
சிங்கள, தமிழிலான
ஆவணங்களையெல்லாம்
கறையான் அரித்துக் கொண்டிருந்தது!
0–0–0
சுற்றும் முற்றும் தேடிப்பார்த்தேன்!
தீவின் ஒரு மூலையில்...
குடியிருப்புக் குதவுமா? என்று
நம் நலத்தைப் பரிசோதித்துக்
கொண்டிருந்தான்
ஒரு வெள்ளையன்!

மீராவோடை எஸ். நளீம்.

## கவி விடு தூது...!

பிரியத்திற்குரிய...,
வசந்தத்தின் வருகையால்
வையமே மகிழும்
வேளை,
உன்
மடல் வராது
காணாத விழிப்பூக்களில்
சோகம்
சொட்டுச் சொட்டாய்
உதிர்கிறது...!
**
நித்தமுன்
நினைவுகள்
களவாடிச் செல்லும்
சிந்தனையை
இழுத்துப் பிடித்து
பாடப் புத்தகத்தில்
நிறுத்த முயலும்
என்
பிரம்மப் பிரயத்தனம்
எல்லாம்
பூஜ்ஜியமா(க்)கி
வரிக்கு வரி
உன்
பூ முகம்தான
சுடர்கிறது...!
**
இரு
துருவங்களாய்
எங்கோ
உயிர்பெற்ற
நம்மில்
உருப்பெற்ற
அன்பை ஆர்த்துப்
படுத்த
இன்றுவரை
பு(நெ)ரியவில்லை
தான். ஆனால்...
பாலையில்
பனிமழையாய்
உன்
பாசம் என்னை
பரவசப்படுத்தியது
பொய்யல்ல...!
**
பிரிய முடியாத
பிரியங்களுடன்
'முரசை'க்கூட
பரிசாக அனுப்பிய
உன்னால்
என்னை முற்றாக மறப்பது
சாத்தியமென்றால்...!?
**
கடைசியாக
இன்று மட்டும்...!
மௌனம் தொடர்ந்தாலும்
என்னை மறந்தாலும்
ஜீவனுள்ள வரை
உன்
'சுகமான' நினைவுகள்
எனக்கு
என்றுமே
சுமையல்ல...!!

'குறிஞ்சி நிலா' எஸ். கல்யாணி–
இரத்தினபுரி.

## உதிராத நினைவுகள்




'சேலை கட்டிய தமிழச்சிதான் இந்திய அரசின் தலைவிதியைத் தீர்மானிக்கிறார்' என்கிறார்கள் அவரது விசுவாசிகள்.

அவர்தான் ஜெயலலிதா. எம்.ஜி. ஆருடன் 28 படங்களில் இணைந்து நடித்தவர். பூக்களால் மட்டும் உடையணிந்து எம்.ஜி. ஆருடன் ஆடிப்பாடிய 'நாணமோ... இன்றும் நாணமோ...' பாடல் காட்சியில் மயங்காத இரசிகர் உண்டோ?

இடைநடுவே சோபன்பாபுவுடன் நட்பு. பின்னர் அது முறிய, மறுபடி எம்.ஜி. ஆருடன் அரசியல் உலா.

அம்மா சந்தியாவும் நடிகைதான். எம்.ஜி ஆர்., சிவாஜி ஆகியோருக்கு ஜோடியாக நடித்தவர் சந்தியா. பின்னர் அவர்களுடன் ஜோடி சேர்ந்தார் ஜெயலலிதா. செல்லப் பெயர் 'அம்மு'.

அம்முவின் துணிச்சலுக்கு ஓர் உதாரணம்: 'கங்கா கௌரி'(கன்டனம்) படப்பிடிப்பில் கன்னட வெறியர்கள், கத்தி பொல்லுகளுடன் சூழ்ந்து நின்று, 'தமிழ் ஒழிக' என்று கூறச் சொன்னார்கள். "நான் தமிழச்சி, என் தாய் மொழியை ஒழிக என்று கூறமாட்டேன். முடிந்ததைச் செய்யுங்கள்!" என்று கூறிவிட்டார்.

## மறக்கவில்லை!

பாலைவனப் பரப்பில்
கண் பார்வையெங்கும்
மணல் மேடுகள்!
***
உன்–விழி
வீச்சில்
குளிர்ந்துபோன
நாட்களை எண்ணி
மணற்குவியலோடு
போராடும்–என்
பாதங்கள்– பழைய
விலாசம்
தேடும்!
***
இற்றுப் போன
ஈச்சையும்–உலர்ந்து
கெட்டியான
ரொட்டியும்– இன்னும்
உன்–காதல்
நினைவுகளுமே–இந்தப்
பாலைநிலத்தில்–என்
சுவாசமாக...!
***
மெலிந்த
ஒட்டகையின்
பயணத்திலும்–மணற்
புயலின்
வலியிலும்–இங்கே
தணலாய்த்
தகிக்கும்
வெய்யிலும் கூட– என்
காதல் காயங்கள்
காயவில்லையடி!
***
சூடும்–குளிரும்–என்
தேகத்தை
வதைக்கையிலும்
நெற்றிவேர்வை
பாதம்வரை
படர்கையிலும் கூட–
உன்
சுவாசச் சூடும்...
இதழின் ஈரமும்
இன்னும்
மறக்கவேயில்லை!

உக்குவெளை–அக்ரம்.

## காத்திருப்பு

இதயச் சுவர்களின்
இருப்பிட மானவளே!
இன்னும்,
உன் எண்ணத்தின் எதிரொலிகள்
என்னிடம் வந்து சேரவில்லை!
••
இளமைக் கனவுகளுடன்
இன்ப வாழ்வின் எண்ணங்களுடன்
எங்குதான் இருப்பையிழந்தாயோ...?
••
நினைவழிக்கும் விழிகளுடன்
நீண்ட சயனத்திற்கு
நிர்ப்பந்திக்கப்பட்டாயோ...?
••
இந்த வெண்முகிற் கூட்டத்தில்
அமிழ்ந்துவிடும் தாரகை போல்...
உன் எண்ண அலைகள்
அமிழ்ந்து போவதா?
••
இன்னமும்,
உன்முகம் காணும்
முகவரிக்காக,
இந்த இதயச் சுவர்கள்
காத்திருக்கின்றன!

துவாரகன்–தொண்டைமானாறு.

## தேன் கிண்ணம்

## பேனா நண்பர்கள்


பெயர்: என். கலைச்செல்வன்,
வயது: 19
முகவரி: 134, ஆலடி வீதி, தோணிக்கல், வவுனியா.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.


பெயர்: பி. சியாமளா,
வயது: 27
முகவரி: EFTYCHIDOU-45, 11634-ATHENS, GREECE.
பொழுது போக்கு: ரீ.வி., பத்திரிகை.


பெயர்: எச். நியாஸ்,
வயது: 20
முகவரி: 71/சி, சின்னப்பள்ளி வீதி, அக்கரைப்பற்று-03.
பொழுது போக்கு: வழமையானவை.


பெயர்: எஸ். ரஃபீஸா,
முகவரி: BLOCK NO-12 STREET NO-13. HOUSE NO-17, ANDALUS STATE OF KUWAIT.
பொழுது போக்கு: வழமையானவை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(31.05.1998 தொடக்கம் 06.06.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

இடபம் - சூரியன், புதன், செவ்வாய்.
சிம்மம் - இராகு.
கும்பம் - கேது.
மீனம் - வியாழன் (வக்கிரகம்)
மேடம் - சனி, வெள்ளி.

சந்திரன்– கர்க்கடகம், சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், காரியானுகூலம் | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- இனசன மகிழ்ச்சி, பலவித பேறு. | பகல் | 12 மணி |
| சனி- முயற்சி பலிதம், வீண் அலைச்சல். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், வீண் மனஸ்தாபம். | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | மு.ப. | 10 மணி |
| புதன்- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், வெளியிட வாழ்க்கை. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, உறவினர் உதவி. | பி.ப. | 2 மணி |
| சனி- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை; மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், காரியசித்தி. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், இனசன நன்மை. | பகல் | 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, காரியத் தடை. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- பெரியோர் சகாயம், பண வரவு. | பகல் | 11 மணி |
| சனி- இனசன நன்மை, தொழில் உயர்ச்சி. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பகல் | 11 மணி |
| புதன்- பிரயாணக் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பண வரவு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மறைமுக எதிர்ப்பு. | பி.ப. | 2 மணி |
| சனி- தூரஇடப் பயணம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- குடும்ப சுகம், சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. | பகல் | 11 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, முயற்சி பலிதம். | மு.ப. | 10 மணி |
| சனி- வீண் முயற்சி, காரியத்தடை. | பி.ப. | 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மறைமுக எதிர்ப்பு, மனக் கவலை. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, கடன்பயம். | பகல் | 11 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவமிகுதி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, மனக் கவலை. | மு.ப. | 9 மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணமுடங்கல். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 12 மணி |
| சனி- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் | 11 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 மணி |
| சனி- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மனக்கிலேசம், பிள்ளைகளால் கவலை. | பகல் | 12 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், உறவினர் உதவி. | பகல் | 12 மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக் கவலை. | பகல் | 11 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பி.ப. | 2 மணி |
| சனி- வீண் துயர், அந்நியர் உதவி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- குடும்பக் கவலை, பணச் செலவு. | பகல் | 11 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், கடன் படல். | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியத்தடை. | பகல் | 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | பகல் | 11 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பண வரவு. | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 12 மணி |
| சனி- வீண் முயற்சி, பொருள் நஷ்டம். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வீண் துயர், நண்பர்களால் தொல்லை. | பகல் | 12 மணி |
| திங்கள்- இனசன நனமை, சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- மறைமுக எதிர்ப்பு, காரியத்தடை. | பி.ப. | 2 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவ மிகுதி. | பகல் | 11 மணி |
| வியாழன்- பெரியோர் சகாயம், பண வரவு. | பகல் | 12 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பகல் | 11 மணி |
| சனி- வீண் முயற்சி, மனக் கவலை. | பி.ப. | 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- மறைமுக எதிர்ப்பு, பெரியோர் நட்பு. | பி.ப. | 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பகல் | 11 மணி |
| புதன்- இனசன நன்மை, காரியத்தடை. | பி.ப. | 1 மணி |
| வியாழன்- பெரியோர் நட்பு, பலவித பேறு. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. | 2 மணி |
| சனி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்

## சோம்பேறியா நீங்கள்?



சோம்பேறித்தனத்தைப் போக்குவது எப்படி? இதோ சில அரிய யோசனைகள்:

* எந்தவொரு வேலையையும் நாளை பார்த்துக்கொள்ளலாம் என்று ஒதுக்கி வைக்கக்கூடாது. அப்படி ஒதுக்கி வைத்தால் சோம்பேறித்தனத்தை வெல்ல முடியாது. அன்றைய வேலையை அன்றே முடித்து விடுங்கள்.
* நேரமும் காலமும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அதனால் அதை அதை அந்தக் கால கட்டத்தில் செய்து முடித்து விடுங்கள்.
* ஒரு வேலையைச் செய்யத் தொடங்கு முன்பு அதைப்பற்றிச் சிந்தித்து, எப்படி அதைச் செய்வது என்று முடிவு செய்யுங்கள். அந்த வேகத்தில் திருப்தியாக வேலையை செய்து முடிக்கும்போது மனதுக்குத் தனித்தெம்பு கிடைக்கும்.
* அதிக நேரம் எடுத்து ஒரு வேலை செய்யவேண்டி இருந்தால், அதன் முக்கியத்துவம் கருதி ஒரு சில பிரிவுகளாகப் பிரித்து அந்தப் பணியை முடிக்கலாம்.
* ஒரு வேலையை முடிக்கத் திட்டமிட்ட பின்பு இன்னொரு வேலையையும் செய்ய முன்வரக்கூடாது. விரைவாக ஒரு வேலையை முடித்துவிட்டு அடுத்த வேலைக்குச் செல்லுங்கள்.
* சிரமமான ஒரு வேலையைச் செய்து முடிக்கும்போது உங்களுக்குள் சந்தோஷம் கொள்ளுங்கள். அந்த சந்தோஷம் வேலையில் அதிக ஆர்வத்தைத் தூண்டும்.
* தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டே இருங்கள்.
* 'முடியாதது எதுவுமில்லை' என்று மனதிற்குள் அடிக்கடி சொல்லிக் கொள்ளுங்கள்.

## கண்ணுக்கு ஓய்வு அழகு



தொடர்ந்து ரீ.வி. பார்க்கும்போது சிலருக்கு தலைவலி வரும். கண்ணுக்குத் தேவையான அளவு ஓய்வு கொடுக்காமல் இருப்பதாலே அந்த மாதிரித் தலைவலி தோன்றும். ரீ.வி.சினிமா பார்க்கும்போது இடையிடையே கண்ணை மூடி சில நிமிடங்கள் கண்களுக்கு ஓய்வு கொடுங்கள்.

விளம்பரங்கள் போடும்போது கண்களை மூடிக்கொண்டால் கூடப்போதும். தொடர்ந்து புத்தகங்களைப் படிக்கும்போது கண்களை மூடி ஓய்வு கொடுங்கள்.

புத்தகம் வாசிக்கும்போது வெளிச்சம் பின்பகுதியில் இருந்து விழ வேண்டும். வெளிச்சம் குறைவான இடத்தில் இருந்து வாசிக்கக்கூடாது. அதுபோல தேவைக்கு அதிகமான வெளிச்சம் கண்களில் விழுந்தாலும் ஆரோக்கியக் குறைவு ஏற்படும்.

தினமும் எண்ணெய் தேய்த்துக் குளித்தால் கண்ணுக்குப் பார்வைத் தெளிவும், அழகும் கிடைக்கும். எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால் எண்ணெய்த் தன்மை மயிர்க்கால்கள் மூலம் உடலில் இறங்கி உடலுக்குப் பலத்தையும் கொடுக்கும்.

## மீன் சமையல்

மீன் வகைகளைச் சமைப்பதற்கு முன்பாக நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டியது முக்கியம்.

மீன் செதில் அதிகமாக இருந்தால் முதலில் கத்தியால் செதில் நீக்கிய பிறகு ஒரு தரம் உப்புப் போட்டு நன்றாக உரசிக் கழுவுங்கள்.



மீனின் வால்பக்கத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டு ஒரு கூர் மழுங்கிய கத்தியால் தலைப் புறமாக செதுக்கிக் கொண்டே வந்தால் செதிலை எளிதாக நீக்கலாம்.

ஆற்று மீன், குளத்து மீனில் வழுவழுப்பு இருக்கும். சொர சொரப்பான தரையில் உரசிக் கழுவினால் போய் விடும்.

விலாங்கு மீன் சுத்தம் செய்வது எளிது. கழுத்துப்புறமாக தோலை லேசாகக் கீறி விட்டுக் கொள்ளவும். பிறகு வெட்டிய ஓரமாகக் கொஞ்சம் தோலைத் தசையிலிருந்து பிரித்து விட்டுக் கொள்ளவும். மீனின் தலையை ஒருவர் இறுக்கிப் பிடித்துக்கொள்ள, அடுத்தவர், பிரித்து விட்ட தோலைப் பிடித்துச் சட்டென இழுத்தால் அப்படியே உரிந்துவிடும்.

மீனை முழுவதுமாகச் சமைப்பது என்றால் வயிற்றுப் பகுதியில் கீறிக் குடலை எடுக்க வேண்டும். தலையில் செவுள்களைப் பிளந்து கொண்டு இருபுறச் செவுள்களையும் சேர்த்து இழுத்தால் குடல் வரை வந்துவிடும். ஆனால் குடல் பகுதியிலும் கீறிச் சுத்தம் செய்ய வேண்டும்.

துண்டம் இடுவது என்றால் தலை முழுவதையும் ஒரு துண்டாக்கி விட்டுக் குடலை நீக்கி, அதன் பின் கூர்மையான கத்தி கொண்டு மெல்லிய துண்டுகளாக வெட்டி எடுக்கவேண்டும்.

வயிற்றில் சினைப்பகுதி இருந்தால் இடையில் வெட்டுப் படாமல் முழுவதாக எடுத்து கறியில் போடலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DU

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-06-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 37

**புவனா**







சிறுவனாக இருந்தாலும் தன்னைச் சூழ நடப்பனவற்றை புரிந்து கொள்ளக்கூடிய அறிவு முதிர்ச்சி வில்லியம்சுக்கு ஏற்பட்டிருந்தது.

வில்லியம்சுக்கு தனக்கும் சாள்ஸுக்கும் இடையிலான விரிசல் தெரிந்துவிடக் கூடாது என்றே டயானா நினைத்தார்.

தன்னைப் பற்றியோ, சாள்ஸைப் பற்றியோ வெளியாகும் சர்ச்சைக்குரிய செய்திகள், காதல் விவகாரங்கள் வில்லியம்ஸின் பார்வையில் பட்டுவிடக்கூடாதே என்பதும் டயானாவின் கவலையாக இருந்தது.

ஜேம்ஸ் ஹெவிட் தனக்கும் டயானாவுக்கும் இடையிலான நெருக்கம் தொடர்பாக எழுதிய நூல் வெளியானதும், எங்கே வில்லியம்ஸின் கையில் கிடைத்து விடுமோ என்றுதான் டயானா பயந்தார்.

ஜேம்ஸ் ஹெவிட்டை வில்லியம்சுக்கும் நன்கு தெரியும். வில்லியம்சுக்கும் குதிரைப் பயிற்சி சொல்லிக் கொடுத்திருக்கிறான்.

'அங்கிள்' என்றுதான் வில்லியம்ஸ் அவனை அழைப்பதுண்டு.

தன் கைக்கு கிடைத்த ஹெவிட்டின் புத்தகத்தை டயானா மறைத்து வைத்திருந்தார்.

### தவிப்பு

யார் கையில் கிடைக்கக் கூடாது என்று கருதி அந்தப் புத்தகத்தை மறைத்து வைத்தாரோ, அதே வில்லியம்ஸ் ஜேம்ஸ் ஹெவிட்டின் புத்தகமும் கையுமாக ஒருநாள் டயானா முன்னாள் நின்றான்.

டயானாவுக்கு, கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. 'என்ன கேட்கப் போகிறானோ? எப்படி சமாளிப்பது?' என்று இதயம் படக் படக் என்று அடித்துக் கொண்டது.

யாருக்காவது ஃபோன் செய்வதுபோல நழுவிப் போய்விடலாமா? என்றுகூட மனது குறு குறுத்தது.

அதற்கு முன் எப்போதுமே டயானா இப்படி மாபெரும் சங்கடத்தில் மாட்டிக்கொண்டு முழித்ததில்லை.

டயானா நினைத்துப் பயந்ததுக்கு மாறாக, இளவரசர் வில்லியம்ஸ் அப்புத்தகத்தை காண்பித்த படி: "கவலைப்படாதேயம்மா, அந்த அங்கிளைத்தான் எல்லோரும் திட்டுகிறார்கள்" என்றான்.

டயானாவுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை. கண்ணீர் மல்க மகனை வாரியணைத்துக் கொண்டு விசும்பினார்.

இளவரசர் வில்லியம்ஸ் தன் தாயாரின் நெற்றியில் அன்போடு முத்தமிட்டான். "வா அம்மா! வெளியே காற்றாடப் போய்விட்டு வரலாம்!"

தாயும் மகனும் அன்று அரண்மனைத் தோட்டத்தில் உலாவினார்கள். வில்லியம்ஸ்சுக்கு சைக்கிள் ஓடக் கற்றுக்கொடுத்தார் டயானா.

வில்லியம்ஸை சைக்கிளில் அமரவைத்து ஒடி ஒடிதள்ளிக் கொண்டிருந்தார்.

வில்லியம்ஸ் ஒரே குஷியில் திளைத்தான். அந்தச் சந்தோசம் டயானாவையும் தொற்றிக் கொண்டது.

### கோமகன் தனிமையில்

பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் டயானாவின் அனுதாபத்துக்கு உரியவராக இருந்தவர் எலிசபெத் மகாராணியின் கணவர் எடின் பரோ கோமகன்.

எலிசபெத் மகாராணிக்கு இருந்த செல்வாக்கில் சிறிதளவுகூட அவருக்கு இருக்கவில்லை.

பக்கிங்ஹாம் மாளிகையில் எடின்பரோ கோமகன் பெரும்பாலும் தனிமையில்தான் வாடிக்கொண்டிருப்பார்.

டயானாமீது அவருக்கு மதிப்பும், மரியாதையும் இருந்தது. டயானாவும் அவரை மதிப்போடு நல்ல மாமனாராகவே நேசித்தார்.

ஆனாலும், மகாராணியின்மீதோ, மகன் சாள்ஸ்மீதோ செல்வாக்கு செலுத்தும் தைரியமோ, அதிகாரமோ எடின்பரோ கோமகனிடம் கிடையவே கிடையாது என்பதும் டயானாவுக்கு தெரியும்.

மகாராணியின் கணவர் என்பது தவிர, வேறெந்த தனியான செல்வாக்கும் இல்லாத ஒருவராக அவர் காட்சியளித்தார்.

பக்கிங்ஹாம் அரண்மனையில் அவர் ஒரு தனித் தீவு. மகன்மார்கூட அவரை கலந்தாலோசிப்பது கிடையாது.

ஒருமுறை மருமகளான டயானாவிடம் தனதுமனப் புழுக்கம்தீர கொட்டித்தீர்த்து விட்டார்.

அதிகம் பேசாதவரும், அதிர்ந்து பேசாதவருமான தன் மாமனாரின் தனிமையும், வேதனையும் டயானா மனதையும் வேதனைக்குள்ளாக்கின.

தனது மாமனாருக்கு பேச்சுத்துணையாக என்றாலும் இருக்க விரும்பினார் டயானா. ஆனால் அரண்மனை சம்பிரதாயப்படி, மருமகள் மாமனாருடன் பேசுவதற்குக்கூட விதிமுறைகள் இருந்தன.

'கண்டறியாத அரச குடும்பம் இங்கே. எல்லோரும் பொம்மைகள், ஜடங்கள் வாழ்க்கையை அதன் இயல்பான போக்கில் இரசிக்கத் தெரியாத, இரசிக்கக் கொடுத்துவைக்காத ஜடங்கள்' என்று மனதுக்குள் பல தடவைகள் திட்டித் தீர்த்திருப்பார் டயானா.

### டயானா பாஷன்




அரண்மனைச் சோகத்தில் வாடினாலும், உடைகள் விஷயத்தில் தனி ஈடுபாடு காட்டுவதை டயானா கைவிடவில்லை.

'அரச குடும்பத்திற்கு மாதாமாதம் பணம் கொட்டுகிறது. ஏன் விடவேண்டும். செலவு வைக்க வேண்டாமா, அதுதான் ஆடம்பரமானதும், அதிக விலையானதுமான ஆடைகளைத் தேடிப் பிடிக்கிறேன்' என்று தன் நண்பி ஒருவரிடம் டயானா கூறினாராம்.

டயானாவின் ஆடை அலங்காரம், முடி அலங்காரம் என்பவை மேலை நாட்டுப் பெண்களின் பாஷனாகியது.

டயானா எப்படி உடை அணிகிறார், எப்படி தலை சீவுகிறார், அவரது புதுப் பாணி என்ன என்றெல்லாம் கண்டறிந்து தாமும் அப்படியே பின்பற்றினார்கள்.

தன்னைப் பின்பற்றி ஒரு பாஷனே உருவாகி வருவதை முதலில் டயானா விரும்பவில்லை. பின்னர் போகப் போக அதுவே சுவாரசியமான விஷயமாகிவிட்டது.

அதனால் புதியவகை ஆடைகளை டிசைன் பண்ணுவதில் அவரே நேரடியாக ஈடுபட்டார். அது பொழுதுபோக்காகவும் இருந்தது.

"மாட்சிமை பொருந்திய நாளைய மகாராணி தையல்காரியாகிவிட்டார்" என்று அரண்மனை வட்டாரங்களில் டயானாவின் முதுகின் பின்னால் கேலிப் பேச்சுக்கள் எழுந்தன.

டயானாவுக்கும் அது தெரியும். அவர் அதனைப் பொருட்படுத்தவில்லை.

புதியரக ஆடைகளுடன் டயானா பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தார்.

சென்ற இடமெங்கும் கமராக்கள் மின்னின.

டயானாவின் வர்ணப்படங்கள் உலகெங்கும் வெளியாகின. 'டயானா..டயானா... டயானா...'

சாள்ஸுக்கும், அவரது சகாக்களுக்கும் ஜீரணிக்க முடியாத எரிச்சல்.

### மயக்கம்

டயானாவின் புகழ், டயானாவைப் பற்றிய கிசுகிசுக்கள் போன்றவற்றால் டயானாமீது பெரும் பிரமுகர்களுக்கும் ஒருவித மயக்கம் ஏற்பட்டது.

டயானாவை வரவேற்பதில் போட்டி போட்டனர். கைகுலுக்கும் பாவனையில் அவரது கைகளை ஸ்பரித்து திருப்தி கண்டனர்.

அன்பு மிகுதியாலும், மரியாதை நிமித்தமும் சில வயதான பிரமுகர்களுக்கு டயானா கன்னத்தில் முத்தமிட்ட காட்சிகள் பத்திரிகைகளில் பிரசுரமாக, அந்தப்பாக்கியம் தமக்கில்லையே என்று ஏங்கிய சீமான்களும், கோமான்களும் பலர் இருந்தனர்.

டயானாவும் தனக்குள்ள செல்வாக்கை அரச குடும்பத்தினருக்கு காண்பிக்க விரும்பினார்.

சாள்ஸ் தன்னை உதாசீனப்படுத்தி உல்லாசமாகத் திரிவதற்கு பதிலடியாக தனது நடவடிக்கைகளைத் திட்டமிட்டார்.

கவர்ச்சியான உடைகளையும் அணியத் தொடங்கினார். அந்த உடைகளோடு டயானாவைக் கண்ட மரியாதைக்குரிய சீமான்கள்கூட திறந்தவாய் மூடாமல் இரசித்தனர்.

மரியாதையாகப் புன்னகை செய்தாலும் அவர்களது கண்கள் எங்கெங்கே தாவுகின்றன என்பதை டயானா அறியாதவரல்ல.

காரிலிருந்து டயானா இறங்கும்போது தெரிந்த கால் அழகைக்கூட அட்டைப் படமாக வெளியிட்டது ஒரு பத்திரிகை.

டயானாவின் கால் அழகு பற்றி பெண்களிடம் கருத்து கேட்டும் வெளியிட்டிருந்தது.

அந்தளவுக்கு டயானா மோகம் பிரிட்டனிலும், பிரிட்டனுக்கு வெளியிலும் பரவியிருந்தது.

### ஸ்டெபியுடன்

1991ல் டென்னிஸ் போட்டியைக் காண்பதற்காக மகன் வில்லியம்ஸ்சுடன் சென்றிருந்தார்.

டென்னிஸ் வீராங்கனை ஸ்டெபி கிராஃபின் பரம ரசிகை டயானா. ஆட்டம் முடிந்ததும் டயானாவும், வில்லியம்சும் ஸ்டெஃபியின் அருகே சென்றனர்.

ஓய்வெடுக்கும் அறைக்கு சென்று கொண்டிருந்த ஸ்டெஃபியை இருவரும் வழிமறித்தனர்.

டயானாவை உடனையாக ஸ்டெஃபியால் அடையாளம் காண முடியவில்லை. புகைப்படங்களில்தான் கண்டிருக்கிறார்.

"நான்தான் டயானா, இது என் மகன் வில்லியம்ஸ்" என்று டயானா அறிமுகம்



செய்தபோது ஸ்டெஃபியால் தன் கண்களையே நம்பமுடியவில்லை.

இத்தனை எளிமையாக இளவரசி தன்னிடம் வந்து தம்மை அறிமுகம் செய்வார் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

அவரை அணைத்து டயானா முத்தம் கொடுத்தார். வில்லியம்ஸ்சும் ஸ்டெஃபியின் கன்னத்தில் முத்தமிட்டார்.

ஸ்டெஃபி திகைத்து சிலையாக நின்றார்.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**ஊறுகொடவத்தை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் ☞ **மு.விஜயலட்சுமி,**
ஜே-21, நவகம்புர, ஊறுகொடவத்தை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


**தினமுரசு–அம்மன் ஜுவல்ஸ்**
**இணைந்து வழங்கும்** தங்கமாலை **பரிசுப் போட்டி**

**தினமுரசு – அம்மன் ஜுவல்ஸ்**
**பரிசுக் கூப்பன்**
**இல 03**

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

www.padippakam.com





அண்டஞ் சிதறினால் அஞ்ச மாட்டோம்;
கடல்பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம்;
யார்க்கும் அஞ்சோம் எதற்கும் அஞ்சோம்;
எங்கும் அஞ்சோம் எப்பொழுதும் அஞ்சோம்!
–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# பணக்காரனும் பணப்பையும்

பணக்காரன் ஒருவன் ஒரு சமயம் பயணம் சென்றபோது தனது பணப் பையைத் தொலைத்து விட்டான். அந்தப் பையில் ஐயாயிரம் ரூபாய் இருந்தது.

அந்தப் பையை எடுத்துக் கொடுப்பவருக்கு ஆயிரம் ரூபாய் வெகுமதியாக அளிப்பதாகப் பணக்காரன் அறிவித்தான்.

அந்தப் பணப்பை ஒரு தொழிலாளியின் கையில் அகப்பட்டது. அவன் அதை பணக்காரனிடம் எடுத்துக்கொண்டு போய்க் கொடுத்தான்.

பணக்காரன் தான் அறிவித்தபடி பணப்பையை எடுத்துக் கொடுப்பவருக்கு ஆயிரம் ரூபாய்க் கொடுக்க மனம்வரவில்லை. உடனே அவன் தொழிலாளியிடம்,

"பணப்பையில் ஐயாயிரம் ரூபாய் இருக்கின்றது. அத்துடன் ஒரு இரத்தினக் கல்லும் இருந்தது. அதைக் காணவில்லை. அதைக் கொண்டு வந்து தந்தால்தான், நான் அறிவித்தபடி உனக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பேன்;" என்றான்.

தொழிலாளி: "அதற்குள் இரத்தினம் ஒன்றும் இருக்கவில்லை!" என்றும் "பணம் மட்டுமே இருந்தது." என்றும் கூறினான்.

ஆனால் பணக்காரன் "பணப் பையில் இரத்தினம் இருந்தது" என பிடிவாதம் செய்தான்.

இறுதியில் தொழிலாளி, நீதிமன்றத்தில் வழக்குப்போட்டான்.

நீதிமன்றத்திற்கு தொழிலாளியும், பணக்காரனும் அழைக்கப்பட்டனர்.

நீதிபதி, பணக்காரனைப் பார்த்து,

"நீ தொலைத்த பையில் என்ன இருந்தது?" எனக் கேட்டார்.



அதற்குப் பணக்காரன்.

"ஐயாயிரம் ரூபாவும், ஒரு இரத்தினக் கல்லும் இருந்தது" என்று கூறினான்.


இதைக்கேட்ட நீதிபதி பணக்காரனிடம், "நீர் தொலைத்த பையில் ஐயாயிரம் ரூபாய் பணமும், ஒரு இரத்தினமும் இருந்ததாகக் கூறுகிறீர். ஆனால் தொழிலாளி கண்டெடுத்த பையில் ஐயாயிரம் ரூபாய் மட்டும் இருந்திருக்கிறது.

எனவே தொழிலாளி கண்டெடுத்த பணப்பை நீர் தொலைத்த பையாக இருக்க முடியாது. ஆகவே இந்தப் பணப்பையின் சொந்தக்காரர் யார்? என்று தெரியும்வரை இது அரசாங்கத்திடம் இருக்கட்டும்!" என்று தீர்ப்பளித்தார்.

அத்துடன் பணப்பையை ஒப்படைத்த தொழிலாளியின் நேர்மையைப் பாராட்டி அவனுக்குச் சன்மானமும் அளித்தார் நீதிபதி.


பணக்காரர் தான் அறிவித்தபடி ஆயிரம் ரூபாயைத் தொழிலாளிக்குக் கொடுத்திருந்தால்நாலாயிரம் ரூபாய் அவனுக்குக் கிடைத்திருக்கும். முழுப்பணமும் தனக்குக் கிடைக்க வேண்டும் என்ற பேராசையால் வெறுங்கையுடன் வீடு திரும்பினான்.

# அதிசயம் – ஆனால் உண்மை!



**சுவரில் பூச்செடி:** ஜோர்டான் நாட்டில் உள்ள ஜெராஸ் அரண்மனை பாழடைந்து இருந்தாலும், மதில் சுவர்களில் அமைந்துள்ள பூச்சாடிகளில் செடிகள் பூத்துக்குலுங்குகின்றன. இதில் ஆச்சரியம் என்னவென்றால் 1800 ஆண்டுகளுக்குமுன் நட்ட செடிகள்தான் இப்போதும் இருக்கின்றன.

**குண்டுத்தக்காளி:** அமெரிக்காவைச் சேர்ந்த மிர்லின் வின்டர் என்பவர் வளர்த்த தக்காளிச் செடியில் காய்த்த தக்காளி 3இறாத்தல் நிறையுடையதாக இருந்தது.



**பியானோ தட்டச்சு:** மிகப் பழமையான இந்தத் தட்டச்சு இயந்திரத்தில் பியானோ இசைக்கருவியும் அமைந்திருந்தது.



**தங்கப்பாத்திரம்:** போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் உள்ள தொல்பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தப் பாத்திரம் (கிறிஸ்தவர்களின் வழிபாட்டில் அப்பம் வைக்கப்படும் பாத்திரம்) 1498ல் வாஸ்கொடகாமா இந்தியாவிலிருந்து முதன் முதலாகக் கொண்டு சென்ற தங்கத்தால் செய்யப்பட்டது.



# வாரம் ஒரு நாடு

## கினியா



தலைநகர்– கோனாக்ரி
பரப்பு– 2,45,857 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை– 67 இலட்சம்
மொழி– ஃபிரெஞ்சு, எட்டுதேசிய மொழிகள்
எழுத்தறிவு–35% (ஃபிரெஞ்சு)
சமயம்– இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் பழங்குடி
நாணயம்– கினியா ஃபிராங்க்
தனிநபர் வருமானம்– 430 டொலர்

**அமைவிடம்:**

மேற்கு ஆபிரிக்க நாடு. அட்லாண்டிக் கடலில் கடற்பரப்பைக் கொண்டுள்ளது. இதன் வடக்கே கினியா பிஸ்ஸௌ, செனகல் மற்றும் மாலியும், கிழக்கே ஐவரி கோஸ்டும், தெற்கில் சியர்ரா லியோன் மற்றும் லைபீரியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.


**வரலாறு:**

ஃபிரான்ஸிடமிருந்து 1958ல் சுதந்திரம் பெற்றது. 1984ல் இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி.

**பொருளாதாரம்:**

கோப்பி, தேயிலை, நிலக்கடலை போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உலக ஃபொக்சைட் உற்பத்தியில் முக்கிய இடம் பெறுகின்றது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.06.1998.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 247**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 245

**பரிசுக்குரியவர்:**
அ. சிந்துஜன்,
பிள்ளையார் கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். எஸ். வேணுகரன், விஷ்ணு மகா வி.,பெரிய நீலாவணை, கல்முனை. | எம்.எச்.எம். ஹனீமா, அந்–நூர் மு.ம.வி, பானகமுவ, குருநாகல, |
| யோசப் சுகிர்தா, ஸ்ரீ சண்முகா இ.ம.கல்லூரி, திருகோணமலை. | செல்வன் இ.கே. ரகு, கந்தேநுவர, அல்வத்த. |
| இ.கி. பிறேம்நாத், ஆயர் இல்லம், பட்டித்தோட்டம், மன்னார். | வை. சியாட், அநு/முஸ்லிம் மகா வித்., நேகம, நேகம்பஹா. |
| எஸ். சுதர்ஷன், 18ம் கட்டை, கலஹா. | என்.பி.எ.ஃப். றியாஸா, முஸ்லிம் மகா வித்தியாலயம், உலப்பனை. |
| வ. யுரேக்கா, சாந்த கிளயர் மகளிர் ம.வி., வெள்ளவத்தை, கொழும்பு-06. | தி. திரேக்கா, சைவபிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா. |

# அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல்




இன்றைய உலகினை மிகக் குறுகியதோரிடமாக மாற்றியமைத்த சாதனம் தொலைபேசி. இப்பரந்த உலகத்தில் எந்த மூலையிலிருக்கும் ஒருவருடன் ஒரே நொடியில் தொடர்புகொண்டு தகவல் பரிமாறிக்கொள்ள தொலைபேசி வசதியளிக்கிறது. தொடர்புத்துறையில் மகத்தான புரட்சியை ஏற்படுத்திய தொலைபேசியை முதன் முதலில் உருவாக்கிய பெருமை பிரிட்டனில் ஸ்கொத்லாந்திலுள்ள எடின்பரோவைப் பிறப்பிடமாகக் கொண்ட அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல்லையே சாரும்.

கிரஹாம் பெல், காது கேளாத வாய்பேச முடியாத பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும் தொழிலினை ஏற்றார். இப்பணியின் மூலம் அவர் பெற்ற அனுபவமே கம்பிகளின் உதவியின் துணையுடன் தொலைவிலுள்ள ஒருவருடன் தொடர்புகொள்ளும் கருவியைக் கண்டுபிடிக்க உதவியது. தான் உருவாக்கிய கருவியை அமெரிக்காவில் ஃபிலடெல்ஃபியாவில் நடைபெற்ற கண்காட்சியின்போது செயல்முறைப்படுத்திக் காண்பித்தார். கிரஹாம் பெல் ஓர் அறையிலிருந்த வண்ணம் தன் கருவியின் மூலம் பேசினார். வெகு தூரத்துக்கப்பால் மற்றுமொரு அறையில் பிரேஸில் நாட்டு மன்னர் இருந்தார். பெல்லினால் உருவாக்கப்பட்ட கருவியின் வடிவம் கொண்ட மற்றொரு பகுதி மன்னரின் காதில் பொருத்தப்பட்டிருந்தது. பெல்லின் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள் மன்னரின் காதில் தெளிவாக விழுந்தன. அவருக்கு ஏற்பட்ட வியப்புடன் சற்றுப் பயமும் சேர்ந்துகொண்டது. "கடவுளே! இது பேசுதே!" என்று காதிலிருந்த கருவியைத் தவறவிட்டார். தரையில் விழுந்து அது நொருங்கியது.

இத்தகைய மாபெரும் புரட்சியைச் செய்த அலெக்ஸாண்டர் கிரஹாம் பெல் 1922ல் கனடாவில் காலமானார்.

# பொய்த்தேள்



படத்தில் தேள் போன்று காணப்படும் இதன் பெயர் பொய்த்தேள். பார்ப்பதற்கு தேள் போன்று காட்சியளிப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. உண்மையில் இந்த பொய்த்தேள் சிலந்தி இனத்தைச் சேர்ந்தது.

பட்டுப்போன்ற மென்மையான கூடுகளை மழைக் காலங்களில் கட்டும். துருவப் பகுதிகளைத் தவிர உலகின் பல பாகங்களிலும் பொய்த் தேள்கள் வசிக்கின்றன.

# கண்டுபிடித்தது எப்போது?



நாம் அன்றாடம் உபயோகப்படுத்தும் சவர்க்காரங்கள் எப்போது கண்டுபிடிக்கப்பட்டன என்று உங்களுக்குத் தெரியுமா?


ரோமானிய எழுத்தாளர் பிளினி என்பவரது குறிப்பில் கி.பீ.முதலாம் நூற்றாண்டில் சவர்க்காரம் உபயோகிக்கப் பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சவர்க்காரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆதிகால மனிதர்கள் தங்கள் உடலைச் சுத்தம் செய்ய, பழச்சாறுகள், களிமண், ஒலிவ் எண்ணெய் போன்றவைகள் கொண்டு செய்யப்பட்ட சவர்க்காரங்களைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

# போர்த்தொட்டிகள் (TANKS)

**• போர்த்தொட்டிகள் என்றால் என்ன?**

வாகனம் போன்று நகர்ந்து சென்று தாக்கும் ஒரு போர்க்கருவி ஆகும். இது டாங்கிகள் எனவும் அழைக்கப்படும்.



**❑ இது ஏன் போர்த்தொட்டிகள் என்று அழைக்கப்படுகிறன?**

இவை தண்ணீர்த் தொட்டிகள் போன்று அகன்ற தோற்றமுடையதால் இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன.

**❑ போர்த்தொட்டிகள் முதன் முதலில் எங்கு உருவாக்கப்பட்டது?**

இங்கிலாந்து நாட்டில் உருவாக்கப்பட்டது.

**❑ போர்த்தொட்டிகள் முதன் முதலில் எப்போது உபயோகப்படுத்தப்பட்டன?**

1916ம் ஆண்டு ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் இடையே நடைபெற்ற முதல் உலகப் போரின்போது இங்கிலாந்துப் படைகளால் உபயோகப்படுத்தப்பட்டது.

# குளிர்சாதனப் பெட்டி

குளிர்சாதனப் பெட்டியைக் கண்டுபிடித்தவர் சுவிற்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த கார்ல்லிண்ட் என்ற விஞ்ஞானி.

1833ல் இங்கிலாந்து நாட்டின் விஞ்ஞானியான மைக்கல் ஃபரடே, அமோனியா வாயுவை அழுத்தத்திற்கு உட்படுத்தும்போது அது திரவமாகிறது என்றும் அப்போது வெப்பம் கிரகிக்கப்பட்டு குளிர்ச்சி ஏற்படுகிறது என்றும் கண்டுபிடித்தார்.

இந்தச் செயற்பாட்டின் அடிப்படையில்தான் கார்ல்லிண்ட், 1877ல்



குளிர்சாதனப்பெட்டி போன்ற ஒன்றை, திரவ அமோனியாவைப் பயன்படுத்தி உருவாக்கி பொருட்களைக் குளிர்வித்தார். இதனடிப்படையில் பல்வேறு தொழில்முறை முன்னேற்றங்களுடன் நவீன குளிர்சாதனப் பெட்டிகள் உருவாக்கப்பட்டன.



படிப்பகம்


www.padippakam.com

# நந்தினி 440 வோல்ட்

## திக் திக் திக் 13

வழுக்குப்பாறை எஸ்டேட்.

பங்களாவின் போர்டிகோவில் கார் வந்து நின்றதும்- டிரைவர் சீட்டினின்றும் இறங்கிய பாரி- காரின் பின் கதவைத் திறந்து விட்டான். கதவோரம் உட்கார்ந்திருந்த நந்தினி கண்ணிமைகளை வேண்டுமென்றே கொட்டிக் கொட்டிப் பார்த்தபடி கீழே இறங்கினாள். கண்களுக்கு எல்லாமே பளிச் சென்று தெரிந்தாலும், தெரியாத மாதிரி பாவ்லா செய்வது நந்தினிக்கு சிரமமாய் இருந்தது.



"மொள்ளமா பாத்து எறங்கம்மா..." வாகீசனும், பரிமளாவும் மெல்லிய குரலில் சொல்ல- சொப்னா நந்தினியின் கையைப்பிடித்து மெதுவாய் உள்ளே கூட்டிப் போனாள். பக்கத்து பங்களாவில் குடியிருந்த சுந்தரேசன் வேக வேகமாய் வாகீசனை நோக்கி வந்தார்.

"விஷயத்தைக் கேள்விப்பட்டு ரொம்பவும் வருத்தப்பட்டேன். வாகீசன்.. ஆபரேஷன் பண்ணியும் பார்வை கிடைக்கல லேன்னா... அது நந்தினியோட துரதிஷ்டம்தான்... ஃபர்தரா ட்ரீட்மெண்ட் எடுக்காமே டாக்டர் ஏன் நந்தினியை ட்ஸ்சார்ஜ் பண்ணிட்டார்...?"

வாகீசன் அந்த சுந்தரேசனை ஏறிட்டார். "நந்தினிக்கு இப்போ பார்வையில்லேன்னாலும்... நாளடைவில கண்ணுக்கு சக்தி வந்து பார்வை தெரிய ஆரம்பிச்சுடுமென்று டாக்டர் சொல்லியிருக்கார்... அந்த உயிர்ப்புச் சக்தி வர்றதுக்கு இந்த வழுக்குப்பாறை எஸ்டேட் க்ளைமேட் சூட்டபிளா இருக்கும்ன்னு அவர் சொன்னதினால கூட்டிட்டு வந்துட்டோம்..."

"மனசைத் தளரவிடாதீங்க...! நந்தினிக்குக் கண்டிப்பா பார்வை வந்துடும்... கொஞ்ச நேரம் கழிச்சு... நானும் என்னோட ஒய்ஃப்பும் நந்தினியைப் பார்க்க வர்றோம்... இப்ப வேண்டாம்... நந்தினி ஜர்ணி பண்ணின டயர்ட்ல இருப்பா..."

சுந்தரேசன் நகர்ந்துவிட- வாகீசனும் பரிமளமும் உள்ளே போனார்கள். பாரி ஹாலில் இருந்த சோபாவில் நந்தினியை உட்கார வைத்து- அவளை ஏதாவது சாப்பிடச்சொல்லி வற்புறுத்திக் கொண்டிருந்தான்.

"ஹார்லிக்ஸ் ஒரு வாய் கரைக்கச் சொல்லட்டுமா?"

"வேண்டாங்க...!"

"ஜூஸ்..."

"எனக்கு ஒண்ணும் வேண்டாங்க..."- எல்லோரும் சுற்றி நின்றிருக்க- கணவன் தன்னிடம் பரிவுகாட்டிக் கொஞ்சுவது அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

"வேண்டான்னா விடேண்டா! பாரி, அவளை ஏன் தொந்தரவு படுத்தறே? நந்தினி ரெஸ்ட் எடுத்துக்கட்டும்..."

"நந்தினியை உன்னோட ரூமுக்குக் கூட்டிட்டுப் போ..."

அவளை ஒரு மகாராணி மாதிரி உட்கார வைத்துக் கொண்டு- ஆளுக்கு ஆள் எட்டி நின்று கொண்டு உபச்சாரம் செய்வதைப் பார்க்கப் பார்க்க- உள்ளுக்குள் ஒரு பரவசம் பிரவகித்தது. கண்களின் பார்வையை ஒரே நேர்கோட்டில் வைத்துக் கொண்டு தன்னைச் சுற்றிலும் நின்றிருந்தவர்களைக் கண்களின் அசைவிலேயே பார்த்தாள் நந்தினி.

இருண்டுபோன முகத்தோடு வாகீசன். கனமான வருத்தம் தோய்ந்த கண்களோடு பரிமளம்.

தலை கலைந்து சோர்வாய்த் தெரியும் சொப்னா.

சோகம் பூசியிருந்த முகத்தோடு விமல்.

இவர்களுக்கப்பால் கதவருகே பாரியின் பர்சனல் செகரட்ரி வயலெட், ஆப்பிள் க்ரீன் நிறக் கவுனில் தயக்கமாய் நின்று கவலையாய்த் தெரிந்தாள். அவளுக்குக் கொஞ்சம் தள்ளி எஸ்டேட் சூப்பர் வைஸர் பிரகாஷ் கையில் ஏதோ ஃபைலோடு நின்றிருந்தான்.

நந்தினி அவர்களிடம் மானசீகமாய்ப் பேசினாள். 'ரெண்டே நாள் பொறுத்துக்குங்க... மூணாவது நாள் காலையில விழிக்கிறப்போ கண்ணுதெரியுதுன்னு கூச்சல் போட்டு உங்களையெல்லாம் சந்தோஷப்படுத்தப்போறேன்...'

"நந்தினி..."

பாரி அவளுடைய தோளை அசைத்தான்.

"ம்..."

"வா...நம்ம...ரூமுக்குப் போவோம்... நீ கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கு."

தலையாட்டிய நந்தினி- வேண்டுமென்றே வெற்று வெளியைத் தடவிக் கொண்டு எழுந்தாள். பாரி அவளுடைய கையைப் பற்றியபடி தன்னுடைய அறைக்குக் கூட்டிப் போனான். தன் அறைக்குள் நுழைந்ததும் சுவரோரமாய் இருந்த கட்டிலில் நந்தினியைப் படுக்க வைத்தான்.

நந்தினி பாரியைக் கூப்பிட்டாள்.

"என்னங்க?"

"ம்..."

"இப்போ டயம் எவ்வளவு...?"

"பத்து மணி..."

"நீங்க இன்னமும் டிபன் சாப்பிடலையா?"

"இனிமேத்தான் சாப்பிடணும்..."

"போங்க... மொதல்ல போய்ச் சாப்பிட்டுட்டு வாங்க..." நந்தினி பாரியைப் பிடித்துத் தள்ளி விட்டாள்.

"எனக்குப் பசிக்கலை..."

"என்னைப் பத்திக் கவலைப்படறீங்களா?"

"பின்ன கவலையிருக்காதா...?"

"எப்படியும் பார்வை வந்துடும்ன்னு டாக்டர் சொல்லியிருக்காரே...?"

"நந்தினி..."

"ம்..."

"உனக்குப் பார்வை வந்துடும்ன்னு நம்பிக்கை இருக்கா...?"

"கண்டிப்பா வந்துடும்...."

"எனக்குப் பயமாயிருக்கு நந்தினி... உன்னோட இரண்டு கண்ணும் முன்னே மாதிரி இல்லை....சிவப்பாய் மிளகாய்ப் பழமாட்டம் இருக்கு... உன்னோட கண்ணைப் பார்த்தாலே என் கண்ணு ரெண்டிலேயும் சுறுசுறுன்னு நீர் வாற மாதிரி இருக்கு..."

"அப்போ என்னோட கண்ணை நீங்க பார்க்காதீங்க. எனக்கு ஒரு கூலிங் கிளாஸ் வேணும்... மத்தவங்களை என்னோட கண் உறுத்துதுன்னா நான் கூலிங் கிளாஸ் போட்டுக்கத்தான் வேணும்... ஷெல்ப்புல என்னோட கூலிங் கிளாஸ் ஒண்ணு இருக்கும். அதை எடுத்துத் தர்றீங்களா...?"

"இதோ...!" என்று ஷெல்ப்பை நோக்கிப்போனான் பாரி. அவன் போவதையே புன்னகையோடு பார்த்த நந்தினி- எதிரே இருந்த நிலைக்கண்ணாடிப் பக்கம் திரும்பினாள்.

கண்ணாடியில் அவள் முகம் தெரிந்தது.

தன்னுடைய கண்களைப் பார்த்து லேசாய் அதிர்ந்தாள் நந்தினி.

சிவப்புச் சாயத்தில் ஊறப்போட்ட மாதிரி அவளுடைய இரண்டு கண்களும் கலங்கலாய்த் தெரிந்தன.

'மனசில் அந்த ஆக்ரோஷமும்- கோபமும்- ஆவேசமும்- வருவதற்குக் காரணம் இந்தக் கண்கள் தானா?'- நந்தினி கண்ணாடியில் தன் முகத்தைப் பார்க்கவே பயப்பட்டாள்.

(தொடர்ந்து வரும்)

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

---

## வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

# 'அன்ன பூரணி அம்மா'

### பயணம் - 04

அன்னபூரணியின் அழகில் அந்த அமெரிக்கர் சொக்கியே போய்விட்டார்!

எடுப்பாகவும் கவர்ச்சியாகவும் இருந்த அன்னபூரணியின் அழகில் யார்தான் மயங்கமாட்டார்கள்!

அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்திருந்த கோடீஸ்வரரான எழுத்தாளரும், கடலோடியுமான வில்லியம் அல்போர்ட் றொபின்சன் 1936 ம் ஆண்டுப் பிற்பகுதியில் வல்வெட்டித்துறைத் துறைமுகத்துக்கு விஜயம் செய்தார்.

வல்வெட்டித்துறைத் துறைமுகத்தில் அடுக்கடுக்காக நங்கூரமிடப்பட்டபடி ஐம்பது அறுபது கப்பல்கள் நிமிர்ந்து கம்பீரமாக நின்று கொண்டிருந்தன.

ஒவ்வொரு கப்பலையும் மிக நுணுக்கமாகப் பார்த்துக் கொண்டே சென்றார் றொபின்சன்!

ஓர் இடத்தில் அந்த மனிதர் நின்றுவிட்டார்!

அந்தக் கப்பலின் அழகை அணுவணுவாக இரசித்தார்!

அவள்தான் 'அன்னபூரணி!'

'அன்னபூரணி' என்று சுருக்கிவிட்டேன்: 'அன்ன பூரணி அம்மாள்' என்றே பெயரிட்டிருந்தார்கள்!

அன்னபூரணியைத் தனதாக்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு வந்துவிட்டது!

-நினைத்ததை முடிப்பவர் அவர்!

எப்படியாவது அக்கப்பலை வாங்கிவிடுவதெனத் தீர்மானித்துவிட்டார். அத்தோடு இன்னொரு முடிவையும் அவர் எடுத்துக் கொண்டு விட்டார்!

'அக்கப்பலை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல வேண்டும்!'

அந்தக் கப்பலின் தண்டையல் கே. தம்பிப்பிள்ளையை றொபின்சன் சந்தித்துப் பேசினார்.

தம்பிப்பிள்ளைத் தண்டையல் மிகக் கண்டிப்பான பேர்வழி!

எவருக்கும் மசிந்து கொடுத்து விடமாட்டார்!

தனக்குச் சரியெனப்பட்டதைச் செய்வார்.

றொபின்சனும் அமெரிக்கச் செல்வச் சீமான்களில் ஒருவராக மட்டுமல்லாது, கடலோடும் கலையில் முடிசூடா மன்னனாகவும் திகழ்ந்தவர்!

பசுபிக் சமுத்திரத்தில் மணல்திட்டு ஒன்றைக் கண்டு பிடித்து, அங்கு தன் காலடியைப் பதித்து, அமெரிக்க அரசின் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை அதற்காகப் பரிசாகப் பெற்றவர்!

-கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்பார்கள்!

றொபின்சனின் கடலோடும் ஆற்றலில் மயங்கி அவர் காலடியில் விழுந்த புளொறின் என்ற சீமாட்டிமூலமும் அவருக்கு மேலும் செல்வம் குவிந்தது.

'அன்னபூரணி அம்மாளை' வாங்கித் தரும்படி விடாப்பிடியாக நின்றார் றொபின்சன்!

தம்பிப்பிள்ளைத் தண்டையல் கையை விரித்துவிட்டார்!

★★

வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட கப்பல்தான் 'அன்னபூரணி'

கப்பல் கட்டும் தொழிலில் அகில உலகமுமே வியக்கக்கூடிய முறையில், மிகமிக நுண்ணிய வேலைகளைச் செய்வதில் அப்போது வல்வெட்டித்துறையில் உள்ளவர்கள் வல்லுநர்களாக விளங்கினார்கள்!

இதனை வெளிநாட்டவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்!

அகில உலகிலுமே ஃபிரான்ஸுக்கு அடுத்தபடியாக கப்பல் கட்டும் தொழிலை வியக்கும் வண்ணம் செய்பவர்கள் வல்வெட்டித்துறைக் கலைஞர்கள்தான் என்பதை றொபின்சன், அன்னபூரணி மூலம் முற்றும் முழுதாகத் தெரிந்துகொண்டார்!

'அன்னபூரணி' மீது ஏற்பட்ட காதலை இது மேலும் வளர்த்து றொபின்சனைப் பைத்தியமாக்கிவிட்டது!

வல்வெட்டித்துறை சுந்தர மேஸ்திரியாரின் திறமைக்குச் சான்று கூறிக்கொண்டிருந்தது 'அன்னபூரணி!'

பசுபிக் சமுத்திரத்தின் தெற்கே- பனி உறையும் பிரதேசப் பகுதியில், திமிங்கிலத்தைப் பிடித்து, அதன்மூலம் பெரிய வியாபாரம் ஒன்றினை நடாத்தவேண்டுமென்ற ஆசையொன்றும் நீண்டகாலமாக றொபின்சனின் நெஞ்சை வாட்டிக்கொண்டிருந்தது!

**வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை சென்ற 'அன்ன பூரணி அம்மா' கப்பல் பற்றிய சுவையான உண்மைக் கதை விறுவிறுப்பான விவரிப்பால் நம்மை அக்காலத்திற்கே இழுத்துச் செல்கிறார் ராஜகோபால்.**

கடல்படு திரவியங்களில் முன்னணி வகிப்பது திமிங்கிலம்!

அந்தக் கனவுக்கு 'அன்னபூரணி' ஈடு கொடுப்பாள் என்ற அசையாத நம்பிக்கை றொபின்சனுக்கு ஏற்பட்டுவிட்டது.

●●

வல்வெட்டித்துறையில் அப்போது, கப்பல் சம்பந்தமான விஷயங்களில் முக்கிய பேர்வழியாகத் திகழ்ந்தவர் கதிரவேலுப்பிள்ளை என்பவர்!

பெரிய கப்பலை வாங்குவதற்கோ விற்பதற்கோ விரும்புபவர்கள் கதிரவேலுப்பிள்ளையை அணுகியே தீரவேண்டும்!

-அந்த அளவுக்கு ஒரு பெரிய 'புள்ளி!'

அமெரிக்கச் செல்வச்சீமான் றொபின்சனுக்கும் 'அன்னபூரணி'யை வாங்குவதற்கு ஒரேஒரு வழிதான் இருந்தது!

கதிரவேலுப்பிள்ளையை றொபின்சன் சந்தித்தார்!

அன்னபூரணியை எப்படியாவது வாங்கித்தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்!

தேவகோட்டையிலுள்ள நாகப்பச் செட்டியாருக்குச் சொந்தமான அந்தக் கப்பல்பற்றிப்பேசுவதற்கு அங்கேயே செல்ல வேண்டுமென்று கூறினார் கதிரவேலுப்பிள்ளை.

றொபின்சன் ஒப்புக்கொண்டார்!

கதிரவேலுப்பிள்ளை றொபின்சனை அழைத்துக்கொண்டு தேவகோட்டைக்குச் சென்றார்!


கப்பல் ஒன்றைப் பேரம்பேசி வாங்கிக் கொடுப்பதும் விற்றுக் கொடுப்பதும் ஒரு 'கலை' என்றே சொல்லலாம்.

அந்தக் 'கலை' கதிரவேலுப்பிள்ளைக்குக் கை வந்த கலை.

நாகப்பச் செட்டியாருக்கு கதிரவேலுப்பிள்ளையை நன்கு தெரியும்.

கப்பல் முதலாளிகள் எல்லாருமே கதிரவேலுப்பிள்ளையை மிக நன்கு அறிந்து வைத்திருந்தார்கள்.

'அன்னபூரணி'யை நல்லவிலைக்குக் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பம் வந்துள்ளதை நாகப்பச் செட்டியாருக்கு 'காதோடு காதாக' விளக்கினார் கதிரவேலுப்பிள்ளை.



கதிரவேலுப்பிள்ளையின் கண்ணும் பேசும், கையும் பேசும்! என்பார்கள்.

அறுபதினாயிரம் ரூபாய்க்குக் கப்பலை விற்பதற்குச் சம்மதித்தார் நாகப்பச் செட்டியார்!

கதிரவேலுப்பிள்ளை றொபின்சனுக்கு இலகுவாகக் காரியத்தை முடித்துக் கொடுத்துவிட்டார்!

அன்னபூரணி அம்மாள் றொபின்சனுக்குச் சொந்தமாகிவிட்டாள்!

(அடுத்த வாரமும்...)

**ஈ.கே. ராஜகோபால்**



படிப்பகம்

www.padippakam.com

# மேக்கப் புன்னகை



32

ஒலித்த ஃபோனை டாக்டர் எடுத்துக் கேட்டுவிட்டு, "மதுமிதா உங்க அம்மா பேசறாங்க," என்று ரிஸீவரை அவளிடம் நீட்டினார்.

வாங்கி, "ஹலோ!" என்றாள்.

"என்ன மதுமிதா, உன்னை எப்போ டிஸ்சார்ஜ் செய்யறதா டாக்டர் சொன்னார்?" என்றாள் எதிர்முனையில் துர்க்கா.

"என்ன விஷயம்?"

"உன் பக்கத்திலதான் இருக்கக்கூடாதுன்னுட்டே. இதுகூட விசாரிக்கக் கூடாதா? டிஸ்சார்ஜ் பண்றதுன்னா ஹாஸ்பிட்டல் பில் கட்டணும். அதுக்கான ஏற்பாடுகள் எல்லாம் நான் செய்ய வேணாமா?"

"அதைப்பத்தி எல்லாம் நீ ஏம்மா கவலைப்படறே? நான் பார்த்துக்கறேன். ஞாயித்துக்கிழமை காலையில ஃபிசியோ தெரபிஸ்ட் வர்றார். அவர் சில எக்ஸசர்சைஸ் எல்லாம் சொல்லித் தரப்போறார். மத்தியானம் என்னை டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க. கார் மட்டும் அனுப்பி வை. போதும்."

"சரி! அப்புறம் ஒரு விஷயம்"

"என்ன?"

"கோவிந்தராஜ் ஃபோன் செஞ்சார்!"

"என்னவாம்?"

"திங்கட்கிழமைலேர்ந்து டப்பிங் தியேட்டர் புக் பண்ணிடலாமான்னு கேட்டார். மூணு தடவை ரிலீஸ் தேதி தள்ளி வெச்சிட்டாங்களாம். டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் எல்லாம் கொதிச்சுப்போயிருக்காங்களாம். என்ன சொல்றே?"

"இன்னும் பதினைஞ்சு நாளைக்கு நான் ரெஸ்ட் எடுத்தாகணும்."

"காலுக்குத் தானே ரெஸ்ட்? தொண்டைக்கு என்ன?"

"நான் கோவிந்தராஜ் கிட்டே நேரடியா ஃபோன்ல பேசிக்கிறேன்; ஃபோனை வெச்சிடு."

தொடர்பைத் துண்டித்தாள் மதுமிதா.

டாக்டரும் சாரியும் மீண்டும் வாழ்த்துச் சொல்லிவிட்டு அறையை விட்டு விலக, வீடியோ எடுத்த நண்பனும் கேபிளைச் சுருட்டிக்கொண்டு சென்றான்.

மதுமிதா அருகில் வந்தான் சந்திரசேகர்.

அவனையே கண்கலங்கப் பார்த்த அவளைத் தோளோடு சாய்த்துக் கொண்டு, "எதுக்குக் கலங்கறே?" என்றான்.

"சந்தோஷம் சந்துரு. என்மேல உங்களுக்கு இருக்கிற அழுத்தமான அசைக்க முடியாத அன்பை நினைச்சிப் பார்க்கறப்ப இவ்வளவு அன்புக்கு நான் தகுதி உள்ளவளான்னு சுய இரக்கம் ஏற்படுது சந்துரு!"

"அசடு மாதிரி ஏதாச்சும் உளறிக்கிட்டு இருக்காதே! உன் விருப்பப்படி கல்யாணம் இங்கேயே நடந்து முடிஞ்சிடுச்சி. திருப்திதானே!?"

"ஊரறிய பண்ணிக்க முடியாமல் போச்சேன்னு ஒரு பக்கம் வருத்தம் இருக்கத்தான் செய்யுது சந்துரு."

"அதான் ஊரறிய வரவேற்புக் கொடுக்கப் போறோமே?"

"சந்துரு, என் வாழ்க்கையில கல்யாணம்னு ஒண்ணு இருக்குமான்னு எனக்கு நம்பிக்கையே இல்லை. உங்களைச் சந்திக்கற வரைக்கும்! இப்ப என் மனசுல கொப்புளிக்கிற ஃபீலிங்கை என்னால வார்த்தையாக்க முடியலை சந்துரு. இந்த நிமிஷம் நீங்க என்னை செத்துப்போகச் சொன்னாக்கூட சந்தோஷமா செத்துப் போவேன்!" என்றாள் குரல் இடற...

"என்ன பேச்சு இதெல்லாம்? டோன்ட் பீ ஸில்லி ஐ ஸே! நடிகைன்ற பட்டம் உனக்குப் போர்த்தப்பட்ட ஒரு சால்வை மதுமிதா. நான் ஒருநாள்கூட உன்னை நடிகையாப் பார்த்ததில்லை. மதுமிதாங்கிற ஒரு பொண்ணாப் பார்த்தேன். ஒரு ஆத்மாவாப் பார்த்தேன். அதனாலதான் என்னால உன்னை ஆழமா நேசிக்க முடிஞ்சுது."

சந்திரசேகர் அவள் நெற்றியில் முத்தமிட்டு அணைத்துக் கொண்டான்.

"ஒ.கே. நடுவில ஒரு நாள்தான் இருக்கு. நான் சண்டே காலை எங்க வீட்ல நடக்கப் போற பிரஸ் மீட்டுக்கான ஏற்பாடுகளை பண்ணிடறேன். ரிசப்ஷனுக்கு அத்தனை பேருக்கும் டெலிஃபோன்லேயே அழைப்புக் கொடுக்கப்போறதா சொன்னே. எப்பேர் செய்யப்போறே?"

"நாளைக்கு ஈவினிங்லேர்ந்து ஃபோன் பண்ண ஆரம்பிச்சிடறேன்!"

"ரைட்டு. நான் வரட்டுமா மைடியர் மனைவியே?"

புன்னகைத்தாள் மதுமிதா.

★★★

மறுநாள் சனிக்கிழமை.

இரவு ஏழு மணி.

மகாபலிபுரம் செல்லும் சாலையில் இருந்த ஒரு இடிந்த கட்டடத்தின் வாசலில் ஒரு காரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தான் மைக்கேல் அல்ஃபோன்ஸா.

அவன் எதிரே இரண்டு தடியர்கள் நின்றிருந்தார்கள்.

"நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கா?"

"இருக்கு தலைவா!"

"அந்த சந்திரசேகர் மேல ஒரு சின்ன கீறல்கூட விழாம இங்கே கொண்டாந்துடுங்க. நான் இங்கேயே வெய்ட் பண்றேன்!"

"சரி தலைவா."

"அவனை அவன் கார்லேயே அழைச்சுட்டு வரணும். புரிஞ்சுதா?"

"புரிஞ்சுது."

"உங்களை யாரும் பார்த்திடக் கூடாது. எச்சரிக்கையா நடந்துக்கங்க!" என்ற அல்ஃபோன்ஸா தன் வாட்சைப் பார்த்துவிட்டு,

"நீங்க இப்ப புறப்பட்டா சரியா இருக்கும் போங்க!" என்றான்.

இரண்டு தடியர்களும் ஒரு மோட்டார் சைக்கிளில் தடதடவென்று புறப்பட்டுச் சென்று ஒளிப் புள்ளியாகி மறைந்தார்கள்.

அல்ஃபோன்ஸா காருக்குள் சாய்ந்தமர்ந்து டேப்பைப் போட்டுக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான்.

● ● ●

மதுமிதா முதலில் சுபாஷிற்கு ஃபோன் செய்தாள்.

"ஹலோ சுபாஷ் சார்! நான் மதுமிதா பேசறேன்."

"சொல்லும்மா! எப்படி இருக்கே?"

"எண்பது பர்செண்ட் சரியாகிட்டேன். எக்சர்சைஸ் பண்ணச் சொல்லியிருக்காங்க. இன்னும் ரெண்டு வாரத்தில முழுக்க குணமாகிடுவேன்."

"வெரிகுட். எப்போ டிஸ்சார்ஜ்?"

"சண்டே, அப்புறம் சார், நீங்க என்னை வாழ்த்தணும்."

"என் வாழ்த்து உனக்கு எண்ணைக்கும் உண்டு. என்ன விஷயம் சொல்லம்மா."

"நானும் சந்திரசேகரும் நேத்து கல்யாணம் செய்துக்கிட்டோம்."

"அப்படியா? கங்கிராஜுலேஷன்ஸ்! என்னோட ஃபார்ம் ஹவுஸ்ல வெச்சி பண்ணிக்கிறதா இருந்தீங்க! என்ன அவ்வளவு அர்ஜண்ட்?"

"அம்மாவோட தொந்தரவுதான். விபரமா ஒருநாள் சொல்றேன். நேத்து இங்க ஆஸ்பத் திரிலயே பண்ணிக்கிட்டோம்."

"வெரிகுட். எந்த பத்திரிகையிலயும் நியூஸ் பார்க்கலையே!"

"நாங்க வேணும்னுதான் யாருக்கும் தெரிவிக்கலை. நாளைக்குக் காலைல பிரஸ் மீட் ஏற்பாடு பண்ணியிருக்கேன். அப்போ ஃபோட்டோஸ் கொடுத்து அறிவிச்சிடலாம்னு இருக்கோம்."

"அதான் நல்லது."

"ஈவினிங் அம்பாஸிடர் பல்லவால ஒரு சின்ன ரிசப்ஷன் சார். லிமிட்டட் அன்ட் செலக்டட் கெஸ்ட்ஸ்! நீங்க கண்டிப்பா வரணும் சார்."

"ஷ்யூர்! கண்டிப்பா வர்றேன். அப்புறம்? ஃபியூச்சர் பிளான்ஸ் என்ன?"

"இனிமேதான் பொறுமையா பிளான் பண்ணணும் சார். நீ எது வேணாலும் செய்யின்னு எனக்கு முழுச் சுதந்திரம் கொடுத்திட்டார் சந்துரு. இப்ப நடிச்சிக்கிட்டிருக்கிற ரெண்டு படத்தையும் முடிச்சிக் கொடுத்துடுவேன். இனி நடிக்கப்போறதில்லை. இதையும், நாளைக்கு பிரஸ்மீட்ல சொல்லப்போறேன்."

"இண்டஸ்ரிக்கு பெரிய நஷ்டம் மதுமிதா."

"என்ன சார் பண்றது? வெறும் மதுமிதாவா வாழ ஆசைப்படறேன்!"

"வெல். ஆல் தி பெஸ்ட்! எப்போ என்ன உதவி வேணும்னாலும் என்னை நீ தயங்காம கேக்கலாம். நாளைக்கு ரிசப்ஷன்ல மீட் பண்றேன்."

"தேங்க் யூ சார்."

ஃபோனை வைத்த மதுமிதா, அடுத்து வரிசையாக சக நடிகர்கள், நடிகைகள், தயாரிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள் என்று ஒவ்வொருத்தராக அழைத்து ரிசப்ஷன் செய்தி சொல்லத் தொடங்கினாள்.

♦♦♦

வீட்டில் சிகரெட் பிடித்தபடி சாய்ந்தமர்ந்திருந்த சந்திரசேகர் டெலிஃபோன் அடிக்க, உடனே எடுத்தான்.

"ஹலோ சந்திரசேகர் ஹியர்."

"சார், உங்க கம்பெனி லாரி ஒண்ணு நீலாங்கரை பக்கத்துல கவுந்து கிடக்குது சார். மரம் ஏத்தின லாரி சார். மரம் எல்லாம் சிதறிக் கிடக்கு. டிரைவர் ஓடிப் போயிட்டான். உடனே ஸ்பாட்டுக்கு வாங்க."

"நீங்க யாரு சார்?"

"நான் இந்த ஏரியால குடி இருக்கிறவன். சில பேரு மரத்தை எல்லாம் திருடப் பார்த்தாங்க! நான் அவுங்களை விரட்டி விட்டுட்டு லாரிக்குப் பக்கத்திலேயே காவலா இருக்கேன். நீங்க உடனே வாங்க."

"இதோ உடனே புறப்பட்டுட்டேன்."

சந்திரசேகர் பதற்றமாகப் புறப்பட்டான்.

இரண்டாவது நிமிடம் தன் காரில் இருந்தான். காரை நீலாங்கரை நோக்கிப் படு வேகமாகச் செலுத்தினான்.

அரைமணியில் சந்திரசேகர் நீலாங்கரை வந்தபோது, சாலை ஓரத்தில் நின்ற ஒருவன் கையசைத்து காரை நிறுத்தச் சொன்னான்.

காரை நிறுத்தியதும், அவன் முன் கதவு திறந்து ஏறிக்கொண்டு, "நான்தான் உங்களுக்குப் ஃபோன் செஞ்சேன். லாரி எங்க கவுந்திருக்குன்னு காட்டறேன். நேரா ஓட்டுங்க" என்றான்.

நேராக ஓட்டத் தொடங்கிய சந்திரசேகர், அவனுடைய தோற்றம் பார்த்து சந்தேகம் எழ...

"உங்க பேர் என்ன சொன்னீங்க?"

"அதெல்லாம் எதுக்கு? சொல்ற இடத்துக்கு ஓட்டுப்பா!" மரியாதை குறைந்ததில் திடுக்கிட்டுப் பார்த்தான். இடுப்பிலிருந்து பளபளக்கும் கத்தியை எடுத்தான் அவன்.

"கேள்வி எதுவும் கேக்காம நான் சொல்ற இடத்துக்கு ஓட்டு பிரதர்!"

"நீ யாரு? எதுக்காக என்னைக் கூட்டிக்கிட்டுப் போறே?"

"கேள்வி கேக்காதேன்னு சொன்னேன்ல? உன் கேள்வி எல்லாத்துக்கும் எங்க தலைவர் பதில் சொல்லுவாரு. கம்முன்னு ஓட்டு!"

பதற்றத்தோடு காரை ஓட்டினான் சந்திரசேகர்.

டெலிஃபோன் ஒலிக்க துர்க்கா எடுத்தாள்.

"ஹலோ துர்க்கா பேசறேன்."

"நான் புரொடக்ஷன் மேனேஜர் கோவிந்தராஜ் பேசறேன். காலைல கூட பேசினேன். நீங்க அப்பகூட விஷயம் சொல்லாம மறைச்சுட்டீங்களே...?"

"எதைச் சொல்றீங்க?"

"நாளைக்கு ஈவினிங் மதுமிதாவோட கல்யாண ரிசப்ஷன் நடக்கப் போறதைத்தான் சொல்றேன். நீங்க சொல்லலைன்னா என்ன, மதுமிதா ஃபோன்ல கூப்பிட்டு இன்வைட் பண்ணாங்க."

"என்ன சொல்றீங்க?"

"புரியாத மாதிரி பேசறீங்களே! நேத்தைக்கு ஆஸ்பத்திரிலேயே மதுமிதா இரகசிய கல்யாணம் பண்ணிக்கிட்டாங்களாமே!" என்றான் கோவிந்தராஜ் எதிர்முனையில்.

துர்க்காவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் ரிசீவர் நழுவியது.

(தொடர்ந்து வரும்)

> "என் மகளோடு துணையாகச் செல்கிறவரைப் பற்றி பல சந்தேகக் கேள்விகள் எழுந்ததால், அவளுக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்பே திருமணம் நடந்துவிட்ட உண்மையை பத்திரிகையாளர்களை அழைத்து அறிவித்தேன்."
>
> நடிகை ரேகாவின் தாயார் வட்சமி... 'சாவி' 22.09.97 இதழில்...



## பட்டுக்கோட்டை பிரபாகர்

---

# நில்–கவனி–முன்னேறு

## கவியரசு கண்ணதாசன்

> "மல்லிகை என் மன்னன் மயங்கும் பொன்னான மலரல்லவோ..." என்று கேட்டாலும் இனிக்கும் பாடல். குரலுக்குச்சொந்தக்காரி வாணி ஜெயராம். அவரை எடைபோடுகிறார். கவியரசு கண்ணதாசன்

சிலரைக் காணும்போது நம்மையறியாமலேயே ஒரு பாசம் ஏற்படுகிறது. இனம் தெரியாத அந்தப் பாசத்திற்கு இறைவனைத் தவிர வேறு காரணத்தைச் சொல்ல முடிவதில்லை. அதிகம் பழகி இருக்கமாட்டோம். இரண்டு வார்த்தைகளுக்கு மேல் பேசிக்கூட இருக்க மாட்டோம். ஆனால் அவர்கள் நல்லவர்கள், உயர்ந்தவர்கள் என்ற அபிப்பிராயம் திடுதிப்பென்று வந்து விடுகிறது. சொல்லப் போனால் அந்த அபிப்பிராயம் சரியாகவும் இருக்கிறது.

சிலரோடு திரும்பத் திரும்பப் பழகினாலும் அவர்களைப் பற்றிய எந்தவித உணர்ச்சியும் நம் மனத்தில் எழுவதில்லை. நான் மிகவும் அபூர்வமாக சந்திப்பவர்களில் ஒருவர் திருமதி வாணி ஜெயராம். ரெக்கார்டிங்கிற்குப் போனால்தான் அவரை நான் சந்திப்பேன். ஆனால் பெரும்பாலும் பாடல் ஒலிப்பதிவிற்கு நான் போவதேயில்லை. அன்று அபூர்வமாக ஒரு ஸ்டுடியோவில் நான் வாணி ஜெயராமைப் பார்த்தேன்.


'இந்தியாவின் எல்லா மொழிகளிலும் பாடியவர்' என்ற சிறப்பைப்பெற்ற வாணி ஜெயராம் மிகவும் அடக்கமானவர். யார் அவரைப் பார்த்தாலும் தங்கள் குடும்பத்தில் அப்படியொருவர் இருக்க வேண்டுமென்று நினைக்கத் தோன்றும். எனக்கு ஏதோ ஒரு நெருங்கிய உறவுப் பெண் நினைவே, வாணி ஜெயராமைப் பார்க்கும்போதெல்லாம் வரும்.

பத்து வருஷங்களுக்கு முன், முதன் முதல் சந்தித்தபோதே பளிச்சென்று அந்த எண்ணம் உண்டாயிற்று. இதைப் பூர்வ ஜென்ம பந்தம் என்பார்கள். வாணி இசை கற்றது, பாடத் தொடங்கியது எல்லாமே வடநாட்டில்தான். எடுத்த எடுப்பிலேயே அவரது இந்திப் பாடல் பிரமாத வெற்றி பெற்றுவிட்டது. அதன் வெற்றியைக் கண்டு சில இந்திக்காரர்களுக்குப் பொறாமை கூட வந்துவிட்டது.

'வாணி ஜெயராமை வைத்து எந்த இசையமைப்பாளர் பாட்டு எடுக்கிறாரோ, அவருடைய இசையமைப்பில் தான் பாடுவதில்லை' என்று பிரபல இந்திப் பாடகி ஒருவர் ஸ்டிரைக் செய்தார். ஆனால் என்ன? ஒரிஸாவிலும், வங்காளியிலும், நான்கு திராவிட மொழிகளிலும் வாணியின் கொடிதான் பறந்து கொண்டிருக்கிறது.

பானுமதி, வரலட்சுமி, சூரியகுமாரி ஆகியோரின் குரலைப்போல், வாணியின் குரலும் தனித்தன்மை வாய்ந்தது. அந்த ஒலியில் ஒரு குடும்ப சுகம் இருக்கிறது. சோகப்பாடல்களில் எனக்கு மிகவும் பிடித்தமான குரல் திருமதி டி.எஸ். பகவதியினுடையது. பகவதி சோகம் பாடினால் நான் அழுதுவிடுவேன்.

அடுத்தது வாணி. முறையான சங்கீதப் பயிற்சியுள்ளதால் எளிய கர்நாடகத்தில் வாணியின் குரல் ஒலிக்கும்போது, அதன்



சுகமே அலாதி.

'ஏழு ஸ்வரங்களுக்குள்' பாடலை எங்கே கேட்டாலும் நான் மெய்மறந்து நின்றுவிடுவேன்.

வாணிக்குப் புத்தகம் படிப்பதில் ஆசை அதிகம். அதிலும் கவிதைகளில் ஈடுபாடு அதிகம். அதனால் எந்தப் பாடலைப் பாடினாலும் உணர்ந்து பாடுகிறார்.

வாணியின் கணவர் ஜெயராம். பண்பாடும் அன்பும் மிக்கவர். சுசீலாவின் கணவரைப் போலவே இவரும் வாணியின் தொழிலில் தலையிடுவதில்லை.

சில பொது ரெக்கார்டுகளுக்குப் பாடும்போது வாணி, சுசீலா, ஜானகி ஆகியோர் பண விஷயத்தில் பிடிவாதம் பிடிப்பதில்லை.

இசையமைப்பாளர் இரண்டு தரம் பாடிக்காட்டினால், உடனே ஒலிப்பதிவுக்குத் தயாராகிவிடுவார் வாணி.

அன்று நான் எழுதிய புத்தகங்களில் நாற்பத்திரண்டு புத்தகங்களை வாணி கேட்டுப் பெற்றுக்கொண்டார். 'தினமும் அதைத்தான் படித்து வருகிறேன்' என்று டெலிஃபோனில் சொன்னார்.

டெலிஃபோனில் கூட வாணியின் குரல் தெய்வீகமாக ஒலிக்கும்.

வாணியின் குரலுக்கு குடும்பப் பாடல்களே கவர்ச்சிகரமானவை. 'காபரே' பாடல்களை அவர் மிக அழகாகப் பாடினாலும், அவை என்னவோ வாணியின் குரலுக்கு ஒத்துவராதவை போல் தோன்றும்.

வாணியின் தோற்றத்தைப் பார்ப்பவர்கள், அவர் கலை உலகத்தில் இருப்பதாக நம்பமாட்டார்கள். அவர் அழகானவர்; திருத்தமானவர்; குடும்பப்பாங்கானவர். தோற்றத்தில் பாண்டிய நாட்டுப் பெண்கள் மாதிரி ஒரு கம்பீரம் இருக்கும். அதுபோலவே அடக்கமும் அமைதியும் இருக்கும்.

எல்லாப் பாஷைகளையும் அவற்றினுடைய தொனி தவறாமல் உச்சரிக்கும் வாணியும் ஓர் ஆயுள் காலப் பாடகியே.

பெயர்ப் பொருத்தம் பலருக்கு அமையாது. வாணிக்கு அமைந்திருக்கிறது. வாணி, உண்மையிலேயே கலைவாணி தான்.

ஆண் போன்ற குரல் படைத்த பெண்களும் இருக்கும் இப்பூமியில், வீணை ஒலிபோன்ற குரல் படைத்த வாணியை இறைவன் அதே குரலோடு நூறாண்டுகள் வாழவைக்க வேண்டும்!



படிப்பகம்

www.padippakam.com

# ஒரு நடிகை காதலிக்கப்படுகிறாள்!

மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

● **ஓர் ஆரம்ப அறிமுகம்:**

**கை** குலுக்கிக்கொண்டு- கதையின் நாயகன் அம்ரீஷ் பற்றி கொஞ்சம் அறிமுகம் செய்து கொள்வோமா?

அம்ரீஷ்!

இன்று சர்வதேச மட்ட அத்தனை கிரிக்கெட் இரசிகர்களாலும் காதலாய் உச்சரிக்கப்படுகின்ற போதையான பெயர்- அம்ரீஷ். கிரிக்கெட் புயல்.

27 வயதில் 'டைட்டானிக்' நாயகனின் முகச்சாயல்-நிறம்-மற்றும் அதேயுயரத்தோடு... ஏக்கப் பெருமூச்சோடு காத்திருக்கும் இளமையான பெண்கள் கூட்டத்தின் கனவு நாயகன். மாஸ்டர் ப்ளாஸ்டர் பேட்ஸ்மேன்!

இரண்டு வருடங்களுக்கும் மேலாக, கிரிக்கெட் உலகின் அத்தனை துடுப்படி சாதனைகளையும் தன் கரங்களுக்குள் பத்திரப்படுத்தி- நழுவவிடாமல் இருக்கின்ற துணிச்சல் அம்ரீஷ் தவிர வேறு எவருக்கும் வராது என்பது அவதானிகளின் கருத்து.

அமெரிக்க ஸ்டைலில் ஆங்கிலம் பேசுமளவிற்கு எம்.காம் படித்திருக்கும் அம்ரீஷின் முழுநேர உத்வேகமே கிரிக்கெட்தான். என்றாலும்... இந்நாட்டில் இயங்கும் வெளிநாட்டு வங்கியொன்றில் அதிகாரி தரத்தில் உத்தியோகமும் உண்டு. சர்வதேச ரீதியாக நாட்டின் தேசிய அணிக்காக விளையாடுவதில் ஆத்ம திருப்தி உண்டு. 'மாடல்' விளம்பரத்தில் நிறையப் பணம் பார்ப்பதுண்டு. வசதியான வாழ்க்கை உண்டு. அம்மா- அப்பாவுக்கு ஒரே பிள்ளையாயிருந்து... ஐந்து வருடங்கள், சொச்சம் நாட்களுக்கு முன் அப்பா இறந்து போனதில்... வாழ்க்கை அம்மாவுடன் தனித்து விடப்பட்டதுண்டு. அதில் ஒரு சோகமுண்டு.

எல்லாம் விடுத்து-

அம்ரீஷுக்குள் ஏக்கமானதொரு காதல் கூட உண்டு.

-சுவாசக் காற்றாய்...

● **ஞாயிற்றுக்கிழமை:**

"**அ**ம்மா... நானொரு பொண்ணை விரும்புறேன்மா!"

-என்று அம்ரீஷ் உச்சரித்தபோது, அம்மா காயத்ரி வியந்து பார்த்த நேரம், காலை ஒன்பதை அண்மித்திருந்த விநாடிகள்.

அதிகாலையிலேயே எழுந்து- தேகப்பயிற்சி செய்து- கிரிக்கெட் பிராக்டிஸ் பண்ணி- வார்ம் அப் சூடு ஆறக் காத்திருந்து- முகச்சவரம் செய்து குளித்து- புத்துணர்வோடு வந்து டைனிங் டேபிளில் அமர்ந்து- மல்லிகைப் பூக்கணக்கான இட்லியை மென்றுகொண்டிருந்த வேளை,

"உனக்குப் பெண் பார்க்க... நாலைஞ்சு ஃபோட்டோக்களோட தரகர் வந்துட்டுப் போனாருப்பா. எல்லாம் பெரிய இடங்களாத் தெரியுது..."

-என்று அம்மா சொன்ன நேரம்தான், அம்ரீஷ்...

"அம்மா... நானொரு பொண்ணை விரும்புறேன்மா!" என்றான்.

அம்மா வியந்து கேட்டாள், "யாருடா பொண்ணு?"

"உனக்குத் தெரியுமம்மா!"

"யாருப்பா?" புரியாமல் கேட்டாள்.

"ஸ்னேகாம்மா!"

"எந்த ஸ்னேகா...?"

அம்ரீஷினால் விருட்டெனச் சொல்ல முடியவில்லை.

"சொல்லுப்பா... எந்த ஸ்னேகா?"

"நடிகை ஸ்னேகாம்மா!"

அம்மா பேயறைந்தவள் போலானாள்.

"என்ன அந்த.....?"

அம்ரீஷ் எதிர்பார்த்ததுதான். கேட்டான். "ஏம்மா?"

"சும்மா விளையாட்டாத்தானே சொல்றே?"

"இல்லம்மா நிஜம். உன்மேல சத்தியமா... நானும் ஸ்னேகாவும் ஒருத்தரை ஒருத்தர் மனதார விரும்புறோமம்மா..வீ ஃபோலன் இன் லவ்மா. ஐ லவ் ஹேர்மா..."

அம்மா காயத்ரி அப்படியே உட்கார்ந்து விட்டாள்- சிலைமாதிரி...

"ஸ்னேகாவைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு உடம்பு-மனசு- இரத்தம் பூராவும் ஆசையெல்லாம் சேமிச்சு வெச்சிட்டு இருக்கேன்மா. என்னோட வாழ்க்கையில ஸ்னேகா இல்லாமல் போனா செத்திடுவேன்மா...!"

"அதேதான்பா நானும் சொல்றேன். நீ அவளைக் கல்யாணம் செஞ்சுட்டால் நான் செத்திடுவேன்பா. வேணாம்.... அப்படியொரு நெனப்பு மனசுல இருந்தா அழிச்சிடு. இந்த ஜென்மத்துக்கும் இப்படியொரு கண்றாவி நடக்க வேணாம். ஊரு உலகத்துல பொண்ணு இல்லாததற்கா நீயொரு ஆட்டக்காரியை லவ் பண்ணினே? உன்னோட அழகு, பெயர், புகழ், அந்தஸ்து பார்த்தே ஆயிரம் என்ன இலட்சம் பொண்ணுகள் வரிசையில நிற்பாங்களேப்பா..."

"நடிகைன்னாலும் அவளும் பொண்ணுதானேம்மா!"

"நல்ல பொண்ணுக்கு நானூறு பேர் முன்னால ஆட்டம் போட்டுப் பிழைப்பு நடத்த மனசு வராதுப்பா..."

"நடிப்பு அவளோட தொழில்மா... கல்யாணம் ஆயிட்டால் நடிக்கமாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணியிருக்காள். விட்டுடுவாள்மா..."

"விட்டாலும் சரி... தொடர்ந்தாலும் சரி... ஒரு நடிகை உனக்கு மனைவியா வர வேணாம்பா. செத்தாலும் சம்மதிக்க மாட்டேன்."

"மனசைப் பறிகொடுத்திட்டேன்மா!"

"நடிகைக்கிட்டத்தானே... உடம்பைப் பறிகொடுத்தாலும் தப்பில்லைப்பா!"

அம்ரீஷ் அம்மாவைக் கொஞ்சம் வெறுப்போடு பார்த்தான்.

"அம்மா.... நீயா இப்படிப் பேசுறே?"

"இந்த மாதிரி சூழ்நிலையில எந்த அம்மாவும் இப்படித்தான்பா பேசுவாள். செத்தாலும் சரி.. ஒரு நடிகையை, ஆட்டக்காரியை எந்த ஜென்மத்துக்கும் நான் மருமகளாக ஏத்துக்கமாட்டேன்..."

அம்ரீஷ் குழம்பிப்போய்- கோபமாய்ப் பார்த்தான்.

● **வெள்ளிக்கிழமை**

**அ**ன்று வெளியாகிய-

அத்தனை மொழிப் பத்திரிகைகளிலும், அம்ரீஷின் ஃபோட்டோவோடு விதம் விதமான தலைப்புக்களில் செய்திகள் வெளியாகின. அத்தனை செய்திகளினதும் சாராம்சம் ஒன்றுதான்... 'அம்ரீஷுக்கு என்னவாயிற்று? அதிரடித் துடுப்படி வீரன் ஆட்டமிழந்தது ஏன்? ஆடுகளத்தில் நுழையும் போதும்... ஆட எத்தனிக்கும்போதும் அம்ரீஷ் முகத்தில் ஒரு சோர்வு காணப்பட்டதே... அது ஏன்? ஏன்...ஏன்...ஏன்...?' வாசகர்கள் கூட குழம்பிப் போனார்கள்.

**ம**தியவேளை!

வெளியே வெயில் சுட்டெரித்துக் கொண்டிருக்க,



நேரம் இரண்டைத் தாண்டிக்கொண்டிருந்தது.

காயத்ரி அதிர்வுகளோடு பார்க்க... வாடிய முகத்தோடும் கலங்கிய கண்களோடும் அம்ரீஷ் வீட்டினுள் நுழைந்த ஸ்னேகா, தன்னை சுயமாய் அறிமுகப்படுத்தி விட்டுக்கொண்டு சொன்னாள்.

"ஆன்ட்டீ உங்ககூடக் கொஞ்சம் பேசணும்...!"

காயத்ரிக்கு ஏனோ கோபம் வரவில்லை.

உருகிவிடும் ஐஸ்கிறீம் உடம்பு. முழுக்கவும் போர்த்திவிட்டபடி, பச்சையும் மஞ்சளுமாய் கொட்டன்சேலை அணிந்திருந்த ஸ்னேகா, எவ்வித செயற்கைப் பூச்சுக்களுமின்றி- மகாலட்சுமி மாதிரியான இயற்கை அழகோடு- அடக்கம் கலந்த பணிவோடு இருக்க-

காய்த்ரிக்கு வியப்பு மேலிட்டது. "இவளா நடிகை?"

நம்பமுடியாமல் பார்த்தாள்.

சினிமாவில் பார்த்த ஸ்னேகாவில் இருந்து முற்றும் மாறுபட்டவளாக- குடும்பப் பெண்ணாகத் தெரிந்தாள் அவள். யாரையும் வசீகரிக்கும் ஒரு அழகு... கையெடுத்துக் கும்பிடத் தோன்றுகின்ற மாதிரி...

ஸ்னேகா சொன்னாள்:

"அம்ரீஷும் நானும் ஒருத்தரையொருத்தர் விரும்புறதை நீங்க ஏத்துக்கப்போறதில்லைன்னு எனக்குத் தெரியும் ஆன்ட்டீ. அதற்காக உங்க கௌரவமெல்லாம் சந்தி சிரிக்க வெச்சிட்டு நாம ஓடிப்போய்க் கல்யாணம் செஞ்சுக்கவும்மாட்டோம். நானும் ஒரு சராசரி மனுஷியாயிருந்து அம்ரீஷைக் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுகிறேனே தவிர, ஓடிப்போய் ஒரு நடிகையாட்டம்- ஊரே காறித்துப்புற அளவுக்கு மோசமான செயல் எதுவும் செஞ்சுக்கிறதா உத்தேசமில்ல. ப்ளீஸ்.. ஒரு நடிகையா என்னைப் பார்க்காம- ஒரு மனுஷியாப் பார்த்து என்னோட வார்த்தையை நம்புங்க...!"

ஸ்னேகா கண்ணீரோடு கைகூப்பினாள்.

"நம்ம காதலுக்காக மடிப்பிச்சை கேட்க நான் வரல்ல ஆன்ட்டீ... என்னோட அம்ரீஷுக்காக ஒரு உதவி கேட்டு வந்திருக்கேன்!" என்றவள் நிறுத்தி மீண்டும் சொன்னாள்:

"அம்ரீஷுக்கு ஒரு பிரச்சனைன்னா என்னால தாங்கமுடியாது. செத்திடுவேன். அம்ரீஷோட ஒரு நொடிச் சந்தோஷத்துக்காக நான் காலம் பூராவும் கண்கலங்கத் தயாராயிருக்கேன். என்னை நடிகையாகப் பார்த்த மனிதர்களில... என் உணர்வுகளை மதித்து சாதாரண மனுஷியா என்மனசைப் பார்த்தது அம்ரீஷ் மட்டும்தான். அவருக்கு காலம் பூராவும் கடமைப்பட்டிருக்கேன்..." ஸ்னேகாவின் குரல் கரகரக்க-

காயத்ரிக்கு ஏதோ உறைந்துபோனது.

"நான் நடிகைதான்... நல்லது செஞ்சாலும் தப்பாப் பேசுற- எழுதுற ஒரு கூட்டம் என்னை சதாவும் கண்காணிச்சிட்டிருக்கு... என்னோட மன வேதனையில குளிர்காஞ்சிட்டிருக்கு. ஆனால் நான் கவலைப்படல்ல... அம்ரீஷுக்கான தியாகமா என்னை நான் எவ்வளவு தூரமும் நோகடிச்சுக்கத் தயாராயிருக்கேன். ஆனால்... அம்ரீஷ் பெயரோட, புகழோட கடைசிவரைக்கும் சந்தோஷமாயிருக்கணும். என்னோட பிரார்த்தனையும் அதுதான்!" என்றவள் சடாரென காயத்ரி எதிர்பாராமல் அவள் காலில் விழுந்தாள்; கெஞ்சினாள் கண்ணீரோடு...

"உங்க மேல சத்தியமாச் சொல்றேன். அம்ரீஷை விட்டு நான் விலகிப்போயிடறேன்; இல்ல செத்துப் போயிடறேன்... ஆனால், அம்ரீஷ் இந்தியாவுல இருந்து திரும்பி வர்றவரைக்குமாவது எங்க காதலுக்கு மனப்பூர்வ ஆதரவு தர்ற மாதிரி அம்ரீஷோட ஃபோன்ல பேசுங்க. இல்ல..நடியுங்க. ஏன்னா... மனசுல கவலையோட அம்ரீஷால கிரிக்கெட் விளையாட முடியாது. ஜொலிக்க முடியாது. தோற்றுப் போயிடுவாரு ஆன்ட்டீ..." என்றவள் பைத்தியம் மாதிரி அரற்றினாள். "அம்ரீஷ் ஜெயிக்கணும். சதாவும் ஜெயிச்சிட்டேயிருக்கணும். அவர் தோற்று என்னால பார்க்க முடியாது!"

காயத்ரி ஏதோ வித்தியாசமாய் உணர்ந்தாள். ஸ்னேகாவின் வார்த்தைகள் அவள் மூளையில் உறைத்து, ஏதோவொன்றை உணர்த்தி... ஏதோவொன்று புரியவாரம்பித்தது. அப்படியே... ஸ்னேகாவைத் தோள்பிடித்துத் தூக்கி... தன்னோடு சேர்த்து அணைத்துக் கொள்ள,

ஸ்னேகா ஆச்சரியமாய்ப் பார்த்தாள். எதிர்பார்க்காத திருப்பம்!

**இ**ரவு!

வீட்டிலிருந்தபடியே காயத்ரியும் ஸ்னேகாவும் ஒன்றாய்- அம்ரீஷுக்கு மாறி மாறித் தொலைபேசினார்கள். அம்ரீஷினால் நம்பவே முடியவில்லை. உடனே இந்தியாவில் இருந்து பறந்து வந்துவிட மனம்துடித்தது. உற்சாகம் பிய்த்துக்கொண்டது. அம்மா சொன்னாள்,

"நான் தீர்மானிச்சுட்டேன். நீயே வேணாம்னாலும், உன் மனைவி ஸ்னேகா தான்னு நான் தீர்மானிச்சுட்டேன். என்னோட மருமகள் இப்போது என்னுடன்தான் இருக்கிறாள், வெற்றியோடு திரும்பி வா... முறைப்படி கட்டிவைக்கிறேன்..."

பக்கத்தில் இருந்த ஸ்னேகாவின் முகத்தில் வெட்கம் தெரிந்தது.

**ச**னிக்கிழமை

இந்திய சேம்பாக்கம் மைதானம்,

பார்வையாளர்களின் உற்சாகத் துள்ளலில் சந்தோஷம் பொங்கி வழிய,

பந்துவீச்சாளர்கள் திணறிப்போக-

ஒன்றரை மணிநேரமாகக் களத்தில் நின்று, நூறு ஓட்டங்களையும் தாண்டி ஆட்டமிழக்காமல் சிக்ஸர், பவுண்டரி என்று அதிரடியாய் விளாசிக்கொண்டிருந்தான் அம்ரீஷ்-மாஸ்டர் ப்ளாஸ்டர் பேட்ஸ்மேன்.

வெற்றி அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது.

---

# என்னாச்சு?

**எ**ங்கிருந்தோ பூங்கொடி கிராமத்திற்கு ஒரு துறவி வந்தார். 'சத்தியானந்தர்' என்பது அவர் பெயர். புலித்தோலெல்லாம் கொண்டு வந்திருந்தார். வீடு ஒன்றை அமர்த்திக் கொண்டு, சன்னல் கதவுகள் உட்பட அனைத்துக் கதவுகளையும் மூடி உள்ளேயே இருந்தார். போவோர் வருவோர் பார்த்து, "சாமி பெரிய சாதகர் போல இருக்கிறது; அகண்ட நிஷ்டையில் அமர்ந்துவிட்டாரே," என்று அந்த ஊர் மக்கள் முழுவதும் அந்த வீட்டைச் சுற்றிக் கூடிவிட்டனர்.



ஸ்வாமி

பூ, பழம், வெற்றிலை பாக்குடனும் கூடி, சிலர் பெருக்குவதும், மெழுகுவதும், கோலம் போடுவதும் செய்து, வாசனை பத்திகள் கொழுத்தி வைத்து பூக்களால் அலங்காரம் செய்து அந்த வீட்டை ஓர் ஆசிரமமாக மாற்றிவிட்டனர். பக்திப் பாட்டெல்லாம் பாடுவதும் வழக்கமாயிற்று.

இந்த நிலையில் ஒவ்வொரு நாளிரவும் ஓர் அறைக்குள் தாழிட்டுக் கொண்டு விடுவதும், பகலெல்லாம் ஆன்மீக உரை கூறுவதுமாக இருந்த அவரிடம் ஒரு குறும்புக்காரன் அருளாநந்தர் என்ற பெயரில் சீடனாகச் சேர்ந்துவிட்டான். இருவரையும் மக்கள் நன்கு மரியாதை செய்து மகோந்தமாக வாழச் செய்தனர்.

சீடருக்கு, குரு பூட்டிய அறையினுள் என்ன செய்கின்றார்? என்று பார்க்க ஆசை எழுந்தது. தந்திரமாக ஒரு சன்னல் கதவைத் துளை செய்து கொண்டான். குருதேவரான சத்தியானந்தர் தவத்தியானக் கோலத்தில் இருந்தார். ஆனால் அவர் திருவாய்,

"என்னாச்சோ? என்னாச்சோ?" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

'இதன் மர்மம் என்னவாக இருக்கும்?' என்று யோசித்த சீடனுக்கு ஏதும் விளங்கவில்லை. உடனே குரு எங்கிருந்து வந்தார்? என்ன அவர் பூர்வீகம்? என்றெல்லாம் விசாரித்துக் கொண்டே போய் ஒரு பெண்மணியைக் கண்டு பிடித்தார்.

அவள் தன் காதலன் தன்னைக்கைவிடாது கல்யாணம் செய்து கொள்வான் என்று தன்னை வழங்கியவள். ஆனால் அவள் காதலன் அவளை விட்டு ஓடிவிட்டான். இப்போது அவள் நிறைமாதக் கர்ப்பிணி.

அவளை இப்படி விட்டு விட்டுப் போனவன்தான் தன் குரு சத்தியானந்தர் ஸ்வாமி என்றறிந்தான் சீடன். அவளுக்கு பிரசவம் நடந்தது. ஒரு பெண்குழந்தை பிறந்தது. அவளையும் அழைத்துக் கொண்டு பட்டுத் துணியில் குழந்தையை மூடி எடுத்துக் கொண்டு சீடன் நேரே குருவிடம் இரவில், எவரும் அறியாமல் வந்தான். கதவைத் திறந்தான்.

"என்னாச்சோ? என்னாச்சோ?" என்று இருந்த குருவிடம், "பொண்ணாச்சு இந்தாருங்கள்!" என்று குழந்தையைக் கொடுத்தான். அந்தப் பெண்மணியையும் சேர்த்தான்.

நாம் ஒருவகையில், நினைத்திருக்கும் சிலர், வேறு வகையினராக இருப்பர். அவருடைய செயல்களுக்கும் விளைவு, விபரீதமாக அல்லது வேடிக்கையாக விடிந்து விடுவதுண்டு.

---

# பாதிப்பு

உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர் ரோல்ட் டால் எழுதிய சிறுகதையின் தமிழாக்கம்

"சுட்டுத் தள்ளுங்க, எந்த ஜெர்மன்காரனைப் பார்த்தாலும் விடாதீங்க !"

**வா**ழ்க்கை சீராக ஒரே பாதையில் செல்லும்வரை பிரச்சனை ஏதுமில்லை. ஆனால், தோல்வி, துன்பம், அழிவு வரும்போது மனிதன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு மாதிரி பாதிக்கப்பட்டு தன்னிலை மாறுகிறான்.

அதற்கு உதாரணம்தான் இந்தக்கதை.

இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயம். கிரேக்க நாட்டில் ஒரு குட்டித்தீவு அது. பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த விமானம் என்று ஜெர்மனியப் படைவீரர்களால் சுடப்பட்டது. ஆனால் அந்த பைலட் பாரசூட்டில் இறங்கி அதிஷ்டவசமாக உயிர் தப்பினார். அவர் இறங்கிய இடம் அந்தக் குட்டித் தீவில். வலது காலில் பலத்த காயத்துடன் அங்கிருந்த ஒரு கிராமத்திற்குள் நுழைந்த அந்த பைலட், அங்கு தனக்கு யாராவது உதவுவார்களா, என்று குரல் கொடுத்தார். ஆனால் அங்கு இவர் குரலுக்கு யாரும் செவிசாய்க்கவில்லை.

காரணம் இந்த இரண்டாம் உலகப் போர் காரணமாக அந்தக் கிராமமே துவம்சம் செய்யப்பட்டிருந்தது. எல்லா வீடுகளும் வெடிகுண்டுகளுக்கு இரையாகியிருந்தன. நொண்டியபடியே அந்த பைலட் மீண்டும் மீண்டும் 'ஹெல்ப்-ஹெல்ப்' என்று குரல் கொடுத்துக்கொண்டே வந்தார். அந்தக் குட்டித் தீவிலிருந்து ஒரு ஏழெட்டு கிலோ மீட்டர் படகில் பயணம் செய்தால், அருகிலுள்ள மற்றொரு தீவிற்குச் செல்லலாம். அங்கு சென்று ஏதாவது உதவி கிடைக்கிறதா, என்று முயற்சி செய்யலாம் என்று எண்ணியபடியே அந்த பைலட் கடற்கரைக்கு அருகே வந்து நின்றார். மீண்டும் கத்தினார். அதிஷ்டவசமாக இவர் குரலுக்கு பதில் குரலும் இம்முறை வந்தது.

"யாரப்பா நீ? எதுக்கு வந்திருக்கே?" என்ற குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தார் பைலட்.

ஒரு வயதான கிழவர் அங்கு அமர்ந்திருந்தார். நீண்ட தாடி. தலையில் ஒரு சின்ன தொப்பி.. காலரில்லாத சட்டை அணிந்து கொண்டு விரக்தியுடன் அவர் காணப்பட்டார்.

"வணக்கங்க! நான் ஒரு பைலட்! இங்கிலீஷ்காரன்!" என்று தொடங்கி நடந்ததை சுருக்கமாக கூறிமுடித்தார் அந்த பைலட்.

"இந்த ஊரே ஜெர்மனியர்களின் குண்டு வீச்சினால் அழிஞ்சு போச்சு. இன்னைக்கு காலைல கூட, இதோ இருக்கே, இந்தப் படகுக்காரன் வீட்ல குண்டு போட்டாங்க.



எல்லாம் முடிஞ்சு போச்சு.." விரக்தியுடன் அந்த வீட்டைக் காட்டியவாறே, பதிலளித்தார் அந்த வயோதிகர்.

"கேட்கறதுக்கே ரொம்ப வருத்தமாயிருக்குங்க.. ஆனா நான் எப்படியாவது பெரிய தீவுக்குப்போகணும். படகு ஏதாவது கிடைக்குங்களா..?" என்று கேட்டார் பைலட்.

"அதான் சொன்னேனே... இந்தத் தீவுக்குன்னு ஒரே படகுக்காரன்தான் இருக்கான். அவன் வீட்லயும் காலையில குண்டு போட்டுட்டாங்க. அவன் பொண்டாட்டி அதோ அந்த இடது பக்கத்துல இருக்கிற தெரு முனையில, இருக்கிற ஒரு வீட்ல இருக்கா... அவ பேரு 'ஆன்னா'. அங்கே போய் கேட்டீன்னா அந்தப் படகுக்காரன் எங்க இருக்கான்னு சொல்லுவாங்க."

"ரொம்ப நன்றிங்க!" என்று கூறிவிட்டு அவசரமாக அந்த வீட்டை நோக்கிப் புறப்பட்டார் பைலட்.

"கொஞ்சம் இரு தம்பி... அந்த படகுக்காரனுக்கு ஒரு பொண்ணு இருந்தா. அவ பேரு மரியா.

அவளைக்கூட ஜெர்மானிய வீரர்கள் காலையில வந்து தூக்கிட்டுப் போயிட்டாங்க. அதையும் மனசுல வச்சுக்கோங்க!" என்று அந்த பைலட்டுக்கு சம்பந்தமில்லாத தகவல்களையும் அந்தப் பெரியவர் கூறினார்.

"சரிங்க...!" என்று கூறிவிட்டு அந்த வீட்டிற்கு சென்று அங்குள்ள பெண்ணிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"நீங்க பைலட்டுன்னு சொல்றீங்க... எவ்வளவு ஜெர்மானிய ஆட்களை இதுவரை கொன்னுருக்கீங்க?" என்று திடுக்கிடும் கேள்வி ஒன்றைக் கேட்டாள் ஆன்னா என்ற அந்த வயதான பெண்மணி.

"கணக்கெல்லாம் வச்சுக்கலீங்க..." பைலட் நிதானமாகவே பதில் அளித்தார்.

"சுட்டுத்தள்ளுங்க.. இனி எந்த ஜெர்மன்காரனைப் பார்த்தாலும் விடாதீங்க... குழந்தைங்க... குட்டிங்க.. பொம்பளைங்க யாரையும் விட்டு வைக்காதீங்க...!" என்று ஆவேசமாகப் பேசினாள் அந்தப் பெண்மணி.

தொடர்ந்து,

"உங்களுக்குப் படகுதானே வேணும்...? நான் ஏற்பாடு பண்றேன். அதோ அந்த கடலோரத்துல நீண்ட தாடி வச்சுக்கிட்டு தொப்பி போட்டுக்கிட்டு காலரில்லாத சட்டை போட்டிருக்காரே அவர்தான் அந்தப் படகுக்காரர்! அவரைப் பிடிச்சா நீங்க அந்த பெரிய தீவுக்குப் போய்ச் சேரலாம்," என்று கூறி முடித்தாள் அந்தப் பெண்மணி.

குண்டு வெடிப்புகள் அந்தப் பெண்மணிக்கு பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டி விட்டுள்ளது. அந்தப் படகுக்காரனோ மன நோயாளி.

(இந்தக் கதையில் அந்த ஆசிரியர் சொல்ல வந்தது என்னவென்றால், குண்டுகள் மக்களின் உயிரை மட்டும் பறிக்கவில்லை; பலரை மனோர்தியாகவும் பாதிக்கிறது.)





படிப்பகம்

# மலரே மலரே



மன்னரின் மகளுக்கு
மணவாளன் தேவை!
சுயம் வரம் நடக்கிறது
மணமகளே நேரடியாக
சோதனை நடத்துவாள்!

முரசடித்து திக்கெட்டும்
செய்தி பரப்பினார்கள்!

இனிப்பான போட்டிதான்
தோற்றால் மட்டும்
உயிர் மிஞ்சாது!

இளவரசிக்கு
கொடுக்க வேண்டும் முத்தம்!

இளவரசியை
முகம் சிவக்க வைப்பவனுக்கு
மணமாலை!

இளவரசியை
முகம் சுளிக்க வைப்பவனுக்கு
பிணமாலை!

உயிர் போனால் போகட்டும்
ஒரு முறையென்றாலும்
அவள் அதரத்தை
உரசும் பாக்யம் போதும்!

சிரம் போனால் போகட்டும்
ஒரு முறையென்றாலும்
இதழில் சுரம் மீட்டலாமே!

மன்னர்கள், இளவரசர்கள்
தளபதிகள் கூடினார்கள்!

பூவில் தேன் குடிக்க
வந்து குவிந்தன வண்டுகள்!

கள் குடிக்க
கூலியெதற்கு?

ஒழுங்காகக் குடித்தால்
கூலியும் தரும்போது
கசக்கவோ செய்யும்?!

'முதல் ஆள்வரலாம்'
சேவகன் அழைத்தான்.

கட்டிளங்காளையாய்
மீசை முறுக்கோடு
பாண்டிய இளவரசன்
கிட்டத்தட்ட பாய்ந்துபோனான்!

மயக்கும் விழிகளும்
மதன மேனியுமாய்
இளிக்கும் இளவரசி
தனியாய் இருந்தாள்!

இப்படி ஒரு பேரழகியா?
'கண்டதுமே மயக்கம் வருகிறதே
உண்டதும் என்னாகுமோ?'

இளவரசனுக்கு
இன்ப அதிர்ச்சியில்
உடல் தள்ளாடியது
உணர்ச்சி பந்தாடியது!

வேகத்தில் தாவி
அவள் முகத்தை ஏந்தி
இட்டான் ஒரு
ஆவேச முத்தம்!

பசித்த புலி
பாய்ந்தது போலிருந்தது.
பயமுறுத்தும் முத்தத்தில்
நயமிருப்பதில்லை!

முகம் சுளித்தாள்
இளவரசி!

பாய்ந்தனர் சேவகர்
மறுநொடியே
சீவப்பட்டது சிரம்!

இரண்டாவதாக வந்தது
ஓர் மன்னன்!

இளம் வயதை
எப்போதோ தொலைத்து
விட்டவன்!

நெருங்கினான், ஏந்தினான்
விரல்கள் நடுங்கின
இதழ்களில் இறங்கினான்,
தன்னை மறந்தவன்
பற்களால் கவ்வினான்
மெல்லிதழ் வலித்தது!

முகம் சுளித்தாள்
சினத்தோடு!

மன்னன் தலை
தேங்காயாக உருண்டது!

அதன்பின் வந்தவன்
இளைஞனும் அல்ல
முதியவனும் அல்ல
இரண்டும் கெட்டான்.

காணாததைக் கண்ட வேகம்
முன் அனுபவமும் இல்லை.
முரட்டுக் காளையாக
இதழை மிரட்டினான்!

'இவன் என்ன
முத்தமிட வந்தானா
கொத்திப்போக வந்தானா?'

முகம் சுளித்தாள்
முத்தழகி.

இளநீராய் எண்ணி
சீவினர் சிரத்தை!

அடுத்தவனுக்கோ நடுத்தர வயது
அனுபவம் உண்டு
பிரயோகிக்க தெரியவில்லை!

எட்டிப் பார்க்கும்
இரு சின்ன முயல்களாய்
விம்மித் தணியும் அழகுகள்
அவன் ஆசையை
தட்டிவிட்டன!

இதழை பற்றியவன்
மெய்மறந்து
முத்தத்தோடு சப்தமிட்டான்!

இதமில்லாத முத்தம்
சித்தத்தை கலைக்கும்
சத்தம் வேறு!

முகம் சுளித்தாள்
இளவரசி!

ஒரே வீச்சில்
உருண்டது தலை!

இளவரசி இப்போது
தரிப்பிடம் மாறினாள்.

தாமரை பூத்த
தடாகத்தில் இறங்கினாள்!

ஒன்று
மலர் தாமரை
இன்னொன்று
மனித தாமரை!

ரதிகன் தருவது

அடுத்து வந்தவனுக்கு
தான் ஒரு பேரழகன்
என்று நினைப்பு!

நளினமாய் நடக்க முயன்று
தடாகப் படிக்கட்டில்
தடுக்கி விழுந்தான்!

அத்தோடு திரும்பியிருக்கலாம்
ஆசை சதி செய்தது!

தன் பலத்தை காண்பிக்க
இறுக்கி அணைத்தான்,
இதழை வதைத்தான்!

தள்ளிவிட்டாள்
முகம் சுளித்தாள்!

வாளுக்கு வேலை
தலை காலி!

பின்னரும் பலர்
வந்தனர்-சிரம் தந்தனர்!

முத்தமிடத் தெரியாமல்
உருண்ட தலைகள்
மொத்தம் முப்பது!

முப்பத்தொராவதாக
வந்தவன் குள்ளன்!
அழகும் இல்லை
ஆடம்பரமும் இல்லை!

'முத்தமிட முன்னரே
முகம் சுளித்து விடலாமா'
என்று யோசித்தாள்.

வந்தவன் அவளை
பக்குவமாய் நெருங்கினான்.

தடுமாற்றமில்லை.
அவசரப்படவில்லை.

அவள் கண்களை
நேராக நோக்கினான்!

இதழ்களை தன்
விரல்களால் வருடினான்
இதழுக்கும் நோகாமல்
தன் விரலுக்கும் நோகாமல்
மெல்லிய வருடல்!

இளவரசி சிலிர்த்தாள்
இதழ்கள் துடித்தன!

கன்னம் இரண்டை
கையிரண்டால் ஏந்தி
மெல்ல குனிந்து
இதழ் சுவை அறிந்தான்!

முகம் சுளிக்க நினைத்தவள்
அகம் குளிர விழி மூடினாள்!

நீண்டநேரம் இதழ்கள்
மோதின!
இரண்டறக் கலந்தன!

"இவனே என்
மணாளன்!"
இளவரசி அறிவித்தாள்.

மலரைவிட மென்மையானது
காமம்!
அதனையறிந்தான்
அவளை வென்றான்
பயனையும் அடைந்தான்!

"மலரினும் மெல்லிது காமம்
சிலர்—அதன்
செவ்வி தலைப்படு வார்"

அதிகாரம்: 129. குறள்: 1289

# இலக்கிய நயம்

* ஜோர்ஜ்பெர்னாண்டஸ் பதவி விலக வேண்டும்! தமிழ் மாநில காங்கிரஸ் கோருகிறது. புலிகளுக்கான ஆதரவை விலக்கிக் கொள்ளுமாறும் நிர்ப்பந்திக்கிறதே?

மா. உதயகுமார், வத்தளை.

புலிகளுடன் மட்டுமல்ல; வேறு எந்த ஈழப்போராளி அமைப்புக்களுடனும் தொடர்பில்லாத ஒரே ஒரு தமிழக அரசியல்வாதியாக அக்காலத்தில் விளங்கியவர் ஜி.கே. மூப்பனார் மட்டும்தான்! தமிழ் உணர்வே இல்லாததால்தான் தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் திராவிடக் கட்சிகளின் நிழலில் ஒதுங்குமளவுக்கு மக்களால் ஓரம் கட்டப்பட்டது. ஆகவே மூப்பனாரின் கட்சியின் நிலைப்பாடு ஆச்சரியமல்ல!

✉ ✍

* இந்தியா அணுச்சோதனையை நிறுத்த முன்வரும் என்கிறார்களே?

சி. சத்தியநாதன், கண்டி.

மளமளவென்று ஐந்து பரிசோதனைகளை நடத்திய நோக்கமே அதுதானே! அணுக்குண்டை வடிவமைக்கும் பக்குவத்தை பெற்றுவிட்டால் இனி சோதனைக்கு அவசியம் இருக்காது! தேவைப்படும்போது குண்டு செய்து கொள்ளலாம்! அந்த நம்பிக்கை இருந்தால் அணுக்குண்டுச் சோதனை தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பம் போடக்கூடும். ஆனால் அணுத்தடை ஒப்பந்தத்தில் கையொப்பம் போடவே போடாது!

✉ ✍

* அசட்டுத்தனம் என்றால் என்ன?

செல்வி ஜி. மாலினி, வவுனியா.

ஒருத்தர் கூறினார்:

"இன்று மட்டக்களப்பிலே ஒரு கல்யாணம். அதற்கு நான்போக முடியவில்லையே என்று நினைக்கும்போது மனதுக்கு வருத்தமாக இருக்கிறது!"

அவர் உணர்ச்சிவசப்படுவதைப் பார்த்துவிட்டு, நண்பர் கூறினார்:

"அதற்காக கவலைப்படாதே, ஒரு வாழ்த்துத் தந்தி, கொடுத்திடு!"

"அது எப்படி முடியும்?"

"ஏனப்பா?"

"நான்தானே கல்யாண மாப்பிள்ளை!" என்றார் அவர்.

✉ ✍

* வீரிய மாத்திரைகளை நம்பலாமா?

கே.எஸ், மருதமுனை.

ஒரு ஆசாமி சொன்னார்:

என் குதிரை வேகமாக ஓடுவதற்கு என்ன வழி? என்று கால் நடை மருத்துவரிடம் கேட்டேன். அவர் ஒரு போத்தல் நிறைய மாத்திரைகள் கொடுத்து, "தினம் இரண்டு வீதம் கொடு!" என்றார்.

"முதல் நாள் இரண்டு மாத்திரைகளைக் கொடுத்தேன். கொடுத்துவிட்டு ஏறப்போனேன். அம்பு மாதிரிப் பாய்ந்து ஓடிப்போய் விட்டது!" என்றான்.

"அடடே... நீங்கள் என்ன செய்தீர்கள்?" என்று கேட்டார் நண்பர்.

"மீதி மாத்திரை முழுவதையும் நான் போட்டுக்கொண்டு துரத்திப் பிடித்தேன்!" என்றார் ஆசாமி.

ஆகவே மாத்திரைகள் எதிர்மாறான விளைவுகளையும் தந்துவிடும். ஏமாறாதீர்கள்!

✉ ✍

* கிளின்ரனுக்கு அணுக்குண்டு பிடிக்காதா?


கி. ரதன், மட்டக்களப்பு.

அமெரிக்காவில் உலாவரும் மற்றொரு தமாஷ்:

"கிளின்ரனுக்கும் வாஜ்பேயிக்கும் என்ன வித்தியாசம்?"

"வாஜ்பேயிக்கு அணுக்குண்டு பிடிக்கும்! கிளின்ரனுக்கு செக்ஸ் குண்டுதான் பிடிக்கும்!"

# அணு ஆயுதத்தின் மாதிரி வடிவம்



1. மின்சக்தி டெட்டனேற்றர்கள்.
2. டி/ரி நியூட்ரோன் ஒளி மின் உற்பத்தி ஜெனரேற்றர்.
3. வேகமாக வெடிக்கவைக்கும் கண்ணாடி.
4. தாமதமாக வெடிக்கவைக்கும் கண்ணாடி
5. லித்தியம்-6 டியூற்றெறைட்டு
6. புளுட்டோனியம்-239
7. யூரேனியம்- 235
8. லித்தியம்- 6 டியூற்றெறைட்டு
9. புளுட்டோனியம்- 239 ஸ்பார்க் பிளக்
10. ட்றிட்ரியம் மற்றும் டியூற்ரெறியம் வாயு சேமிப்புக் கலன்.

ஸ்போர்ட்ஸ்

## கேப்டன்கள் மாநாடு



உலக கிரிக்கெட் கேப்டன்களின் மாநாடு அண்மையில் இலண்டனில் நடைபெற்றது. இதில் இந்திய கிரிக்கெட் கேப்டன் முகமட் அஸாருதீன் பேசும்போது,

"குறைந்த இடைவெளியில் அதிக போட்டிகள் நடத்துவது வீரர்களின் உடல் நிலையைப் பாதிக்கும். எனவே இனிவரும் சந்தர்ப்பங்களில் இதைத் தவிர்க்க வேண்டும்!" என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பின்னர் முடிவு அறிவிக்கப்படும் என்று கிரிக்கெட் குழுவினர் தெரிவித்தனர். அத்துடன் மேலும் பல முக்கிய முடிவுகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் இலங்கை கிரிக்கெட் கேப்டன் அர்ஜுன ரணதுங்க மற்றும் பாகிஸ்தான் கேப்டன் ரஷீத் லத்தீப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## ஒக்டோபரில் போட்டிகள்

ஐ.சி.சி.நொக்-அவுட் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் வரும் ஒக்டோபர் மாதம் 24ம் திகதி பங்களாதேஷ் நாட்டின் தலைநகரான டாக்காவில் நடைபெறவுள்ளன.

ஒக்டோபர் 24 தொடக்கம் 31ம் திகதி வரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் 9 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

<u>போட்டி விபரம் வருமாறு:</u>

ஒக்டோபர் 24 இங்கிலாந்து-ஸிம்பாப்வே (1வது போட்டி.)
ஒக்டோபர் 25 அவுஸ்திரேலியா-நியூஸிலாந்து (2வது போட்டி.)
ஒக்டோபர் 26 மே.இ.தீவு-தெ.ஆபிரிக்கா (3வது போட்டி.)
ஒக்டோபர் 27 இலங்கை-முதல் போட்டியில் வென்ற அணி (4வது போட்டி.)
ஒக்டோபர் 28 இந்தியா-பாகிஸ்தான் (5வது போட்டி.)
ஒக்டோபர் 29 2வது-3வது போட்டிகளில் வென்ற அணிகள் (1வது அரையிறுதி)
ஒக்டோபர் 30 4வது-5வது போட்டிகளில் வென்ற அணிகள் (2வது அரையிறுதி)
ஒக்டோபர் 31 இறுதிப்போட்டி (1வது அரையிறுதி-2வது அரையிறுதிகளில் வென்ற அணிகள்)

## பந்துத் தாக்குதல்



நியூஸிலாந்து அணி தற்போது இலங்கையில் விளையாடி வருகிறது. இலங்கை வருவதற்கு முன் நியூஸிலாந்து சுழற்பந்து வீச்சாளர் டானியல் வெட்டோரி உள்ளூர் அணியான கன்டர்பறி கிரிக்கெட் அணிக்காக விளையாடினார்.

கிறைஸ்ட்சேர்ச் மைதானத்தில் நடந்த இப்போட்டியில் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த வெட்டோரிக்கு இன்னொரு நியூஸிலாந்து வீரரான கிறிஸ் கெய்ன்ஸ் பந்து வீசினார். வேகமாக வந்தபந்து வெட்டோரியின் விக்கெட்டைச் சாய்க்காது அவரது தலையைப் பதம் பார்த்தது.

நல்லவேளை வெட்டோரி ஹெல்மெட் அணிந்திருந்ததால் அவரது தலை தப்பியது. எனினும் வேகப்பந்தின் தாக்குதலினால் தரையில் வீழ்ந்த வெட்டோரியால் எழுந்திருக்க முடியவில்லை. உடனடியாக ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் செல்லப்பட்ட வெட்டோரிக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

"விளையாட்டின்போது மரணமடைந்த வீரன் வெட்டோரி, என்ற வரலாற்றுப் புகழ் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டதே!" என்று குணமான பின் தமாஷாக கூறியுள்ளார் டானியல் வெட்டோரி.

## அணிக்குள் கசப்பு

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் கசப்புணர்வு ஒன்று தோன்றியிருக்கிறது. இதனைத் துரிதமாகத் துடைத்தெறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

டெஸ்ட் ஆட்டங்களில் மார்க் டெய்லர் கேப்டனாகப் பொறுப்பேற்று வருகிறார். அதேபோல ஒரு நாள் போட்டிகளுக்கு ஸ்ரீவ் வோவ் தலைமை தாங்குகிறார்.

அவுஸ்திரேலிய அணியின் கோச்சான ஜெஃப் மாஷ் அண்மையில் விடுத்த அறிக்கையினால்தான் பிரச்சனை தோன்றியுள்ளது.

"மார்க் டெய்லர் இனிமேல் ஒரு நாள் போட்டிகளிலோ அல்லது கட்டுப்பாட்டு ஓவர்களுடன் கூடியவற்றிலோ விளையாடமாட்டார்." என்று அவ்வறிக்கையில் தெரிவித்துவிட்டார்.

நிலைமையைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்காக கிரிக்கெட் சபைப் பிரமுகர்கள் டெய்லரையும், வோவையும் அழைத்திருக்கிறார்கள்.

* காகிதப் பணமா? நாணயமா? எது வசதி?

சி. ரங்கன், கொழும்பு-12

காகிதப் பணம் என்றால் பையில் வைத்துக்கொண்டே "இல்லை!" எனலாம். நாணயம் என்றால் சத்தம் போட்டு காட்டிக் கொடுத்துவிடும்! தாளோ, நாணயமோ—நாணயம் முக்கியம்.

✉ ✍

* முக்கியமான தருணத்தில் இ.தொ.கா. அவசரகாலச் சட்டத்தை எதிர்க்கும் என்கிறாராமே தொண்டா?

வி. பூபாலன், யாழ்ப்பாணம்.

பொதுஜன முன்னணிக்கு தோல்வி உறுதி என்று தெரிந்தால்தான், அந்த முக்கியமான தருணம் வரும்! நிர்வாணமாய் தமிழர்களை தெருவில் நிறுத்திய பின்னரும், "முக்கியமான தருணம் வரட்டும்!" என்றால் என்ன அர்த்தம்! "காலம் கனியட்டும்!" என்று கூறிக் கூறி தம்பிமாரை ஏமாற்றிய வடக்கு-கிழக்கு அண்ணன்மாரின் பாதையில் செல்கிறார் தொண்டா. குறித்து வையுங்கள்- தொண்டா ஒருநாளும் அவசரகாலச் சட்டத்தை எதிர்க்க மாட்டார்.

✉ ✍

* ஜெயலலிதா தொல்லையால் வாஜ்பேயி அரசுக்கு நித்தியகண்டம்தானே?

ஆர். ராதாகிருஷ்ணன், பதுளை.

தெலுங்கு தேச நாயுடுவும் கைவிட்டால்தான் அதோகதியாகவேண்டும்! சமீபத்திய பிரபல தமாஷ் என்ன தெரியுமா? படித்துவிட்டு அடிக்க வரக்கூடாது.

ஒரு நள்ளிரவு நேரத்தில் வாஜ்பேயி கிளின்ரனுக்கு ஃபோன் பண்ணினாராம்.

"என்னால் ஒரு பெண்ணையே சமாளிக்க முடியவில்லை; நீங்கள் எப்படி அத்தனை பெண்களையும் சமாளிக்கிறீர்கள்? அந்த இரகசியத்தை சொல்லுங்கள்!" என்று கேட்டாராம்.

கிளின்ரன் பதில் சொல்ல முன்னர் மறுமுனையில் இருந்து பெண் குரல் ஒன்று கேட்டதாம்.

"இப்போது பாதிசமாளிப்பில் இருக்கிறார். காலையில் ஃபோன் செய்யுங்கள் விபரமாகக் கூறுவார்!" என்றது பெண் குரல்.

இதுதான் அமெரிக்காவில் சமீபத்தில் அதிகப் பாவனையில் உள்ள தமாஷாம்!

✉ ✍

* இந்திய அரசின் கருத்தும் அமைச்சர்களது சொந்தக் கருத்தும் ஒன்றல்ல. "புலிகளை ஆதரியோம்!" என்று இந்திய பெண் அமைச்சர் கூறியுள்ளாரே?

ஏ. விஸ்வலிங்கம், கொழும்பு-06.

அதைச் சொன்ன அவரும் ஒரு அமைச்சர்தானே! தவிர இலங்கை இனப் பிரச்சனை விடயத்தில் அவரும் ஒரு கத்துக்குட்டி.

✉ ✍

## தொண்டாவும் தருணமும்

* சிந்தியா! யாழில் காணாமல்போனோருக்கான ஆணைக்குழு நியமிக்கப்போவதாக கூறிய ஜனாதிபதி வாக்குறுதியை கைவிட்டும் தமிழ்க் கட்சிகள் ஏன் எதிர்ப்புக் காட்டவில்லை?

என். அருணாசலம், யாழ்ப்பாணம்.

எதிர்ப்பா? அப்படியென்றால்...?

✉ ✍

## சிந்தியா பதில்கள்

* யாழ் மாநகர முதல்வர் கொலையில் சந்தேகம் உள்ளதா?

எம். இஸ்மாயில், புத்தளம்.

இல்லை!

✉ ✍

* டியர் சிந்தியா! சிம்ரான் பக்திப் படம் நடித்தால்...?

எஸ்.கே. நவாஸ், கல்முனை.

இரசிகர்களுக்கு முக்தி கிடைக்கும்!

✉ ✍

* 'இருவர்', 'ஜீன்ஸ்'-இரண்டில் ஐஸ்வர்யா ராய் கலக்குவது எதில்?

பூ. சிவநாதன், கொழும்பு-09.

நடிப்பில் 'இருவர்', துடிப்பில் 'ஜீன்ஸ்'!

✉ ✍

* சிந்தியா! ரெலிஃபோன் மணிபோல பெண்களால் சிரிக்க முடியுமா? முடியாதா?

ஆர். பாலாஜி, கம்பஹா.

எந்த ரக ரெலிஃபோன்?

✉ ✍

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 11

## எபிரேயர் படும் பாடு

எபிரேய வம்சத்துப் பெண்ணொருத்தி பெற்றெடுத்த அழகுமிகு ஆண் குழந்தை எகிப்து நாட்டு மன்னன் மகளின் அந்தப்புரத்தில் வாழ்கிறான். நீரிலிருந்து கிடைத்தமையினால் அக்காரணத்தைக் குறிக்குமுகமாக அக்குழந்தைக்கு மோசே என்று பெயர் சூட்டினாள் இளவரசி.

சிறுவன் மோசே அரச வம்சத்துக் குழந்தைகள் பெறும் அத்தனை வசதிகளையும் பெற்றான். அரண்மனைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கும் பண்டிதர்கள் மோசேக்கு சகல கலைகளையும் கற்பித்தனர். கல்வி கேள்வி முதல் வீரதீர சாகசச் செயல்களிலும் மோசே மிகச் சிறப்புடன் விளங்கினான். அவனுடைய ஆற்றல்களைக் கண்டு அவனுடைய ஆசிரியர்களே பிரமித்தனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக மோசே வளர்ச்சியடைந்தான். ஈடு இணையற்ற வீர இளைஞனாக மோசே திகழ்ந்தான்.



அரண்மனையில் வாழ்ந்தாலும் தான் ஓர் எபிரேய வம்சத்தவன் என்பதை அறிந்து கொண்டான். தான் பிறந்த சொந்த வீட்டில்- தனது சொந்தத் தாயின் மடியில் கிடந்து பால் குடித்தமையினால் தான் ஓர் எபிரேயன்- இஸ்ரயேல் மரபில் வந்தவன் என்ற உண்மைகளைத் தெரிந்துகொண்டான். எனினும் அரண்மனையில் ஏனைய அரசவம்சத்துப் பிள்ளைகளிடமோ, வேறு எவரிடமோ தான் ஓர் எபிரேயன் என்பதைக் காட்டிக்கொள்ளவில்லை.

### கலக்கமடைந்த மோசே

அரச குலத்துப்பிள்ளை என்றுதான் அரண்மனையிலுள்ளவர்கள் அனைவரும் கருதினர். இஸ்ரயேல் மக்கள், எகிப்தியர்களால் அடிமைகளாக நடத்தப்படுவதையும் மிகக் கொடுமைகளுக்குள்ளாக்கப்படுவதையும் மோசே கண்டார். மாபெரும் நகரங்களை நிர்மாணிப்பதில் இஸ்ரயேலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். நல்ல உணவோ, சுகாதாரமான குடியிருப்புகளோ, ஓய்வோ இல்லாமல் எபிரேய மக்கள் வாடினர். நேரகாலம் என்றில்லாமல் அதிகாலை முதல் இரவு வரை ஒரே வேலை- வேலை என்று கொடுமைப்படுத்தப்பட்டனர். எவராவது களைத்து விழுந்தால் அவரைச் சவுக்கால் அடித்துத் துன்புறுத்தினர்.

தன் இன மக்களுக்கு இளைக்கப்படும் கொடுமைகள் கண்டு மோசே கலங்கினார். அவர்கள் படும் துன்பங்களைக் கண்டு கொதிப்படைந்தார். வேலை செய்பவர்களை வாட்டி வதைக்காமல் அவர்களையும் மனிதர்களாக மதித்து நடத்தும்படி, வேலைகளை மேற்பார்வையிடும் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். அரச குடும்பத்துப்பிள்ளை கூறுவதைக் கட்டளைபோல் ஏற்று சிலர் எபிரேயரை வருத்தாமல் வேலை வாங்கினர். ஆனால் வேறு சிலரோ மோசேயின் கோரிக்கைகளை நிராகரித்தனர். தங்களுடைய இனத்தவர்களான எகிப்தியர்களுக்கு ஆபத்து சக்தியாக உருப்பெற்று வரும் இஸ்ரயேலர்களுக்கு எந்த விதத்திலும் கருணை காட்டலாகாது என்பது அவர்களுடைய எண்ணம்.

மோசேயின் நடவடிக்கைகளை அவதானித்த பலர் அவர் எபிரேயர் மீது காட்டும் அக்கறையினால் சந்தேகப்படலாயினர். எகிப்தியர்கள் எல்லோருமே எபிரேயர் மீது வெறுப்புக்காட்டும்போது இவர் மட்டும்- அதுவும் எகிப்து நாட்டின் மன்னன் பரம்பரையில் பிறந்து வளர்ந்தவர்- ஏன் எபிரேயர்பால் கருணை காட்ட முற்படுகிறார்- என்று மோசேயைப் பற்றிய உண்மையை அறியத் திட்டமிடுகின்றனர். சிலர் இதற்காகவே ஒரு குழுவினர் மோசேயை அறியாமல் அவரை நிழல்போல் தொடரலாயினர்.

### இராஜகுமாரன்

ஒரு நாள் வழக்கம்போல் எபிரேய அடிமைகள் ஒரு பிரமாண்டமான நகரை நிர்மாணிப்பதைப் பார்வையிடுவதற்காக தனது குதிரை வண்டியிலேறிச் சென்றார் மோசே. வயது முதிர்ந்த ஒரு எபிரேயர் களைத்துச் சுருண்டு விழுகிறார். அந்த முதியவரை மேற்பார்வையிடும் எகிப்தியக் காவலன் ஒருவன் தனது சவுக்கினால் அவரை சரமாரியாக அடித்துத் தாக்கினான். வயோதிபரோ கீழே விழுந்தவர் மீண்டும் எழுந்திருக்க முடியாமல் தவித்துத் துவண்டார். ஆனால் காவலாளியோ தொடர்ந்து சவுக்கினால் அடித்தான். இக் காட்சியைக் கண்டதும் மோசேயின் கண்கள் சிவந்தன. கடும் சினம் அவரையும் அறியாமல் அவரை ஆட்கொண்டது. ஓடிச் சென்று எபிரேய முதியவரை அடித்தவனைத் தள்ளி விட்டதுடன் பல தடவைகள் அடித்து உதைத்தார். அவனுடைய உயிர் பிரிந்தது.

### கொலையைக் கண்ட சாட்சி...

அங்கும் இங்கும் திரும்பிப்பார்த்து விட்டு இறந்த எகிப்தியக் காவலாளியின் உடலை மண்ணைக்கிண்டி அதனுள் போட்டு மூடிவிட்டார். எவருமே தன்னுடைய கொலைச் செயலைக் கண்டுகொள்ளவில்லை என்று மோசே நம்பியிருந்தார். ஆனால் மோசோ அவனைக் கொலை செய்ததனை வேறு சில கண்களும் பார்த்துவிட்டன.

அடுத்த நாள் மோசே எபிரேய அடிமைகள் வேலை செய்யும் அதே இடத்தை மேற்பார்வையிட வந்தார். அப்போது எபிரேயர்கள் இருவர் ஒருவரை மற்றொருவர் தாக்கித் திட்டி சண்டை போட்டனர். தனது குதிரை வண்டியிலிருந்து கீழே குதித்த மோசே, அவர்களிடம் வந்து "ஒரே இனத்தைச் சேர்ந்த நீங்கள் இருவருமே சண்டை போட்டால் மற்ற இனத்தவர் உங்களை மென்மேலும் அடிமைப்படுத்த வாய்ப்பை அளித்துவிடும். ஆகவே சண்டை போடாமல் அமைதியாக- ஒற்றுமையாக வாழுங்கள். நீங்கள் ஒரே தாயின் வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒன்றுபட்டு வாழவில்லையானால் உங்கள் எதிரிகளுக்குத்தான் கொண்டாட்டம். ஆகவே சண்டை சச்சரவுகளைக் கைவிட்டு ஒற்றுமையாக வாழப்பழகிக் கொள்ளுங்கள்," என்று கூறினார்.

சண்டையிட்டவர்களில் ஒருவன் மோசேயின் பக்கம் திரும்பி, "நீர் ஏன் இதில் தலையிடுகிறீர்? நாங்கள் இஸ்ரயேலர்கள். நாங்கள் சண்டை போட்டால் உமக்கு என்ன? எங்களையும் எகிப்தியர் என்று எண்ணி எங்களுடன் மோத வரவேண்டாம். நேற்று எகிப்தியனைக் கொன்று மண்ணில் புதைத்ததைப் போல எங்களையும் கொன்று விடலாம் என்று எண்ணிவிடாதே! உமது வேலையைப் பார்த்துக்கொண்டு உமது வழியே போய்விடும்!" என்று கூறினான்.

இதனைக் கேட்ட மோசே துணுக்குற்றார். 'எகிப்தியரைக் கொன்று புதைத்த கதை வெளியே தெரிந்துவிட்டது. இனிமேல் இங்கு தங்கியிருந்தால் பார்வோனால் எனக்கு ஆபத்து ஏற்படலாம் ஆகவே இங்கு தாமதிக்காமல் எங்காவது ஓடிப் போய் விட வேண்டும்!' என்று எண்ணியவராக அங்கிருந்து புறப்பட்டார்.

இதற்கிடையில் பார்வேனும், நடைபெற்ற சம்பவங்களை அறிந்துகொண்டான். பார்வோனும் மோசே மீது சந்தேகப்பட்டு அவருக்குத் தண்டனை கொடுக்க எண்ணி மோசேயைப் பிடித்து வரும்படி காவலர்களுக்கு கட்டளையிட்டான். பார்வோனின் காவலர்கள் வருமுன்னர் மோசே வெகு தூரம் சென்று விட்டார். சீனாய் பிரதேசத்தைக் கடந்து இறுதியாக மிதியான் நாட்டையடைந்தார்.

### முரடர்களான இடையர்கள்

மிதியான் நாட்டின் எல்லையில் ஒரு கிணற்றில் நீர் அருந்தி விட்டுக் களைப்பாறினார் மோசே. கண்ணயர்ந்த நேரம் பல பெண்கள் சேர்ந்து கலகலப்பாகக் குதூகலமாகக் கொட்டமடித்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கண்விழித்தார். அவர்கள் ஏழுபேர் தங்கள் ஆடுகளுக்கு தண்ணீர் மொண்டு பருக வைத்துக்கொண்டிருந்தனர். இதே வேளை வேறு பல முரட்டுத்தனமான இடையர்கள் அங்குவந்து பெண்களையும் அவர்களுடைய ஆடுகளையும் விரட்டிவிட்டு தாங்கள் மேய்த்துக்கொண்டு வந்த ஆடுகளை முதலில் நீர் பருகவிட்டனர். பெண்கள் வந்து எவ்வளவோ சொல்லியும் முரட்டுத்தனமான இடையர்கள் கேட்கவில்லை. இதனை ஒரு புதருக்கருகிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த மோசே, முரடர்களை நெருங்கி வந்தார். "முதலில் அப்பெண்களின் ஆடுகள் தண்ணீர் பருக வேண்டும், ஏனெனில், அவர்கள்தான் இவ்விடத்துக்கு முதலில் வந்தவர்கள். நீங்கள் பிந்தி வந்தமையால் நீங்கள் உங்கள் ஆடுகளை சற்று தாமதமாக தண்ணீர் பருக வையுங்கள்!" என்றார்.

நீதி நியாயம் தெரியாத இடையர்கள் தங்கள் ஆடுகள்தான் முதலில் தண்ணீர் பருக வேண்டும் என்று அடம்பிடித்தனர். தங்களை தடுத்தால் தாங்கள் அனைவரும் சேர்ந்து மோசேயைத் தாக்கப்போவதாக எச்சரித்தனர். மோசே வெகுண்டெழுந்து இடையர்களில் தலைவனாகத் தென்பட்டவனின் முகத்தில் தனது வலது கையால் ஒரு குத்து விட்டார். அவன் அடியற்ற மரம் போல் கீழே சாய்ந்ததைக்கண்ட ஏனையோர் அஞ்சி ஒதுங்கி அப்பால் சென்றுவிட்டனர். பெண்கள் ஏழுபேரும் மோசேயின் அருகில் வந்து அதிசயமாகப் பார்த்தனர், பின்னர் தங்கள் ஆட்டு மந்தைகளை தண்ணீர்த் தொட்டி அருகில் கொண்டு வந்து நீர் பருக வைத்தனர். தண்ணீர் பருகியதும் அவர்கள் மந்தைகளைச் சாய்த்துக் கொண்டு மோசேயை நன்றியறிதலுடன் பார்த்துச் சிரித்த வண்ணம் புறப்பட்டனர்.

பெண்களில் மூத்தவளாக இருக்கலாம் என்று கருதியவளை மோசே அருகில் அழைத்து அவர்கள் யாரென்று விசாரித்தார். அப்பெண்ணும் மோசே யார் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை ⑨ விடை:** ☛ 147 வயது.

**பரிசு பெறுவோர்:**

1. செல்வி. மேரி சுபாஷினி செபஸ்டியன், 'இராணி மகால்', திகனை.
2. **எம்.எஸ்.எம். சியாம்,** 45, ராகுல வீதி, மாத்தறை.
3. **எம்.ஏ.எஸ். நஸ்லீனா,** 174, நுவரெலியா வீதி, ஹாலி-எல. 90060.
4. **ஏ. ஜேசுதாஸ் (சசீலன்),** கன்னியா வீதி, திருகோணமலை.
5. டோ. கோபிகா ஷாலினி, 12, சென் அன்ரனிஸ் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.

**திருமறை 11 வினா:-** மோசே எந்த நாட்டுக்குச் சென்றார்?

ஜூன் 06க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 11 — தினமுரசு வாரமலர், த.பெ.இல— 1772, கொழும்பு.**

---

## வாள் ஏந்தத் தயாரா?



சங்கிலியன் படை என்று பெயர் வைத்திருக்கிறார்கள். பின்னர் ஏன் துப்பாக்கி வைத்திருக்கிறார்கள்? சங்கிலியன் என்ன ரி.56 துப்பாக்கி ஏந்தியா போராடினார்?

நாங்கள் அகிம்சைவாதிகள், வேண்டுமானால் வாளேந்தத் தயாராக இருக்கிறோம். சங்கிலியன் மேல் உண்மையான பாசம் இருந்தால், சங்கிலியன் படை, சங்கிலியன் பாணியில் வாளேந்தி வரட்டும். வில்லேந்தி வரட்டும். துப்பாக்கி முனையில் சந்திக்க எங்கள் பாதுகாவலர்கள் தயாராக இருக்கிறார்கள்.

இவ்வாறு கடுமையான ஜனநாயக வழியில் செயற்படும் தமிழ்க் கட்சிகள் சவால் விட்டுள்ளன.

## வாலை விடத் தயாரா?

தமிழ்க் கட்சிகள் விடுத்த சவாலை சங்கிலியன் படை நேற்று ஏற்றுக்கொண்டது. இதுபற்றி எமது நிருபரிடம் சங்கிலியன் படைப் பேச்சாளர் பிரஸ்தாபிக்கையில் கூறியதாவது:

"பதவி ஆசையால் இக் கட்சிகள் பிடித்துக் கொண்டிருப்பது அரசின் வால்!

போர்க்குணத்தோடு இக் கட்சிகள் உயர்த்திப் பிடிக்குமா வாள்?

வால் பிடிக்கும் கரங்கள் வாள் பிடித்தால், நாமும் வாள் ஏந்தி மோதத் தயாராக இருக்கிறோம்."

மேற்கண்டவாறு பதில் சவால் விட்டுள்ளது சங்கிலியன்படை.

## தமிழ்க் கட்சி மறுப்பு



"எங்கள் உள்ளூராட்சிச் சபை உறுப்பினர் ஒருவரை சுட்டதாக சங்கிலியன் படை உரிமை கோரியுள்ளது. இதனையடுத்து மக்கள் எம்மை துரோகிகளாக பார்க்கக்கூடும் என்பது ஒருபுறமிருக்க, எங்கள் உறுப்பினர்களது தூய ஜனநாயக உணர்ச்சிகளும் மழுங்கடிக்கப்படுகின்றன. எனவே, 'சங்கிலியன் படை'யினர் தாம் உரிமை கோரியதை முன்னர்போல மறுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்! 'சங்கிலியன் படை' மறுப்பு அறிக்கை விடமறுத்தாலும், அவர்கள் உரிமை கோரியதை எம்மால் ஏற்கமுடியாது என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்கிறோம்."

## உண்மைதான், ஆனால்...



சுடுவோம் என்று எச்சரித்தார்கள் உண்மைதான். மறுக்கவில்லை.

பதவி விலகுமாறு எச்சரித்தார்கள். உண்மைதான். மறுக்கவில்லை.

இறுதி எச்சரிக்கை என்றும் கூறினார்கள். காதில் விழுந்தது, உண்மைதான், மறுக்கவில்லை.

ஆனால் சொன்னதைச் செய்வார்கள் என்று எண்ணவில்லை, ஏனெனில் நாங்களும் தான் எத்தனையோ சொல்லுகிறோம். ஒரு நாளாவது சொன்னதை செய்திருக்கிறோமோ?

## தூதர் நிலை கவலைக்கிடம்

"இந்தியா அணுக்குண்டு செய்வதை நாம் எதிர்க்காவிட்டாலும், அணுக்குண்டை நாம் விரும்பவில்லை. அதற்காக இந்தியாவை நாம் குறைகூறவில்லையென்றாலும், அணுக்குண்டுகள் கூடாது என்பதே எமது கொள்கை என்பதால், இந்தியா அணுக்குண்டு செய்ததை நாம் வரவேற்கவில்லை. அதேசமயம், இந்தியாமீது தடை விதிப்பதையும் நாம் ஆதரிக்கவில்லை, அதற்காக தடையை நாம் எதிர்க்கிறோம் என்று அர்த்தமல்ல, அதேசமயம் தடைகளால் பயனில்லை, பிரச்சனைகள் தீராது என்பதை இந்தச் சின்ன நாட்டில் பற்பல தடைகளை போட்டு போட்டு அனுபவம் கண்டவர்கள் என்ற வகையில் கூறுகிறோமேயல்லாமல், தடை கூடாது என்றோ தடைக்கு எதிராகவோ, கண்டனக் குரல் கொடுக்கவில்லை...."

மேற்கண்ட விளக்கத்தை அமைச்சர் கூறிக்கொண்டிருக்கையில் அமெரிக்கத் தூதருக்கு நான்கு தடவைகள் தலைச்சுற்றல் ஏற்பட்டதாக தூதரக மருத்துவ வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனை அறிந்த பாகிஸ்தான் மற்றும் இந்தியத் தூதர்கள் அமைச்சரின் விளக்கத்தைக் கேட்கப் பயந்து தலைமறைவாகி விட்டதாகவும், தகுந்த மருத்துவரை அருகில் வைத்துக்கொண்டே சந்திக்க உள்ளதாகவும் நம்பப்படுகிறது.

## பயோடேட்டா



| | |
|---|---|
| பெயர் | : சங்கிலியன் படை. |
| பிறப்பு | : யாழ் உள்ளூராட்சித் தேர்தல் காலம். |
| முகவரி | : யாழ்ப்பாணம். |
| தொழில் | : வேட்டையாடுதல். |
| நண்பர்கள் | : தமிழ்க் கட்சிகளல்ல. |
| எதிரிகள் | : எச்சரித்தும் கேளாதவர்கள். |
| சாதனை | : குறுகிய காலத்தில் பிரபலம். |
| சோதனை | : உரிமை கோரிப் பின் மறுத்தது. |
| நம்புவது | : தற்போதைக்கு ரி.56., பழைய தட்டச்சுப்பொறி. |
| நம்பாதது | : நவீன அச்சு இயந்திரங்களை. |
| ஒரே இலட்சியம் | : ஒழித்தல். |
| உபாயம் | : ஒளித்திருத்தல். |

யாவும் கற்பனை

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331




## பெரும் பூனை

நமது வீடுகளில் வளர்க்கப்படும் சாதாரண பூனைபோன்று பார்வைக்குத் தோற்றமளிக்கும் இவ்விலங்கு சாதாரண பூனையல்ல! காட்டுப்பூனை.

நம் நாட்டில் இதனைக் காணமுடியாது.தென்கனடா மற்றும் மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் காணப்படும்.

நெடிய கால்களையும் குட்டையான வாலையும் கொண்டவை. மிகப் பயங்கரமானவை. இவை முயல்கள், பறவைகள், பெரிய மூஞ்சுறு மற்றும் அணில்களைக் கண்டால் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து பிடித்து ஒரே மூச்சில் சாப்பிட்டுவிடும்.

மரப்பு தர்கள், பாறைகளி லுள்ள இடைவெளிகள், சிறுகுகைகள் ஆகியவற்றில் வாசம் செய்யும் இப்பூனைகள் பகலில் ஓய்வாக இருந்துவிட்டு இரவானதும் வேட்டையாடப் புறப்பட்டுவிடும். இப்பூனைகள் பெரும்பாலும் 11 கிலோ எடை கொண்டதாகவும் 115 சென்றி மீற்றர் நீளமுடையாகவும் இருக்கும்.

குளிர் காலத்தில் ஆண் பெண் உறவு கொண்டு 65 நாட்கள் வரை கருவைச் சுமந்த பெண் பூனை மூன்று குட்டிகளுக்கு மேல் ஒரே தடவையில் ஈனுவதில்லை. பூனை என்றால் பயந்தாங்கொல்லி என்றும் கருதுவதுண்டு. இந்தப் பூனையிடம் மாட்டினால் தெரியும் சங்கதி. புலிக்கு நிகரான பூனை இது.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


## பாம்...



மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்காவின் வெப்ப வலையப் பிரதேசம் மற்றும் 'ரினிடாட் ஆகிய நாடுகளில் காணப்படும் மிகப் பயங்கரமான விஷப் பாம்பு இது. இது விரியன் இனத்தைச் சேர்ந்தது.

தொலைவிலிருந்து பார்த்தால், சுருண்டு படுத்திருக்கும் தோற்றம் தங்கப் பாறையோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும்.

மூன்றரை மீட்டர் நீளம்வரை வளரக் கூடிய இப்பாம்பின் முகத்தோற்றம் விசித்திரமாக இருக்கும். இவற்றின் கண்களுக்கும் மூக்குக்குமிடையில் ஒரு பள்ளம் தென்படும்.

இவை ஒரே தடவையில் 10 முட்டைகளை இடும். இவை கோழி முட்டைகளைவிட சற்றுப் பெரியதாக வெள்ளையாக இருக்கும். இவற்றைப் பிடித்து வைத்திருக்க முடியாது என்பதனால் மிருக்கக் காட்சிச் சாலைகளில் இவ்றறைக் காண முடியாது. பிடித்து வைத்தால் உணவு எதுவும் உட்கொள்ளாமல் 'சத்தியாக்கிரகம்' செய்தே இறந்துவிடும். ரொம்பவும் ரோசக்காரப் பாம்பு.

## உற்பத்தி

பிரேஸில் தென் அமெரிக்காவில்-பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் கூடிய நாடு. வளங்கள் பல கொண்ட இந்நாடு உலகின் ஏனைய முன்னணி நாடுகளுடன் போட்டி போடும் அளவு முன்னேறி வருகிறது.


சவோ பௌலோ என்ற நகரம் 1,500 சதுரகிலோமீட்டர் பரப்பளவு கொண்ட நவீன நகரம். பிரேஸில் நாட்டின் பிரதான வர்த்தக மற்றும் கைத்தொழில் கேந்திர நகரமும் அதுதான். 70 இலட்சம் மக்கள் இந்நகரில் வாழ்கின்றனர்.

இந்நாட்டின் மற்றுமொரு பிரதான நகரம் ரியோடி ஜனேரோ இங்கு 50 இலட்சம் பேர் வாழ்கின்றனர். சவோ பௌலோ நகரில் வளர்ந்துவரும் தொழில்களில் மோட்டார் கார் உற்பத்தியும் ஒன்றாகும்.

இங்குள்ள ஒரு தொழிற்சாலையில் மோட்டார் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுவதைப் படம் காட்டுகிறது. இப்படியே கார்கள் உற்பத்தி பெருகிக்கொண்டே போனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படத்தானே செய்யும். வருங்கால போக்குவரத்தின் கதி என்னாகுமோ?!



## தங்கக் கோட்டை



பெரிய பெரிய கோட்டைகளை வடிவமைப்பதைவிட, அக் கோட்டைகள் போன்ற மாதிரி வடிவங்களை சின்ன அளவுகளில் வடிவமைப்பது மகா மகா கடினம். படத்தில் இருப்பது தங்கம், வெள்ளி மற்றும் பச்சைக்கல் கொண்டு உருவாக்கப்பட்ட தங்கக் கோட்டை. விலை உயர்ந்த கலைப்பொருள். வில்லியம் ரொலிடே என்னும் கலைஞரால் உருவாக்கப்பட்டது.

இலண்டனில் உள்ள 'கரார்ட்' நகை மாளிகையில் இவ்வாறான கலைப்பொருட்களை வாங்கலாம். ஒரே ஒரு நிபந்தனை, கட்டுக்கட்டாக பணம் இருக்கவேண்டும். 1723 முதல் இந்த நகை மாளிகை இயங்கிவருகிறது.

## ஒத்திகை




நவீன யுகத்தில் உலக நாடுகளை ஒன்றிணைக்க ஒலியைவிட வேகமாகப் பயணம் செய்யும் சுப்பர் சோனிக் மற்றும் கொன்கோட் விமானங்கள் வந்து விட்டன. ஆனாலும் ரயில் பிரயாணங்களுக்குள்ள மவுசு குறைந்தபாடில்லை.

நீராவியின் உதவியுடன் இயங்கும் ரயிலை முதன் முதலில் 1814ம் ஆண்டு ஜோர்ஜ் ஸ்ரிஃபன்சன் கண்டுபிடித்தார். அவரைத் தொடர்ந்து அந்தப் போக்குவரத்துச் சாதனைத்துக்குப் புதுப்பொலிவும் புதுமுறை மாற்றங்களும் வந்துவிட்டன.

இப்பொழுது கடுகதி வேகத்தில்-பறந்து செல்லும் மின்சார ரயில்களும் வந்துவிட்டன. அமெரிக்காவில் முதன் முதலில் நீராவியினால் இயங்கும் அதிவேக ரயிலை உருவாக்கியவர் மத்தியாஸ் வில்லியம் பால்ட்வின் என்பவர். கறுப்பினத்தவரான இவர் 1830ல் இந்த இயந்திரத்தை பழைய இரும்பு மரப்பலகை ஆகியவற்றைக் கொண்டு உற்பத்தி செய்தார்.

இந்த ரயில் வண்டி 5.4 மெட்றிக் தொன் எடை கொண்டது. மொத்தம் 27 மெட்றிக் தொன் எடைகொண்ட பொருட்களை மணிக்கு 45 கிலோமீட்டர் வேகத்தில் இழுத்துச் செல்லக்கூடியது.

பெரிய காரியத்தில் இறங்க முன்னர் ஒத்திகை பார்ப்பது அவசியம்தானே. முதன் முதலில் பால்ட்வின் மாதிரி வடிவமாக செய்து ஒத்திகை பார்த்த ரயில் வண்டிதான் படத்தில் உள்ளது. சிக்கு புக்கு சிக்கு புக்கு ரயிலு. இன்றைய ஜிலு ஜிலு ரயில் வண்டிகளின் அப்பனுக்கெல்லாம் அப்பன்.



## வர்ணக் கோயில்

கிறிஸ்துவுக்கு முன் மூவாயிரம் ஆண்டளவில் மத்திய ஆசியாவிலிருந்து வந்து குடியேறியவர்களால் உருவான நாடு பர்மா.

எப்போதுமே உள்நாட்டு பூசல்கள் தலைவிரித்தாடிக்கொண்டே இருக்கும். 1989 முதல் மியன்மார் என்று அழைக்கப்படுகிறது பர்மா. தலைநகரான ரங்கூன் யங்கோன் என்று மாறியது.

மியன்மாரில் உள்ள மிகப்பெரியதும், மிக அழகானதுமான பௌத்த ஆலயமே இதுவாகும்.

இதனை சுவே டகோன் பாயா என்றும், சுருக்கமாக 'பகோடா' என்றும் அழைக்கிறார்கள். தங்க ஆலயம் என்று அர்த்தம்.

இந்த ஆலயத்தில் சயன நிலையில் உள்ள புத்தபகவானின் மிகப்பெரிய சிலை ஒன்றுள்ளது. இங்கு செல்லும் பக்தர்கள் பலர் தங்க ரேக்குகளை (தங்கத்தாலான மிக மென்மையான தாள்) எடுத்துச் சென்று சிலையில் ஒட்டிவிடுவார்கள். இங்கு பூக்கள் விற்பது மாதிரி தங்கரேக்குகளும் அங்கு கோயிலின் முன்றலில் விற்கப்படுகின்றன

## பிறந்தநாள் வாழ்த்து



### காயத்ரி (04.05.1998)

சந்திரன்-வனிதா தம்பதியினரின் மூத்தமகள் **காயத்ரி** தனது பிறந்தநாளை 04.05.1998 அன்று கொழும்பில் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, உற்றார் உறவினர்கள், நண்பர்கள் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.



இப்பத்திரிகை கொழும்பு ... 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, ... மே 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.